# கல்கி

KALKI
31.12.95
ரூ. 3.00





# இணையற்ற பாதுகாப்பு

உங்கள் முதலீட்டிற்கு
பூரண பாதுகாப்பை அளிக்கும் நிறுவனம்

**ஸ்வர்ணதாரா கிரெடிட்**
**கார்ப்பரேஷன் லிமிடெட்.**

வலுவான முதலீடுகளுடன் பணிவான
சேவையையும் ஸ்வர்ணதாரா அளிக்கிறது.
வட்டியையும் உடனுக்குடன் பின் தேதியிட்ட
காசோலைகளாக முன்னதாகவே வழங்குகிறது.
எங்கள் டெபாசிட் திட்டங்களில்
சேர்ந்து பயனடையுங்கள்!

**உங்கள் முதலீட்டிற்கு**
**15% வருட வட்டியை வழங்குகிறது.**

உங்கள் வளர்ச்சிக்கான வழி
ஸ்வர்ணதாராவின் டெபாசிட் திட்டங்கள்.

**தலைவர்: P.G. சரண்யன்,**
(முன்னாள் தலைவர் கரூர் வைஸ்யா பாங்க் லிட்.)

SCL **Swarnadhara Credit Corporation Ltd.**

பதிவு அலுவலகம்: அனுராக், 7-A, முர்ரேஸ் கேட் ரோடு,
ஆழ்வார்பேட்டை, சென்னை – 600 018. போன்: 4991536.

**கிளைகள்:**

- அறை எண்: 32, முதல் மாடி, "TNHB - அண்ணா நகர் பிளாஸா",
  C - 47, 2ஆம் அவென்யூ, **அண்ணா நகர்**, சென்னை 40.
- எண்:50, வெங்கடகிருஷ்ண அய்யர் ரோடு, **மந்தைவெளி**,
  (ஸ்டேட் பாங்க் ஆப் இண்டியா எதிரில்), சென்னை 28.
- எண்:38-8-42, ஒயிட் ஹவுஸ், பந்தர் ரோடு,
  **விஜயவாடா**. போன்: 475865.

• பிக்சட் டெபாசிட் • குமுலேட்டிவ் டெபாசிட்
• ரெக்கரிங் டெபாசிட்

AKSHAR



# நிழல் தேடும் குடையாளர்கள்!




"ஜெயலலிதா அவர்கள் முதல்வராக வந்த பின்தான் தமிழ் நாட்டில் பல கோயில்களுக்கு விடிவு காலம் வந்திருக்கிறது. நிறைய விழாக்கள், கும்பாபி ஷேகங்கள் நடக்கின்றன. எங் களுக்கும் வேலை, வருமானம் தொடர்ந்து இருந்து வருகிறது..." – இப்படி சந்தோஷப்படுபவர் தசரத சா. சென்னை, சிந்தாதிரிப்பேட் டைக்காரார்!

சின்ன தறிப் பேட்டை - சிந்தாதிரிப் பேட்டையின் 'ஒரிஜினல்' பெயர் இதுதான். காலால் ஓட்டக்கூடிய சின்ன தறிகள் போட்டு அவற்றில் பணியாற்றும் நெசவாளர்கள் வசித்ததால் அப்பெயர்.

இன்னமும் இங்குதான் வாழ்கிறார்கள் 'கத்ரிகள்' என்று அழைக்கப்படும் நெசவாளர் குடும்பத்தினர். நெசவு வேலைகள் அனேகமாக நின்று போய் விட, கோவில்களுக்கான அத்தனை அலங்காரப் பொருட்களையும் - குறிப்பாகக் குடைகளை - உருவாக்குபவர்கள் இந்தக் கலைஞர்கள்.

சத்ரபதி சிவாஜி காலத்தில் முகலாயர்களுக்கு அஞ்சிய அவரது வம்சத்தவர் சிலர் தெற்கே வந்து சேர்ந்தார்கள்.



• தசரத சா



• நாராயண சா

ஹைதராபாத், ஹூப்ளி, பெங்களூர், காஞ்சிபுரம், சென்னை என்று பல ஊர்களைத் தேடி வந்த இவர்கள்தான் 'கத்ரி'கள்.

"உண்மையில் எங்களுக்கு 'ஷத்ரியர்' என்றுதான் பெயர். ஆனால் அப்படிக் குறிப்பிட்டால் ஆபத்து வரும் என்பதற்காகக் கையில் நூலும் கத்திரியும் கொடுத்து 'கத்ரி'கள் என்ற புதுப் பெயருடன் எங்களைத் தெற்கே அனுப்பினார் சிவாஜி" என்கிறார் நாராயண சா (Sah).

சென்னையில் உள்ள சுமார் இருநூறு கத்ரி குடும்பங்கள்தான் தென்னாடு முழுவதிலும் உள்ள கோயில்களுக்கெல்லாம் குடைகளும் முத்தங்கி, பட்டு, பவித்ரம், கிரீடம், திண்டு, ஆலவட்டம் முதலிய அலங்காரப் பொருட்களும் செய்து தருகின்றன.

சினிமா ஷூட்டிங்குக்குக் கூட குடை சப்ளை செய்கிறார்கள்! - முத்து படத்தில் குலுவாலிலே பாடல் காட்சியை நினைவுபடுத்திப் பாருங்கள்...!

'புஜ ஷத்திரிய கத்ரி சமாஜ்' என்ற அமைப்பின் கீழ் இவர்கள் ஒன்றுபட்டிருக்கிறார்கள். சமாஜின் தலைவர் தசரத சா.

"நான்கரை அடி விட்டமுள்ள ஒரு குடை செய்வதற்கு ஒரு நாள் ஆகும். 28 மூங்கில் பத்தைகளை வெட்டி, சீவி, பல்லெடுத்து, வேப்பெண்ணெய் தடவிப் பதப்படுத்தி வெயிலில் வைக்க வேண்டும். பிறகு அவற்றை வட்ட வடிவத்தில் கயிறுகளால் இணைப்போம். இதைக் 'கட்டடம் கட்டுதல்' என்று சொல்வது வழக்கம். மேல்புறம் 'டிரில்' துணி போட்டுத் தைத்து அடிப்புறம் வெண்பட்டால் மூடி, கலசமும் காம்பும் (கைப்பிடி) வைத்து சிவப்பு நூலால் சுற்றிலும் வைத்து, 'கலர் ஜாலர்' என்ற வேலைப்பாட்டைச் செய்து முடித்தால் குடை தயார்..." என்கிறார் தசரத சா.

ஆயிரம் ரூபாய் விலை என்றாலும் குடை செய்து சம்பாதிக்கும் பணம் கைக்கும் வாய்க்கும் சரியாகப் போகிறது என்பது இந்தச் சமூகத்தினரின் குறை.

"கைவிட்டு முன்பணம் போட்டுத்தான் பொருள்கள் வாங்க வேண்டியிருக்கிறது என்பதால் ரொம்ப கஷ்டப்படுகிறோம்" என்கிறார்.

வங்கிகள் கடன் தருவதில்லையாம்.

திருப்பதி தேவஸ்தானம், இலங்கை, ஆஸ்திரேலியா, மலேஷியா, சிங்கப்பூர் கோயில்களுக்குக் கூட இந்தக் குடைகள் போகின்றன.

நோன்புக் கயிறு செய்வதிலும் இக் குலத்தவர் நிபுணர்கள். நாராயண சாவின் மகன்கள் ஜரிகை மாலை, சந்தன மாலை போன்றவற்றைச் செய்து விற்கிறார்கள்.

இந்தியா முழுவதிலுமாகச் சுமார் ஒரு லட்சம் கத்ரி குடும்பத்தினர் உள்ளனர்... இருந்தாலும் கோயில்களுக்குக் குடைகள் முதலானவற்றைச் செய்து தரும் பெருமை நமது சிந்தாதிரிப்பேட்டை கத்ரிகளுக்கு மட்டுமே...!

"இப்போதுள்ள பையன்கள், பெண்களுக்குப் பொறுமை போதவில்லை; அதனால் அவர்கள் இதில் அவ்வளவாக ஈடுபடுவதில்லை..." என்கிறார் தசரதசாவின் மனைவி சாலம்மா.

ஒரு குடை நிழலில் இந்தக் கலைஞர்களை ஒருங்கிணைத்து, கொஞ்சம் ஆதரவும் ஊக்கமும் அளித்தால் ஓர் அரிய கலையை அழிய விடாமல் முறைப்படுத்திக் காப்பாற்றி விடலாம்...!

**- ப்ரியன்**

படங்கள் : **யோகா**

# பார்க் டவுன்
## பெனிபிட் பண்ட் லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம், துவக்கம் 1985 Post Box No: 2806
223, தங்க சாலை, (கந்த கோட்டம் அருகில்) பார்க் டவுன், சென்னை-3 போன்: 582676, 564354

கிளை அலுவலகங்கள்:
2 கிழக்கு மாடவீதி, திருவான்மியூர், சென்னை-41 போன் 413582, 416417
P-995,இரண்டாவது அவென்யு, 12-வது மெயின்ரோடு ஜங்ஷன், அண்ணாநகர், சென்னை-40 போன் 6262656, 6280750



### பிக்சட் டிபாசிட்

| 46 நாள் | 90 நாள் | 6 மாதம் | 1 ஆண்டு | 2 ஆண்டு | 3 ஆண்டு | 4 ஆண்டு | 5 ஆண்டு * |
|---|---|---|---|---|---|---|---|
| 13% | 14% | 15% | 17% | 18% | 18.5% | 19% | 20% |

**21%** 5 வருடங்கள் ரூ.50,000/- அதற்கு மேலும்

### PB பாண்டு

| முதலீடு | காலம் | திரும்பப் பெறும்தொகை |
|---|---|---|
| ரூ.25,000 | 60 மாதம் | ரூ.70,000 |

### குழந்தைகள் கல்வி நலத்திட்டம்

L.K.G. முதல் கல்லூரி தொடக்கம் வரை

வைப்புத் தொகை ரூ. 5,100/-

3-ஆம் ஆண்டு நிறைவிலிருந்து தொடர்ந்து 12 ஆண்டுகள் ரூ.500/- பெறலாம். திட்ட டெபாசிட் காலத்திலிருந்து 16, 17-வது ஆண்டுகளில் தலா ரூ.1,000/- வீதமும், 18-ம் ஆண்டு துவக்கத்தில் ரூ.75,000/-ம் வழங்கப்படும்.

நலத்திட்டத்தின் 5% மாணவர்களுக்கு +2 அரசுத் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் ரூ.25,000/- பரிசாக ஒவ்வொருவருக்கும் நிதி நிறுவனம் வழங்கும்.

திட்டத்தின்பயனை உங்கள் மழலைச் செல்வங்களுக்கு வழங்கி மன நிம்மதி பெறுவீர்! மகிழ்ச்சி அடைவீர்!!

### கனகதாரா டிபாசிட்

ரூ.50,000/-
முதலீடு செய்வீர்
10ஆம் ஆண்டு முடிவில்
ரூ.50,000/- பெறுவீர்
அடுத்த 20ஆம் ஆண்டு
முடிவில்
ரூ.1 கோடி பெறுவீர்

### காமதேனு மாபெரும் திரும்பப் பெறும் திட்டம்

| டிபாசிட்திட்டம் 15 ஆண்டுகள் | 5-ம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை | 10ம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை | 15ம் ஆண்டு பெறும் தொகை |
|---|---|---|---|
| Rs.6,320 | Rs.6,000 | Rs.6,000 | Rs.56,320 |

### வெகுமதி முதலீட்டுத் திட்டம் - II

ரூ.3450/- செலுத்துவீர்.
252 மாதங்கள் நிறைவில்
ரூ.2 லட்சம் பெறுவீர்.

**சேமிப்பு திட்டம் 10% P.a.**

### செல்வக்களஞ்சியம்

| டிபாசிட் | காலம் | வருவாய் |
|---|---|---|
| Rs.7,500 | 15 Yrs | Rs.1,25,000 |
| Rs.9,000 | 15 Yrs | Rs.1,50,000 |

### பொற்குவியல் திட்டம்

| டிபாசிட் | காலம் | வருவாய் |
|---|---|---|
| மாதா மாதம் ரூ.100/- | 25 Yrs | Rs.3,00,000 |

### மறு முதலீட்டுத் திட்டம்

உங்கள் தொகை 45 மாதங்களில் இரட்டிப்பு ஆகும்

| டிபாசிட் | 12 மாதம் | 24 மாதம் | 45 மாதம் | 60 மாதம் |
|---|---|---|---|---|
| Rs.1,000 | Rs.1,184 | Rs.1,430 | Rs.2,000 | Rs.2,535 |



**பென்ஷனர் நலத்திட்டம் 20% P.a.**
ரூபாய் 10 ஆயிரமும் அதற்கு மேலும்: காலம் 1 ஆண்டு
வயோதிகர், விதவைகள், பணமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.

**தங்க நகை கடன்**
Rs. 3,000 PER 10 GRAM
வீடுகளின் பேரில் கடன் வழங்கப்படும்.
(உச்ச வரம்பில்லை)

நிர்வாக இயங்குனர் :
**P. பாலசுப்ரமணியம், B.Sc.**
முதன்மை அறங்காவலர்
கந்தகோட்டம், சென்னை - 3.

இயக்குனர் குழுத் தலைவர்:
**R. விவேகானந்தன், B.Com.**

☐ ரூ. 5/- செலுத்தி பங்குதாரர் ஆவீர். ☐ சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டும் ☐ வெள்ளி விடுமுறை

# கையைக் கடிக்கும் காலணிகள்!





இரண்டாயிரம், மூவாயிரம் ரூபாய் கொடுத்துக் கூட ஷூ வாங்க மக்கள் இன்று தயார்!

"முன்பெல்லாம் தேவைக்கு ஏற்ப செருப்பு வாங்குவார்கள். இன்று ஆடைக்கு ஏற்ப!" - இது 'பாட்டா'வின் சென்னை மாவட்ட மேலாளர் பி.எஸ். ராவின் வாக்குமூலம்!

கட்டைச் செருப்பு, ஹவாய் அதைவிட்டால், ஸாண்டாக் அல்லது தோல் செருப்பு என்று அளவுச் சாப்பாடு போல் இருந்த காலம் மலையேறி, இன்று காலணி உலகில் கணக்கில் அடங்கா மாடல்கள்!

டீன்-ஏஜ் தேவ-தேவதைகள் மட்டுமின்றி, எல்லா வயதினருக்கும் ஷூ மோகம் அதிகரித்துத்தான் இருக்கிறது என்கிறார்கள் விற்பனையாளர்கள்.

கல்லூரி மாணவர்கள் மத்தியில் இன்று அதிகம் புழங்குவது, அச்சு அசல் ஸ்போர்ட்ஸ் ஷூ மாதிரியே காட்சி தரும் 'ஸ்நீக்கர்' வகையறா.

ஸ்போர்ட்ஸ் ஷூவுக்கும் இதற்கும் உள்ள வேறுபாடு ஒன்றே ஒன்றுதான். - ஆனால் முக்கியமான வேறுபாடு! விஞ்ஞான முறைப்படி காற்று புக துவாரங்கள் இருக்கும் ஸ்போர்ட்ஸ் ஷூவில்; ஸ்நீக்கரில் அது இல்லை!

'அணிபவருக்கு கம்பீரமான 'லுக்' தருவதுடன் நடக்க, ஓட, பைக் உதைக்கவும் வசதி. ஆதலால் கல்லூரிக் கன்னியருக்கும் இன்று 'ஸ்நீக்கர்' மேல் காதல் வந்திருக்கிறது.

ஆனால், "ஜீன்ஸ் அணியும் போது மட்டுமே அது லாயக்கு" என்கிறார்கள்.

மற்றபடி புடைவைக்கு? சுரிதாருக்கு? சல்வாருக்கு? தாவணிக்கு?

எந்த உடைக்கும் பொருத்தமான காலணி 'ஸ்லிப் ஆன்'தான் என்று ஸ்பீக்கர் இல்லாத குறையாக அலறி, குரல் வோட்டுப் போடுகிறார்கள்.

அதென்ன ஸ்லிப் ஆன்? மிட்-ஆன் மாதிரி....?

புரியும்படியான பெயர் வேணுமென்றால் இதனை கட்-ஷூ எனலாம். லேஸ், பக்கிள்ஸ் என்று எந்த ரப்சரும் இன்றி கேஷுவலாகக் காலை நுழைத்து, போய்க் கொண்டே....டே இருக்கலாம்.

பஸ், ரயில் பிடிப்பது போன்ற அவசர சமயங்களில் கூட, காலை வாரி விடாது!

கனமில்லாத, பல கலர்களில், சில நூறு ரூபாய்களிலிருந்து சில ஆயிரங்கள் வரையிலான விலைகளில் இந்த 'ஸ்லிப்-ஆன்'கள் கிடைக்கின்றன.

வளைந்து கொடுக்கும் தன்மை (உடைந்து கொடுக்கும் அல்ல.) ஷூவுக்கு ரொம்ப முக்கியம். அதற்காகவே மெனக்கெட்டு, பாலி வினைல் காம்பவுண்டு, பாலியூரிதைன் காம்பவுண்டு என்ற இருவித கலவைகளைக் கொண்டே இன்றைய ஷூக்கள் தயாரிக்கப்படுகின்றன என்ற தகவலைச் சொன்னார் 'பாட்டா' ரால்.

இன்றைய தேதியில் பாட்டாவுக்குப் போட்டியாகக் களத்தில் குதித்து, கலக்கிக் கொண்டிருப்





• சுபாஷ் வர்மா



• திருநாவுக்கரசு

பவர்கள் மெஸ்கோஸ் (MESCOS) காரர்கள். ஜெர்மன் கொலாபரேஷனுடன் இவர்கள் தயாரிக்கும் ராம்போ, டஸ்டின், டைஸன், வில்லீஸ், ஸெய்லர், டீன்டீ போன்ற மாடல் ஷூக்களை, கல்லூரி மச்சிகள் அள்ளிக் கொண்டு போகிறார்களாம்.

மெஸ்கோஸின் அடையாறு ஷோரூம் மானேஜர் திருநாவுக்கரசிடம் பேசியபோது சில ஆச்சர்யங்களைச் சொன்னார்.

"மெஸ்கோஸ் தயாரிப்புகளில் 1200 ரூபாய்க்குக் குறைந்து எந்த ஷூவும் கிடையாது. (ஆண்களுக்கு) ஆனாலும் யாரும் தயங்குவதில்லை. கனையாக 1500 ரூபாய் கொடுத்து ஷூ வாங்கிப் போகும் ஆட்டோ டிரைவர்கள் கூட இருக்கிறார்கள்!'' என்றார்.

"தவிர, இன்றைக்கு ஷூ என்பது வெறும் காலணியாக மட்டுமின்றி அலங்காரப் பொருள் வரிசையில் சேர்ந்து விட்டது. ஒரு தரம் அதிக விலை கொடுத்து வாங்கி விட்டால் இரண்டு, மூன்று வருஷங்களுக்குக் கவலை இல்லையே?"

பெண்களுக்கான ஷூக்கள் தயாரிப்பில், மெஸ்கோஸ் கொஞ்சம் கூடுதல் கலை உணர்வோடு செயல்பட்டிருப்பதைக் காண முடிந்தது. அங்கிங்கெனாதபடி எங்கும் கிடைக்கிற 'ஸ்லிப்-ஆன்' மாடல்களில் பலப்பல வண்ணங்களும் விதங்களும் நவீனங்களுமாக அசத்தியிருக்கிறார்கள். (ரூபா முந்நூறிலிருந்து எண்ணூறு வரைக்கும் வெரைட்டி இருக்கிறது!)

'மோனலிஸா' என்கிற மாடலையும், 'பியோனா' என்கிற மிக மென்மையான மாடலையும் இளம் பெண்கள் வெகு விரும்புவதாகச் சொன்னார் திருநாவுக்கரசு. (காண்க கலர்ப்படம்)

வாட்டர் ப்ரூஃப் ஷூக்கள், மைக்ரோ செல்லுலர் ரப்பர் பாட்டம் ஷூக்கள் என்று மார்க்கெட்டில் பலப்பல விதங்கள் வந்து விட்டன.

''அமெரிக்கக் கூட்டுறவுடன் K-SWISS என்றொரு மாடல் இறக்கியிருக்கிறோம் (ரூ. 2000-) பாருங்கள். இன்னும் கொஞ்ச நாளில் அள்ளிக் கொண்டு போய்விடும் அது!'' என்றார் திருநா.

ஆயிரக் கணக்கில் ரூபாய் செலவழித்து வாங்குபவர்களுக்குச் சரி; நம்மைப் போல மிடில் கிளாஸ் ஆசாமிகளின் ஷூ செலக்ஷன் எப்படி?

"மிடில் கிளாஸ் ஆண்கள் பெரும்பாலும் சாதாரண தோல் செருப்புகளைத்தான் தேர்ந்தெடுப்பார்கள். பெண்கள்... போங்க சார், அவங்களுக்கு ஏது கிளாஸ்?" - இது 'விஜய் ஃபுட்வேர்' சுபாஷ் வர்மா (சபாஷ் வர்மா!).

"கடந்த பதினைந்து ஆண்டுகளில் 'ஷூ புரட்சி'யே ஏற்பட்டிருக்கிறது" என்றார் சுபாஷ். ''மாதாந்திர பட்ஜெட்டில் ஷூவுக்கும் ஒரு அமௌண்ட் ஒதுக்குபவர்கள் இன்று அதிகரித்து விட்டார்கள்'' என்றார்.

'வெறும் காலணி சமாசாரத்துக்கு இவ்வளவு முக்கியத்துவமா?' என்று சலிப்பு வருகிறதா.

'All About Shoes' என்ற பாடா வெளியீடு புத்தகம் நம் பாதங்களைப் பற்றித் தரும் தகவல்களைப் பாருங்கள்:

- ஒரு பாதத்துக்கு 26 வீதம் நமது இரு பாதங்களிலும் உள்ள 52 எலும்புகள், உடலின் மொத்த எலும்புகள் எண்ணிக்கையில் கால் வாசியாகும்!
- ஒவ்வொரு நாளும் நம் பாதங்கள் சுமார் 500 டன் அழுத்தத்தைத் தாங்குகின்றன.
- ஓர் ஆண்டில் சராசரி நபர் 3200 கி.மீ. நடக்கிறார்.
- வாழ்நாளில் நாம் நடக்கும் மொத்த தூரத்தைக் கணக்கிட்டால் பூமி உருண்டையை நான்கரை தடவை சுற்றி வந்ததற்கு ஈடாகும்!

இப்போது சொல்லுங்கள் - காலைக் கடிக்காத நல்ல ஷூஸ் வாங்க கொஞ்சம் கையைக் கடித்தால்தான் என்ன!

— மாலதி சந்திரசேகரன்

மாடல் : சந்தியா

வண்ணப்படங்கள் : யோகா

## அதிகமில்லை ஜென்டில்மேன்!

இங்கிலாந்திலுள்ள, உலகப் புகழ் பெற்ற 'வெஸ்ட் எண்ட்' நிறுவனம் தயாரிக்கும் ஷூவின் (ஒரு ஜோடி) விலை என்ன தெரியுமா? 1170 பவுண்டுகள். அதாவது சுமார் 60,000 ரூபாய். கோடீஸ்வரர்களுக்கு மட்டுமே ஷூக்கள் தயாரிக்கும் இக்கம்பெனி, மனமிரங்கி கொஞ்சம் 'சீப்' ரேட்டில் சமீபத்தில் ஒரு மாடலைத் தயாரித்து, புழக்கத்தில் விட்டுள்ளது. அதன் விலை 495 பவுண்டுகள்; அதிகமில்லை, 25,000 ரூபாய்தான்!

ஆதாரம் : 'ஸ்கூல்' இதழ்
தகவல் : எஸ். ஆலன்

# 'இந்திராதான் பிரியங்கா!'

● 'இந்திராதான் இந்தியா' என்பது எமர்ஜென்ஸி கால முழக்கம். ஆனால் இன்று 'இந்திராதான் பிரியங்கா' என்றால் பலருக்கும் ஒன்றும் புரியாது. சுகாசினி டைரக்‌ஷனில் தமிழில் வெளியான 'இந்திரா' இந்தியில் மொழி மாற்றம் செய்யப்பட்டு ரிலீஸ் ஆகியுள்ளது. பெயர் : பிரியங்கா. இப்போது புரிகிறதா?

● தமிழ்ப்பட உலகம் கிட்டத்தட்ட மறந்து விட்ட ஒரு நடிகை இப்போது கன்னடத்தில் படுபிஸி. இந்த வருடம் அவர் நடித்து பதினாலு படங்கள் வெளியாகி விட்டன. கைவசம் ஒரு டஜன் படங்களாம். நடிகை... சித்தாரா.

● மோகன்லாலின் 'அற்புத விளக்கு' - அண்மையில் ஆறு அரபு நாடுகளில், நட்சத்திரப் பட்டாளத்துடன் நடிகர் மோகன்லால் நடத்திய நிகழ்ச்சிக்குத்தான் இந்தப் பெயர். குஷ்பூ, கனகா, ரோகிணி என்று நடனமாடி தூள் கிளப்பினார் மோகன்லால்.

● பரபரப்புக்குள்ளாகி, சென்சாரால் வெட்டுப்பட்டு, ஒருவழியாய் திரைக்கு வருகிறாள் பூலான்தேவி. ஆம்! சேகர்கபூரின் 'பாண்டிட் குயின்' படம் இம்மாதம் ரிலீஸ்! இது ஒரு அமிதாப்பச்சன் கார்ப்பரேஷன் வெளியீடு.

● துணை ஜனாதிபதி வருகைக்காக எர்ணாகுளம், கோழிக்கோடு அரசு விருந்தினர் இல்லங்கள் புதுப்பிக்கப்பட்டன. அங்கு ஃபர்னிசர்களுக்கு பாலிஷ் போட ஆன செலவு இரண்டு லட்சம் ரூபாய் என்று கணக்குக் காண்பித்துள்ளார்கள்! விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

● மாதுரி தீக்‌ஷித் நடிக்க, உலக மார்க்கெட்டுக்காக, ஒரு ஆர்ட் பிலிம் எடுக்கப் போகிறாராம் ஓவியர் எம்.எஃப். ஹுசைன்! இசையமைக்கப் போகிறவர் ஏ. ஆர். ரஹ்மான்தான்!

● "அவர் ஒரு வில்லன். காந்திஜியின் பாதங்களைத் தொட்டு வணங்கியபின் அவரையே சுட்டுக் கொன்ற கோட்ஸேயை விட மோசமானவர்." இப்படி என்.டி.ஆர். சர்டிபிகேட் கொடுத்திருப்பது... மாப்பிள்ளை முதல்வருக்குத்தான்!

● காசர்கோடு (கேரளா) ஸுப்பரின்டன்ட் ஆஃப் போலீஸ் விசுவநாத பிள்ளை. இவர் தமது பணி விண்ணப்பத்தில், ஜாதிப் பெயரைப் பொய்யாகக் குறிப்பிட்டு வேலை பெற்றதாகக் குற்றச்சாட்டு. கமிஷன் அமைத்து, விசாரணை நடத்தப்பட்டு குற்றம் நிரூபணமான நிலையில், விசுவநாத பிள்ளையிடம் விளக்கம் கேட்டிருக்கிறது அரசு. அவர் ஐ.பி.எஸ். அதிகாரி என்பதால் மத்திய அரசுதான் நடவடிக்கை எடுக்க வேண்டும் - அதுவும் மாநில அரசின் சிபாரிசின் பேரில்...

தொகுப்பு : **மௌலி, எஸ்.எஸ். மணி**

• மாதுரி தீக்‌ஷித்



## KEEP YOUR HEALTH IN CHECK

# COMPREHENSIVE HEALTH CHECK-UP

## FOR Rs.2,500/-

- Complete physical examination
- Computerised ECG
- Chest X-ray
- Rigid Proto-sigmoidoscopy
- Ultrasound examination of abdomen
- E.N.T. Examination
- Eye examination - Glaucoma screening
- Gynaec Examination (for women)
- PAP Smear (for Women)
- Master Laboratory Profile:
  Complete Blood Count (Hb, RBC, PCV, MCV, MCH, MCHC, Platelet Count, WBC), Total Protein, Albumin, BUN, Alkaline Phosphatase, SGOT, SGPT, Bilirubin, Cholesterol, TGL, HDL, Creatinine and Blood sugar (fasting)
- Stool for occult blood
- Urine Analysis
- Blood Grouping
- Nutrition counselling.

**One day. By 4 Consultants**

Mammogram and PSA (Special tests at additional cost)

## TAMILNAD HOSPITALS

Cheran Nagar, Madras - 601 302.

**Ph : 2375221 to 2375225 Fax : 044-2375229**

Insight 1195

**Detect Cancer early. That is the only way to fight the killer disease**



ஒரு கமர்ஷியல் படத்துக்குரிய அதிவேகமு மில்லாமல் ஆர்ட் பிலிம் போல ஆமை வேகமும் இல்லாமல் நதி போல ஓடுகிறது.

# தொட்டாசிணுங்கி

மென்மையான, இயல்பான, எங்கும் காணக்கிடைக்கிற ஒரு பிரச்னையை மூலாம் ஏதும் பூசாமல் படமாக்க முயன்றிருக்கிறார்கள். தொழில் நுட்பக் குழுவில், இயக்குநர் முதல் இசையமைப்பாளர் வரை பல புதியவர்கள். தன்னம்பிக்கையை முதலில் பாராட்டிவிடலாம்.

ஒரு சமர்த்தான கணவனின் 'பொஸஸிவ்னஸ்' பற்றிய கதை. புத்தம் புதுசாக, தனக்கெனப் பிரத்தியேகமாகக் கிடைக்கிற மனைவியின் கவனம், அன்பு, காதல் சகலமும் தனக்கு மட்டுமே இருக்க வேண்டும் என்கிற எதிர்பார்ப்பு. அவளுக்கோ ஓர் உதவாக்கரை தம்பி. வேலைவெட்டி ஏதுமில்லாமல் ரஜினி ரசிகனாக இருப்பதே பிறவிப்பயன் என்று கட்-அவுட்களுடன் ஆடிப் பாடி, கொடி ஏற்றி உல்லாசிக்கிறான்.

இவன் ஒருத்தன் போதாதென்று, ஒரு பாடகனின் புனிதம் கெடாத நட்பு வேறு அவளுக்கு. கல்யாணத்துக்கு முன்பு பழகிய நட்பு உரிமையுடன் பின்னும் பழகுகிறான். நடுரோடில் காரை நிறுத்தி- மணிக்கணக்காக டெலிபோனில்-உல்லாசமாக அவள் வீட்டு சமையல் அறை வரை வந்து-பேசிப் பேசிப் பேசி மாய்கிறான்.

சராசரி புருஷன்காரனுக்குக் கடுப்பாகிறது. சிக்கல்கள். சில்லறைப் பிரச்னைகள். நடுவே மனித உறவுகள் பற்றிய தீவிரமான அலசல்.

ஆச்சர்யப்படும் விதமாக அமைக்கப்பட்டிருக்கும் திரைக்கதைக்கு முதல் மரியாதை. ஒரு கமர்ஷியல் படத்துக்குரிய அதிவேகமுமில்லாமல் ஆர்ட் பிலிம் போல ஆமைவேகமும் இல்லாமல் நதி போல ஓடுகிறது. மிக அளவான வசனங்கள். (பல இடங்களில் தவிர்த்தே இருக்கலாம். குறிப்பாக ரேவதி, தம் பாடக நண்பர் கார்த்திக்குடன் டெலிபோனில் உரைரையாடுகிற சந்தர்ப்பங்களில் ரகுவரன் மனதுக்குள் குமைவதாக வருகிற இடங்கள். வசனம் அங்கே அநாவசியம். ஒரு 'லுக்' போதாதோ?)

தம் எதிர்பார்ப்பை முதலிரவிலேயே மனைவியிடம் ரகுவரன் வெளிப்படுத்தும் இடம் கவிதை. ("என்னைத்தான் ரொம்பப் பிடிக்கும்னு சொல்லேன்!")

தொடர்ந்து ரகுவரன் வருகிற அத்தனை காட்சிகளிலுமே ஒரு முரட்டுத்தனமான பொயட்டிக் டச் தரப்பட்டிருக்கிறது. மனுஷன் பின்னி எடுத்திருக்கிறார். அவரது மூங்கில் முகம் எவ்வித பாவத்துக்கும் வளைந்து கொடுக்கிறது.

படத்தில் கார்த்திக் இருக்கிறார். (பாடகர் ரோல் என்பதால் ஒரே ஒரு சீனில் கையில் மைக் தந்து விடுகிறார்கள். வழக்கமான ஸ்டைல். வேக உச்சரிப்பு) ரேவதி, நேர்த்தியாகச் செய்திருக்கிறார். நம்பியார் வந்து போகிறார்.

அந்த இரு புது முகங்களுக்குத் தான் நடிப்பு வரவில்லை. உருக்கமான காட்சிகளின் கனம் குறைவது அவர்களால் தான்.

புதிய ஒளிப்பதிவாளர் நாகேந்திரன் ஒரிஜினாலிட்டிக்குக் கொஞ்சம் உழைக்க வேண்டும். பின்னால் பிக்-அப் ஆகிவிடுகிறதென்றாலும், ஆரம்பக் காட்சிகள், கண்ணாடி இல்லாமல் த்ரீ-டி படம் பார்ப்பது போல உள்ளன.

அதிகம் சமரசம் பண்ணிக் கொள்ளாமல் வந்திருக்கும் தரமான கமர்ஷியல் படம். ஏதாவது அவார்டு கிடைத்தால் ஆச்சர்யமில்லை.

SANMAC CHITS
MEETS YOUR NEEDS

செயல்திறன் மிக்க சான்மேக் குருப்பின், ஓர் முக்கிய அங்கமாகிய சான்மேக் சிட்ஸ் லிமிடெட் வெற்றிகரமான மற்றுமொரு திட்டத்தை வழங்குகிறது.

**ரவுண்ட் - தி - இயர் சீட்டு குருப்புகள்**

இப்போது நீங்கள் எந்த மதிப்புள்ள சீட்டு குருப்பிலும் ஆண்டின் எந்தக் காலத்திலும் சேரலாம். தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம் மற்றும் கர்நாடகத்தில் உள்ள 21 கிளை அலுவலகங்களில் எதில் வேண்டுமானாலும் சேரலாம். இந்த வகையில் வாடிக்கையாளர்களின் வசதிக்குப் பொருந்தும் வகையில், அவர்களுடைய

# எந்த நேரமும்
# சான்மேக்
# நேரமே!




தேவைகளை நிறைவேற்றி, மிக நெருங்கி அவர்களுடைய உள்ளத்தையே தொட்டு விடுகிறோம். வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவேற்றுவதையே முக்கியக் கொள்கையாகக் கொண்டு, கடந்த ஆண்டில் சான்மேக் சிட்ஸ் மகத்தான சாதனை படைத்திருக்கிறது. இதுவரை வழங்கப்பட்ட பரிசுப் பணம் ரூ.36 கோடி இலக்கைத் தொட்டுவிட்டது. சந்தாதாரர்களின் எண்ணிக்கை மேலும் பெருகி 12,000 க்கும் மேல் ஆகி விட்டது. பரவலாக அமைந்துள்ள அலுவலகங்களின் எண்ணிக்கை 21 ஆக உயர்ந்து விட்டது.

SANMAC
Moving into the future

இனி வரவிருக்கும் ஆண்டில் எதிர்கொள்ள வேண்டிய மாபெரும் சவால்களை எல்லாம் சந்திக்க முற்றிலும் தயாராக உள்ளது இந்த நிறுவனம். இந்த செல்வச் செழிப்பிலும் வளர்ச்சியிலும் நீங்கள் நிச்சயம் பங்கு பெற வேண்டும்.

இதற்கு நல்ல நாள் பார்க்க வேண்டிய அவசியமே இல்லை. இதில் நீங்கள் சேரும் நாளே, வளமான வருங்காலத்திற்கு நல்லதொரு தொடக்கம் ஆகும்.

*இன்றே சான்மேக் சீட்டில் சேர்ந்திடுவீர்!*

| குரூப் குறியீடு | சீட்டுச் சந்தா ரூ. | மாதங்கள் | சீட்டு மதிப்பு ரூ. | நிர்வாகக் கட்டணங்கள் ரூ. | அன்பளிப்புகள் |
|---|---|---|---|---|---|
| B | 500 | X 20 | 10,000 | 40.00 | பிக்னிக் பேக் |
| F | 500 | X 30 | 15,000 | 75.00 | மூடியுடன் கூடிய ஸ்டெயின்லெஸ் - ஸ்டீல் பாத்திரம் |
| HF | 750 | X 20 | 15,000 | | |
| JF | 1,000 | X 15 | 15,000 | | |
| J | 1,000 | X 25 | 25,000 | 85.00 | டிராவல் பேக் |
| G | 1,500 | X 20 | 30,000 | 105.00 | லஞ்ச் செட் |
| RK | 2,000 | X 15 | 30,000 | | |
| S | 2,500 | X 20 | 50,000 | 135.00 | சூட்கேஸ் |
| R | 2,000 | X 25 | 50,000 | | |
| LH | 2,500 | X 40 | 1,00,000 | 280.00 | டீலக்ஸ் சூட்கேஸ் |
| LK | 4,000 | X 25 | 1,00,000 | | |
| LS | 5,000 | X 20 | 1,00,000 | | |
| LG | 5,000 | X 30 | 1,50,000 | 400.00 | வெள்ளிப் பொருள் |
| TL | 5,000 | X 40 | 2,00,000 | 500.00 | |
| CL | 10,000 | X 30 | 3,00,000 | 600.00 | |
| PL | 12,500 | X 40 | 5,00,000 | 800.00 | தங்க நாணயம் |

குறிப்பு: எல்லா சீட்டு குரூப்புகளுக்கும் ஏலத் தொகைக்கு 30% உச்ச வரம்பு
முன் அனுமதி பெற்றது.

# சான்மேக் சிட்ஸ் லிமிடெட்

**நிர்வாக அலுவலகம்:** "லக்ஷ்மி டவர்ஸ்", 27, டாக்டர் ராதாகிருட்டிணன் சாலை,
மயிலாப்பூர், சென்னை 600 004. தொலைபேசி: 8258637, 8240051.

**கிளைகள்: சென்னை:** அண்ணா நகர் ✆ 6214454. அசோக் நகர் ✆ 4824757. அண்ணா சாலை ✆ 8520921. மயிலாப்பூர் ✆ 4992488, 4990027. புரசைவாக்கம் ✆ 6425036. தி. நகர். ✆ 8278515. மேற்கு தாம்பரம் ✆ 2366327. கடலூர் ✆ 22728. கோயம்புத்தூர் ✆ 446375, 471403. கும்பகோணம் ✆ 24844. மதுரை ✆ 540849. நெய்வேலி ✆ 22984. சேலம் ✆ 446607. திருச்சி ✆ 25324. திருவண்ணாமலை ✆ 22922, 23333. திருநெல்வேலி ✆ 322032. பெங்களூர் ✆ 368331. திருப்பதி ✆ 24376. ஐதராபாத் ✆ 397879. விசாகப்பட்டினம் ✆ 545854.

**BID FOR A BETTER LIFE**

SRICHAKRA COMS. 748/95.

# சப்தமும் நாதமும்

திருவாரூர் பாபு

இருபத்தெட்டு வயதில் இன்னும் எனக்கு அந்த அனுபவம் இல்லை. ஆனால் நண்பர்களுக்காக நான்கு இடங்களில் பெண் பார்த்து – ஏனோ அந்த வைபவத்தில் மனசு அத்தனை லயிக்கவில்லை. நான்கில் ஒன்று கூட கூடி வராதது அதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

ஆனால் இது முடிந்து விட்டது. திட்டவட்டமாகச் சொல்ல முடியாவிட்டாலும் கிட்டத்தட்ட முடிந்து விட்டதுபோல்தான் எனக்குத் தோன்றியது.

கணேசன் வீட்டிலிருந்த அனைவரும் வந்து பார்த்துச் சென்று விட்டார்கள். பெண்ணின் வீட்டிலிருந்தும் பார்த்துச் சென்று விட்டார்கள். என்றாலும், ஏதோ ஒரு தேக்கத்தில் முகூர்த்தத்துக்கு இன்னும் நாள் குறிக்கப்படாமல் தள்ளிப் போய்க் கொண்டிருக்க.... கணேசன் என்னை உசுப்பினான்.

"நீ ஒரு தடவை பார்த்துட்டு வந்துடுடா... எனக்கு அந்தப் பொண்ணை புடிச்சிருக்கு... ஆனா என்னைப் பத்தித்தான் ஒனக்குத் தெரியுமே... வீட்டுல இதைச் சொல்ல முடியல... முடிஞ்சா பெண்ணுகிட்டயோ... அல்லது அவுங்க வீட்லயோ விசாரிடா... வீணை வாசிக்கத் தெரியும்னு சொன்னாங்களே தவிர அது எவ்வளவு தூரத்துக்கு உண்மைன்னு தெரியல... ப்ளீஸ்டா... அப்படியே பொண்ணையும் நீ ஒரு தடவை பார்த்த மாதிரி இருக்கும்..." கண்களில் கனவோடும் நான் போவேனா என்கிற சந்தேகத்தோடும் பேசினான்.

நான் சிரித்தேன்.

"ஏண்டா... நல்லா குடித்தனம் நடத்தத் தெரிஞ்சிருந்தா போதாதா...? வீணை வாசிக்கத் தெரியணும்... இல்ல அதுமாதிரி எதுலயாவது ஈடுபாடு இருக்கணும்... இதெல்லாம் எதுக்குடா...? வீணை வாசிக்கிறதும்... பாட்டுப்பாடறதும்தான் வாழ்க்கையா...?"

"பார்த்தியா...? என்னைப் பத்தி அவ்வளவு தெரிஞ்சிருந்தும் நீயே கிண்டலடிக்கிற பாரு..."

"சரி... பார்க்கிறேன் போதுமா...?" என்றதும் தான் திருப்தியானான்.

கணேசன் பள்ளிக்கூட நண்பன். கிட்டத்தட்ட பதினான்கு வருடங்கள் ஒன்றாகப் படித்து, ஒன்றாக ஊர் சுற்றி, வங்கித் தேர்வெழுதி வேலை கிடைத்து அவன் நிரந்தரமாகிவிட... நான் அப்பாவின் தொழிலில் ஐக்கியமானேன்.

இருவரும் இருவேறு திசையில் இருந்த போதும் பழக்கத்தில், நட்பில் எந்தவித விரிசலும் விழவில்லை.

படித்த காலத்தில் இருந்த மாதிரியே நட்பு இறுக்கமாகத்தான் இருந்தது.

இறுக்கமான நட்பு என்ற போதிலும் சிற்சில விஷயங்களில் எனக்கும் அவனுக்கும் நிறைய வேறுபாடு இருந்தது.

ஞாயிற்றுக்கிழமை சினிமாவுக்குப் போவது என் வழக்கம். ஆனால் கணேசன் பெரும்பான்மையான ஞாயிறுகளில் ஊரில் எங்காவது கச்சேரி நடந்தால் அங்கு இருப்பான். இல்லை கமலாலயக் கரையில் அமர்ந்து கொண்டு கோவில் ஒலி பெருக்கியிலிருந்து வழிந்து வரும் எதையாவது ரசித்துக் கொண்டிருப்பான்.

நான் அழைத்து சினிமாவுக்கு வர மாட்டான். ஆனால் அவனோடு நான் கச்சேரிக்குச் செல்வேன். மும்மூர்த்திகள் விழா நடக்கும் ஒரு வார காலமும் அவனோடு மும்மூர்த்திகள் சபாவே கதியாகக் கிடப்பேன். இப்படி ஒரு அனுசரிப்பு இருந்ததால்தான் நட்பு இன்னும் உடையாமல் இருக்கிறது.

எப்படியோ சங்கீதம் அவனோடு ஒன்றிப் போய் விட்டது. அதை மறுக்கவோ இல்லை அவனை அதிலிருந்து மாற்றவோ எனக்கு விருப்பில்லை. நண்பன் சராசரி ஆண்மகனாக இல்லாமல் வித்தியாசமாக இருந்தது சந்தோஷமாக இருந்தது. என் நண்பன் ரசனை உடையவன் என்பது கொஞ்சம் கர்வமாகக்கூட இருந்தது.

ஆனால் தனக்கு வரப்போகிற மனைவிக்கும் சங்கீதம் தெரிந்திருக்க வேண்டும் என்கிற நிபந்தனை விதித்துக் கொண்டிருந்த காரணத்தி

னால் இரண்டு மூன்று வரன்கள் தட்டிப் போய் விட்டதுதான் எனக்கு வேதனையாக இருந்தது.

நல்ல வரன்கள். கடைசியாய்க் கூடி வருகின்ற நேரத்தில். "பொண்ணைப் பார்த்தா ஞான சூன்யம் மாதிரி இருக்குடா... இது எனக்கு சரிப்பட்டு வராது" என்று என்னிடம் சொல்லி விட்டு அவன் அம்மா, அப்பாவிடம் வேறு ஏதோ காரணம் சொல்லிக் கல்யாணத்தைத் தவிர்த்து விட்டான்.

இது எனக்குப் பிடிக்கவில்லை. அவன் இல்லாதபோது வீட்டுக்குச் சென்ற என்னிடம் அவன் அம்மாவும், அப்பாவும் வருத்தப்பட...... நான் அவனைத் தனிமையில் கோபித்துக் கொள்ள...

"சரி... சரி... இந்த இடம் கட்டாயம் முடிஞ்சிடும்... நான் ஒத்துக்கறேன்... பொண்ணுக்கு வீணை வாசிக்கத் தெரியும்னு புரோக்கர் சொன்னாரு. அது உண்மையான்னு மட்டும் என் அம்மா, அப்பாவுக்குத் தெரியாம... ப்ளீஸ்..."

**சொ**ன்ன அடையாளங்கள் பொருந்தியிருந்த வீட்டுக்கு முன்னே வேப்ப மர நிழலில் மொபட்டை நிறுத்தி இறங்கினேன். சப்தம் கேட்டு வெளியே வந்த பெரியவரைப் பார்த்து வணங்கினேன். பதிலுக்குக் கை கூப்பியவர் வேகமாய் வந்து கதவைத் திறந்து விட்டார்.

"நான் ரமேஷ்... மாங்குடியில அலயன்ஸ் பேசிக்கிட்டு இருக்கீங்கள்ல... கணேசன்... அவரோட ஃபிரெண்ட்..."

"அடடா...வாங்க.... வாங்க..."


ஆர்ப்பாட்டமான வரவேற்பு.

அவரைப் பின்தொடர்ந்து உள்ளே நுழைந்தேன்.

"மகாலெட்சுமி... மாப்புள வீட்லயிருந்து வந்திருக்காங்க... மாப்பிள்ளையோட ஃபிரெண்டாம்..." சத்தமாய்ச் சொன்ன சிறிது நேரத்திற்கெல்லாம் அந்த அம்மா இழுத்துப் போர்த்திக் கொண்டு அடுப்படியை விட்டு வெளியே வந்து "வாங்க..." வணங்கினார்.

சிரித்தேன்.

"என்னான்னு தெரியல...



நிச்சயத்துக்கு நான் குறிக்க வர்றோம்னு மாப்பிள்ளையோட மாமாவும் சித்தப்பாவும் சொன்னாங்க. வரல... காரணம் தெரியலியேன்னு குழம்பிக்கிட்டு இருக்கிறப்பவே நீங்க... ஏதும் சேதி சொல்லி அனுப்பிச்சாங்களா...?" ஆர்வமாய்க் கேட்டார்.

"என்கிட்ட அதெல்லாம் ஒண்ணும் சொல்லலை. இந்த பக்கம் கொஞ்சம் வேலை இருந்துச்சி...போறேன்னு கணேசன்கிட்ட சொன்னேன்... அவன்தான் போயிட்டு வாடான்னு..."

"சரி...சரி... வந்தவரைக்கும் சந்தோஷம்... என்ன சாப்பிடறீங்க...? டீ...காபி..."

"அதெல்லாம் ஒண்ணும் வேணாம்..."

"ஐயய்யோ...அதெப்படி...? ஒண்ணும் சாப்பிட மாட்டேன்னா... ஏதாச்சும் குடிங்க..." என்றார்.

சிறிது நேரத்தில் டீ வந்தது. டீயை உறிஞ்சிக் கொண்டே தாழ்வாரத்து சுவரோரத்தில் வைக்கப்பட்டிருந்த வீணையைப் பார்த்துக் கொண்டே கேட்டேன்.

"ஒங்க டாட்டர் வீணை வாசிப்பாங்களா...?"

"பிரமாதமா வாசிப்பா... நாலு வருஷம் ஒரு அம்மா வீட்டுக்கு வந்து கத்துக் கொடுத்தாங்க..."

"அப்படியா...?"

"மூணு பேர்ல அவ ரொம்ப சுட்டி.... மதிய நேரத்துல கொஞ்சம் நேரம் படுக்கக்கூட மாட்டா... எம்பிராய்டரி பண்ணிக்கிட்டு இருப்பா... இல்ல படம் வரைவா..."

மனசுக்குள் கணேசனுக்கு வாழ்த்துச் சொன்னேன்.

அவர் சொன்னதில் நான் வியந்துப் போயிருக்க... பக்கத்து அறையிலிருந்து பளிச் என வெளியே வந்தாள் அவள்.

"வாங்க...." என்று என்னைப் பார்த்துச் சிரித்து விட்டுப்போக... அந்த திடும் "வாங்க"வில் நான் கொஞ்சம் தடுமாறித்தான் போனேன். நல்ல அழகாகவே இருந்தாள்.

"அப்புறம் நான் கிளம்பட்டுமாங்க...?"

"நல்ல வெயிலா இருக்கே... இருந்து மதியம் சாப்பிட்டுட்டு பொழுது சாஞ்சி போகலாமே..."

"ஐயய்யோ... நான் பூந்தோட்டம் வரைக்கும் வியாபார வேலையா போகணும்..." என்றேன்.

"சரி... அப்ப வாங்க..."

வெளியே வந்த அம்மாவைப் பார்த்துக் கைகுவித்துவிட்டுத் திரும்பும்போது, அவள் வெளியே வந்த அறைக்குள் ஏதேச்சையாகச் பார்வை போனது. அந்த பீரோ கண்ணாடியின் மூலையில் ஜாதகத்தோடு கொடுத்தனுப்பிய கணேசனின் ஃபோட்டோ செருகப்பட்டிருந்தது.

நான் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டேன்.

கணேசனிடம் சொன்னால் சந்தோஷப்படுவான் என்று நினைத்துக் கொண்டேன். நல்ல இடம். பார்க்க, பேச மிக நல்லவர்கள் மாதிரி தெரிகிறார்கள். நாலைந்து இடங்கள் தள்ளிப் போனாலும் அதுவும் நல்லதுக்குத்தான். கணேசா... கங்கிராட்ஸ்!

"ஏன் சேதி ஒண்ணும் சொல்லி அனுப்பல. பொண்ணு வீட்டுல பொண்ணோட அப்பா கவலைப்பட்டுக்கிட்டு இருக்காரு..." என்றேன் மாலை கணேசன் வீடு சென்றபோது.

கணேசனின் அப்பா மௌனமாக இருந்தார்.

"நீ போனியா...?" அம்மா கேட்டார்.

"ஆமாம்மா... இவன் போயி பார்த்துட்டு வாடான்னு சொன்னான்...எங்க அவன்...?"

அம்மாவும், அப்பாவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"கொல்லப்பக்கத்துல இருக்கான்... இப்பத்தான் ஆபீஸ்லேந்து வந்தான்..."

கொல்லைப்புறம் சென்றேன்.

"வாடா..." கணேசன் அழுத்தமாக அழைத்தான்.

"ஏய்... கை கொடு மொதல்ல... ஒன் வுட்பி நாலு வருஷம் வீணை கத்திருக்காங்க. அத விட சந்தோஷமான இன்னொன்னு... ஜாதகத்தோட கொடுத்தனுப்புனமே உன்னோட ஃபோட்டோ... அது அவுங்க ரூம் கண்ணாடியில ஒட்டி இருக்குடா... ஒன் ஆளு கனவு காண ஆரம்பிச்சாச்சி..."

"ப்ச்..." என்றான்.

"என்னடா...?"

"அது இல்லடா... மன்னார்குடி முடிஞ்சிட்டுது. வர்ற ஞாயிற்றுக்கிழமை நிச்சயம். காலையிலதான் பேசி முடிச்சோம்."

திடும் என்று பின்னந்தலையில் தாக்கப்பட்டது போல் உணர்ந்தேன்.

"ஏண்டா... திடீர்னு ஏன் இந்த முடிவு...?"

"பொண்ணு வீட்டுல ஹண்ட்ரடு சிசி-வாங்கித் தர்றதா சொன்னாங்கடா... எனக்கும் ஆந்தகுடி பிரான்ஞ்சுக்கு டிரான்ஸ்ஃபர் ஆயிடும் போல இருக்கு...போக வர வசதியா இருக்கும்ல... அதான் சரின்னு சொல்லிட்டேன்..."

நான் அமைதியாக இருந்தேன்.

அந்தப் பெண்ணின் முகம் மனத்தில் ஓடியது. அவள் கண்ணாடியில் செருகி வைத்திருந்த கணேசனின் படம் நினைவில் ஓடியது. 'வாங்க... வாங்க' அந்த ஆர்ப்பாட்டமான வரவேற்பு!

ஹண்ட்ரட் சிசி-ஆந்தகுடி டிரான்ஸ்ஃபர்.

ஹண்ரட் சிசி.யின் சப்தத்தில் வீணையின் நாதம் காணாமல் போனது!



**காந்திஜி** தென்னாப்பிரிக்காவில் இருக்கும்போது, ரயிலில் முதல் வகுப்பில் பயணப்பட்டார் அல்லவா? அந்த ரயிலுக்கு 'மகாத்மா காந்தி எக்ஸ்பிரஸ்' என்று தற்போது பெயரிடப்பட்டுள்ளது! காந்தியடிகளின் 125 வது பிறந்த நாளை முன்னிட்டு நெல்சன் மண்டேலா அரசு இவ்வாறு முடிவு செய்தது.

- வை. அனந்தராஜ்

# நடராஜ் சிட்ஸ்

(தமிழ்நாடு) பிரைவேட் லிமிடெட்

**Regd. No.18-23970 / 1992**

"சாந்தி காம்ப்ளெக்ஸ்" மூன்றாவது மாடி, 26, ரெங்கநாதன் தெரு, திநகர், சென்னை - 600 017.

கிளைகள்: 51, தெற்கு வீதி ( மாடி), "இதயம் காம்ப்ளெக்ஸ்" திருவாரூர் - 610 002.
1பி. காமராஜர் வீதி ( மாடி), காஞ்சிபுரம் - 631 501.
2பி. செல்வம் நகர், மெடிக்கல் காலேஜ் ரோடு, தஞ்சாவூர் - 613 007.

**CALL : 4342098, 4840150**

**சீட்டு குருப்பில் சேர்கிறவர்களுக்கும் அறிமுகப் படுத்துகிறவர்களுக்கும் பரிசுபொருள்கள்காத்திருக்கின்றன.**

சிட்பண்ட் : சட்டப்படி பதிவு செய்யப்பட்ட ரூ.5,000, 10,000 15,000, 25,000 குருப்புகள் நடைமுறையில் உள்ளன. மேலும் புதிய குருப்புகள் ஆரம்பமாக இருக்கின்றன. எளிய விதிமுறைகள். இனியசேவை. வெளியூர் அன்பர்களும் சேரலாம். டெண்டர் மூலம் சீட்டு எடுக்கலாம்.

நடராஜ் குருப் கம்பெனிகள்:


நடராஜ் சிட்ஸ் (தமிழ் நாடு) பி. லிமிடெட், நடராஜ் எஸ்டேட்ஸ், நடராஜ் ஆயில் மில்ஸ்,
நடராஜ் பப்ளிகேஷன்ஸ், நடராஜ் எக்ஸ்போர்ட்ஸ் ஓவர்சீஸ், டிகே. கீதா அக்ரோ ப்ராடக்ட்ஸ்.

OIL



# NATARAJ ESTATES பண்ணை வீடு

**Ariya Perumpakkam Village, (Survey No : 444/1 to 461/3D)**




காஞ்சி : உலகப்புகழ் பெற்ற சுற்றுலா நகரம். மற்றும் ஆதிசங்கரர் நிறுவிய காஞ்சிமடம். அதன் அருகே அமைதியான சூழலில் மரம்,செடி,கொடிகளும், பூக்களும் நிறைந்த காட்டேஜுடன் கூடிய அழகிய பண்ணை வீடு. 4800 - ச.அடி. ஏமாற்றத்தைத் தவிர்க்க முன்பதிவு செய்துகொள்ளுங்கள்.

**தேக்குத்திட்டம்**

'யூனிட்' ஒன்றுக்கு ரூ. 1000 செலுத்தி 15 ஆண்டுகளுக்குப் பிறகு ரூ. 50,000 க்குமேல் லாபம் பெறலாம். 15 ஆண்டுகாலத்துக்கு எங்கள் பராமரிப்பு உண்டு.

**வீடுதேடிவரும் காய்கறிகள்**

பண்ணை நிலத்திலிருந்து வாரம் தோறும் காய்கறிகள் மற்றும் கீரைகள் பழங்கள் முதலியன விளைவித்து உங்கள் வீட்டுக்கே அனுப்பி வைக்கும் திட்டத்தில் ரூ. 1000 (ஆயிரம் மட்டும்) செலுத்தி இன்றே உறுப்பினராகுங்கள்.

**NATARAJ ESTATES - FARM HOUSE PROMOTERS**
3rd FLOOR, 26 - RANGANATHAN ST., T. NAGAR, MADRAS - 600 017, S.INDIA.
**Phone : 434 2098, 484 0150**

# ஏன் கடவுளுக்கு நைவேத்தியம் காட்டி சாப்பிட வேண்டும்?



- ஒவ்வொரு பதார்த்தத்திலும் ஜீவனுண்டு. அதையறுத்து சமைப்பதனால் தோஷம் உண்டாகின்றது. அவைகளை கடவுளுக்கு ஆராதனைசெய்து சாப்பிட்டால் அந்த தோஷம் நிவாரணையாகும்.
- யஞ்ஞத்தினால் ஆராதிக்கப்பட்ட தேவதைகள், சந்தோஷமடைந்து இஷ்ட்டமான போகங்களைக் கொடுப்பார்கள். ஆதலால் நீங்கள் சாப்பிடுவதற்குமுன் அன்னமும் பதார்த்தங்களும் கடவுளுக்கு காட்டி ஆராதனை செய்து அந்த சேஷத்தைச் சாப்பிடவேண்டும்.
- இந்திராதி தேவதைகளும் ஜனங்களுக்கு ஜீவனார்த்தமாகிய பதார்த்தங்களைக் கொடுப்பதற்கு மழையைப் பெய்விக்கப் பகவானால் நியகிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால் அவர்களால் விளைவித்துக் கொடுக்கப்பட்ட பதார்த்தங்களை மறுபடியும் அவர்களுக்கு அர்ப்பணம் செய்வதனால் அவர்களை சந்தோஷித்து மறுபடியும் பிரதி வருஷங்களிலும் மழையை விருத்து செய்து கொண்டே வருவார்கள். அதனால் ஜனங்கள் க்ஷேமமாய் விருத்தியடைவார்கள்.

*ஆதாரம்: ஜீவப்ரஹமைத்ய வேதாந்த ரஹஸ்யம்*

---

ஆகையால் கிராண்ட் ஸ்வீட்ஸ் வாங்கி நல்லோருக்கு விநியோகம் செய்யவும்.

---


**திருமண வைபவங்களுக்கு** சீர் முறுக்கு, சீர் அதிரசம், முள்ளு தேன்குழல், பருப்புத் தேங்காய் வகைகள், திரட்டுப்பால் அப்பம் முதலியவை வழங்கப்படும்.

---

# தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு, காந்தி நகர், அடையாறு, சென்னை - 20. போன்: 4915662, 4914213

Ad-Ventures






1995 டிசம்பர் 31
யுவ மார்கழி 16
மலர் : 54
இதழ் : 22

# கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



## போக்ரானில் மீண்டும் அணுகுண்டு?....

கென்னடி அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த போது ராஜாஜி அவரைச் சந்திக்கச் சென்றார். அமெரிக்கா அணு ஆயுதச் சோதனைகள் செய்வதைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

கென்னடியும் அந்தச் சந்திப்பைத் தமது வாழ்வில் நிகழ்ந்த மிக வலிமையான பாதிப்பு என்று வர்ணித்தார்.

ராஜாஜி மட்டுமின்றி, பிரதமர் நேருவும் அப்போது மிகவும் கவலையுற்று, அணு ஆயுத குறைப்புக்காக உலக நாடுகளிடம் விண்ணப்பித்தார்.


இன்று நிலைமை தலைகீழாக மாறியிருப்பது போல் ஒரு தோற்றம்!

அமெரிக்க பத்திரிகைகள் இந்தியாவின் பேரில் குற்றம் சாட்டுகின்றன. ராஜஸ்தானிலுள்ள போக்ரான் பாலைவனத்தில் அணுகுண்டு பரிசோதனைக்கு நாம் முழுமுச்சுடன் தயாராகி வருவதாக அமெரிக்க உளவுப் படைக்குத் தகவல் கிடைத்துள்ளது என அப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன!

இந்த நாடகத்துக்கு ஒரு பின்னணியும் இருக்கிறது :

**Nuclear Non Proliferation Treaty (NPT)** என்ற அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட மறுத்து வருகிறது.

ஏற்கெனவே அணு ஆயுதங்களைத் தயாரித்து, குவித்து வைத்திருக்கும் அமெரிக்கா முதலான




நாடுகளை இந்த ஒப்பந்தம் பாதிக்கவில்லை. புதிதாக அணு ஆயுத உற்பத்தி முயற்சிகளில் ஈடுபடக் கூடிய வளரும் நாடுகளை மட்டுமே உள்ளடக்கியது என்.பி.டி. இது தார்மீக ரீதியில் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.

அண்டை நாடான பாகிஸ்தான், அணு ஆயுதங்கள் உற்பத்திக்கான செயல் திறனை மேலும் மேலும் வளர்த்துக் கொண்டு, தன்னை பலப்படுத்தி வரும் நிலையில், நாம் இப்படியொரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டால் ஏமாளிகளாகி விடுவோம் என்பது இந்திய அரசின் நிலை.

இந்திரா காந்தி பிரதமராக இருந்த போது, தமது வலிமையைப் பிரகடனப்படுத்தும் நோக்கில், முதன் முறையாக அணுகுண்டு ஒன்றை வெடித்துக் காட்டினார். அப்போது அதற்கு நிலைக் களனாக இருந்ததும் இன்று செய்தியில் அடிபடும் ராஜஸ்தான் மாநில போக்ரான்தான்!

அந்த போக்ரான் அணு ஆயுத வெடிப்புச் சம்பவத்துக்குப் பிறகுதான் பாகிஸ்தானும் அணு ஆயுதத் தயாரிப்பு முயற்சியில் மும்முரமாக இறங்கியது.


இப்போது இந்த ஆரோக்கியமற்ற போட்டி அபாயகரமாக வளர்ந்து அச்சுறுத்துகிறது.

இந்நிலையில், பாகிஸ்தானின் பலம் பெருகப் பெருக, நம் நாட்டில் ஹிந்து ஆதரவுக் கட்சியான பி.ஜே.பி.யின் பிரசாரமும் அணு ஆயுதக் கொள்கையை உள்ளடக்கியதாக வளர்ந்து வருகிறது.

'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அணுகுண்டை உற்பத்தி செய்தே தீருவோம்' என்கிற ரீதியில் பேசுகிறார்கள் பி.ஜே.பி. தலைவர்கள்.

பி.ஜே.பி.க்கு ஒரு படி மேலே போக வேண்டும் என்ற ஆவலில் மத்தியில் காங்கிரஸ் அரசு செயல்படக்கூடும்.

ஆனால் இப்போதே அயல்நாட்டுப் (அமெரிக்க) பத்திரிகைகள் இந்தியாவில் நடக்கும் அணு ஆயுத பரிசோதனை ஏற்பாடுகள் குறித்து எதிர்ப் பிரசாரம் செய்து வருகின்றன. இன்னும் உறுதியான ஆதாரங்கள் கிடைக்குமானால் அமெரிக்காவும் இதர உலக நாடுகளும் நம்மைக்




கண்டித்து ஒதுக்கி விடும். நமக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும். அதன் காரணமாக, அயல்நாட்டு முதலீட்டாளர்கள், வர்த்தகர்கள் மூலம் நாம் அடைந்து வரும் லாபங்கள் யாவும் நின்று போகும்.

அணு ஆயுத உற்பத்திக்கு ஆகும் எக்கச்சக்கமான செலவுடன், பொருளாதாரத் தடைகள் காரணமான நஷ்டமும் சேர்ந்து கொள்ள, வளர்ச்சிப் பணிகளெல்லாம் பலத்த அடி வாங்கும்.

கடந்த ஐந்தாண்டுகளாக மன்மோகன்சிங் மேற்பார்வையில் புதிய பொருளாதாரக் கொள்கை மூலமாக அடைந்த கொஞ்ச நஞ்சம் முன்னேற்றமும் இருந்த இடம் தெரியாமல் போய் விடும்!

அமெரிக்க பத்திரிகைகளின் குற்றச்சாட்டுகளையெல்லாம் பிரணாப் முகர்ஜி மறுத்திருக்கிறார். அவர் உண்மையே பேசுகிறார் என்று நம்புவோம்.

அணு ஆயுத விஷயத்தில், தேர்தல் நோக்கிலும் ஏட்டிக்குப் போட்டியாகவும் எடுக்கப்படும் முடிவுகள் நமது நலனுக்கே இறுதியில் வேட்டு வைக்கும். இதை அனைத்துக் கட்சிகளும் உணர வேண்டும்.

எந்தவொரு அரசாங்கத்தின் நோக்கமும் அண்டை நாடுகளுடன் நேசமும் ஒப்புரவும் வளர்ப்பதாகவே அமைய வேண்டும். இயற்கை வளத்தையும் மனித வளத்தையும் வளர்ச்சிப் பணிகளுக்காக ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவதாகவே இருக்க வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபைக்கென ராஜாஜி எழுதிய கவிதை வரிகள் இங்கே நினைவுகூரத் தக்கவை :

The good in every man
Is an atom too
Of measureless potential.
Let us learn to find it
And explode it into lasting peace....

# ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி பர்மனென்ட் பண்டு லிமிடெட்

பதிவு எண் : 18-23759/92

H.O. No. 288, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை - 7 Ph : 6421801/6415549

B.O. No. 23, வடக்கு மாட வீதி, மயிலாப்பூர், சென்னை - 4. Ph : 4934009

டெபாசிட்டுகள் ரூ 4 கோடியை தாண்டியுள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிக்சட் டிபாசிட்டுகளுக்கு கவர்ச்சிகரமான வட்டிகள் வழங்கப்படும்

வட்டிக்கான காசோலைகள் முன்கூட்டியே வழங்கப்படும்

மேலும் பயனுள்ள திட்டங்களுக்கு நேரில் அணுகவும்

சென்னை மாநகர சொத்துக்கள் மீது கடன் கிடைக்கும்





நகைக்கடன் கிராம் 1க்கு ரூ. 300 மாதவட்டி ரூ. 1.95 மட்டும் வேறு கட்டணம் இல்லை

H.O. வெள்ளி விடுமுறை

B.O. செவ்வாய் விடுமுறை

உச்சவரம்பு கிடையாது

உறுப்பினராகி பயன் பெறுவீர்

வேலை நேரம் : காலை : 8.30 - 12.30 மாலை : 2.00 - 6.00



சேர்மன் : P. பாலசுப்பிரமணியம், B.Sc.,
முதன்மை அறங்காவலர்,
கந்தக்கோட்டம், சென்னை - 600 003.

PB குரூப் கம்பெனி

அருளுக்கு ஸ்ரீ முத்துக்குமரன்! பொருளுக்கு PB குரூப் நிறுவனம்!

---

# வாழ்வில் வசந்தம்

## அபிராமியின் தேக்கு மரத்திட்டம்

## ரூ. 150/- X 8 மாதங்கள் = ரூ. 1.5 லட்சம்

✪ பணத்திற்கு உத்திரவாதமாக 1 சென்ட் நிலம் / கேஷ் சர்டிபிகேட் ✪ ரூ. 20,000/– இலவச விபத்துக்காப்பீடு ✪ 3 மாதங்களுக்கு ஒரு பரிசுக்குலுக்கல் மூலம் தொடர்பு ✪ திட்டக்காலம் 20 ஆண்டுகள் ✪ 1.1.96 முதல் 25% திட்டத்தொகை உயருகிறது.

# அபிராமி தேக்கு யூனிட்ஸ்

பதிவு அலுவலகம்: சித்ரா காம்ப்ளக்ஸ், சத்திரம் பஸ்ஸ்டாண்ட், திருச்சி - 2. ✆ 31467

கிளைகள் : ● 49/21, முருகன் காம்ப்ளக்ஸ், பிருந்தாவன் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை–33. ✆ 4840258 ● Y-219, IInd அவென்யூ, பேஸ்மெண்ட் யமஹா ஷோரூம், அண்ணா நகர், சென்னை – 40. ✆ 6214407 ● 55/B, சின்னையா காம்ப்ளக்ஸ், ஐந்து ரோடு, கௌரி தியேட்டர் அருகில், சேலம் – 4. ✆ 445037. ● 307, மூன்றாவது தளம், ராஜராஜேஸ்வரி டவர், டாக்டர் நஞ்சப்பா ரோடு, கோயம்புத்தூர் – 18. ✆ 232381. ● 545, அருணா காம்ப்ளக்ஸ், இரண்டாவது தளம், கவின் மருத்துவமனை எதிரில், பெருந்துறை ரோடு, ஈரோடு–11. ✆ 220781.





**எச்.எம் என்றாலே பிரம்பு ஏந்தி பயமுறுத்துபவர் என்ற 'இமேஜை' உடைக்கும் வகையில் இங்கே திருமதி. ஒய்.ஜி.பி. அளித்த ஊக்கத்தால் முன்னுக்கு வந்த அவரது மாணவர்கள் பேசுகிறார்கள் :**

**டாக்டர் மோகன் ராஜன் (கண் மருத்துவர்):**

"பத்மா சேஷாத்ரி பள்ளியின் ஆரம்ப காலத்தில் படித்தவன் நான். அப்போது ஒவ்வொரு வகுப்பிலும் இரண்டே செக்ஷன்கள் என்பதால் மேடத்திற்கும் எங்களுக்குமிடையே நிறைய சந்திப்புகள் நடந்ததுண்டு. "ஈச் ஒன் டீச் ஒன்'' என்ற திட்டத்தை அப்போது அறிமுகம் செய்தார்கள். அதன்படி விருப்பமுள்ள மாணவர்கள் பள்ளி நேரத்திற்குப் பிறகு அருகில் உள்ள சேரிப் பகுதியில் உள்ள சில ஏழை மாணவர்களுக்கு படிப்பு சொல்லிக் கொடுக்க வேண்டும். பொருளாதாரத்தில் நலிவுற்றவர்களின் பிரச்னைகளை நான் உணர இது மிக உதவியாக இருந்தது. என்ன சொல்லிக் கொடுத்தும் ஒருவரால் படிக்க முடியவில்லை. பிறகு தான் தெரிந்தது அவருக்கு கிட்டப்பார்வைக் குறைபாடு என்று. கண் மருத்துவரான என் அப்பாவிடம் அவரை அழைத்துச் சென்று இலவச சிகிச்சை பெறச் செய்தேன். அடுத்த நாள் மேடம் என் செயலைக் குறிப்பிட்டுப் பாராட்டினார். மேலும் இதுபோன்ற செயல்களைச் செய்ய வேண்டும் என்ற ஊக்கத்தைக் கொடுத்தது அந்தப் பாராட்டு.

"எங்கள் செக்ஷன் குறும்புத்தனத்திற்குப் பேர் போனது. ஓர் ஆசிரியர் நேரே மேடத்திடம் போய் "இனிமேல் ஒன்பது 'பி' பிரிவுக்கு நான் பாடம் எடுக்க மாட்டேன்'' என்று புகார் செய்தார். நான் (வகுப்பு லீடராகையால்) வரவழைக்கப் பட்டேன். 'மனதில் தோன்றியதைச் சொல்கிறோம். எங்கள் வயதைச் சேர்ந்தவர்கள் இப்படிப் பளிச் சென்று சொன்னால் அது அகம்பாவமாகத் தெரிகிறது' என்றேன். மேடம் நான் சொல்ல வந்ததைப் புரிந்து கொண்டார். ஆசிரியரைப் பார்த்து 'இந்த வயது இளைஞர்கள் கொஞ்சம் அட்வென்ச்சரஸாக இருக்க விரும்புவது இயற்கை தான்' என்றார். விமர்சனங்களையும் எதிர்க் கருத்துக்களையும் பாஸிடிவாக எடுத்துக் கொள்ளும் குணம் மேடத்திற்கு


• எஸ். கிருஷ்ணன், ஐ.ஏ.எஸ்.


• விஜய் சிவா


• டாக்டர் மோகன்ராஜன்


• டி.எஸ். நாராயண சாமி

உண்டு என்பதற்கு இது ஓர் உதாரணம்."

**டி. எஸ். நாராயணசாமி (யூனிகார்டு மார்க்கெட்டிங் நிறுவன நிர்வாக இயக்குனர்):**

"வகுப்பில், புத்தகத்தின் பின் அட்டையில் காமராஜர், கருணாநிதி இவர்களை கேலிச்சித்திரமாக வரைந்து கொண்டிருந்தேன். வகுப்பு ஆசிரியை மேடத்திடம் என்னை அழைத்துக் கொண்டு போய் இதைப் பற்றிச் சொல்ல 'க்ளாஸிலா வரைவது?' என்றபடி அந்தப் புத்தகங்களைக் கையில் எடுத்தார். அவரது கண்டிப்பைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்த நான் பயந்து போயிருக்க, 'நல்லா வரையறானே, நம்ம ப்ராஜெக்டிலே இவனை யூஸ் பண்ணிக்கலாம்' என்றார். "வருங்காலத்தில் விளையாட்டு" என்ற தலைப்பு எனக்குக் கொடுக்கப்பட்டது. விண்வெளியில் டென்னிஸ், ஒலிம்பிக்ஸில் கில்லிதாண்டு இப்படி என் கற்பனைகளை கார்ட்டூன்களாக வரைந்து தள்ளினேன். மகிழ்ந்து போன மேடம் பலரையும் மாறி மாறி அழைத்து வந்து அவற்றைப் பார்க்கச் செய்தார். கல்லூரியில் "மாணவ இளம்புயல்" என்ற பத்திரிகைக்கு ஆசிரியர், 'திசைகளி'ல் துணை ஆசிரியர், கல்கியில் அரசியல் கார்ட்டூன்கள், விகடன் பொன் விழா போட்டியில் பரிசு இப்படிப் பல உயர்வுகளுக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தது மேடமும், அந்தப் பள்ளியின் முதல்வர்களில் ஒருவராக இப்போது விளங்கும் திருமதி ஹம்சாவும்தான். இப்போது என் நிறுவனத்தில் வேலை செய்பவர்களை எப்படி மானேஜ் செய்வது என்ற கலையைக் கூட மேடத்திடமிருந்து தான் ஏகலைவன் போலக் கற்றுக் கொண்டேன் என்றும் சொல்லலாம்." (இக் கட்டுரையில் வெளியாகியுள்ள திருமதி ஒய்.ஜி.பியின் கார்ட்டூன் சித்திரம் இவர் வரைந்து பள்ளி ஆண்டு மலரில் வெளியானது தான்)

**எஸ். கிருஷ்ணன், ஐ.ஏ.எஸ். (தமிழக அரசு):**

"தவறுகளை சகித்துக் கொள்ளவே மாட்டார் என்ற பெயர் மேடத்திற்குப் பரவலாக உண்டு. ஆனால் மாணவர்களுக்கு நிறைய பேச்சுச் சுதந்திரம் கொடுப்பார். கணக்கிலும், விஞ்ஞானத்திலும் நல்ல மதிப்பெண்கள் பெற்றும் 'ஹியுமானிடீஸ்' பிரிவை நான் மேற்படிப்புக்குத் தேர்ந்தெடுத்ததில் அவருக்கு ஆச்சரியம். அந்தப் பிரிவில்தான் நான் தொடர விரும்புவதாகச் சொல்லி விட்டு நேர்முகத் தேர்வை முடித்து விட்டுக் கிளம்பி விட்டேன். மேடம் அதோடு விடவில்லை. என் வீட்டிற்கு போன் செய்து 'ஏன் கணிதமோ, விஞ்ஞானமோ எடுத்துக் கொள்வில்லை?' என்று கேட்டு என் பெற்றோர் அதில் விளக்கம் அளித்த பிறகே திருப்தி அடைந்தார். அந்த அளவுக்குத் தம் மாணவர்களிடம் தனிப்பட்ட கவனம் செலுத்துபவர் அவர்."

**விஜய் சிவா (இசைக் கலைஞர்):**

"திறமைகளைக் கண்டுபிடிப்பதில் மேடத்திற்கு இணை அவர்தான். எல்.கே.ஜி. படித்துக் கொண்டிருந்தபோது "ரூப் தேரா மஸ்தானா"வை நான் முணுமுணுக்க, அதை கவனித்த ஆசிரியை மேடத்திடம் சொல்ல, மேடம் என் டயரியில் 'உடனே சந்திக்கவும்' என்று என் பெற்றோருக்கு ஒரு குறிப்பை எழுதினார். 'உங்க பையனுக்கு நல்ல குரல் வளம் இருக்குன்னு ஏன் முன்னாலே சொல்லலே?' என்று செல்லமாகக் கோபித்துக் கொண்டார். பிறகு பல கலைவிழாக்களில் பங்குபெறச் செய்தார். சொல்லப் போனால் என் பெற்றோரை விட மேடம்தான் என் இசைத் திறமையை அதிகம் ஊக்குவித்தார் என்பேன்."


சந்திப்பு : **ஜி.எஸ்.எஸ்.**

---

**"எங்கள் தொண்டர்கள் மிகவும் அமைதியான முறையில்தான் பஸ்களை கொளுத்திக் கொண்டிருந்தார்கள். அவர்கள் மீது போலீசார் அந்த நேரத்தில் தடியடி நடத்தி இருப்பது மிகவும் கண்டிக்கத்தக்கது!"**

- நாஞ்சில் கு. நாகராஜன்





**ப்யூன் : "ஃபைலுக்கடியில் இந்த பெருச்சாளி ஒளிஞ்சிருந்தது சார்!"**

**மானேஜர் : குப்புசாமி டேபிளில் ஃபைல் மூவ் ஆகுதுன்னு கேள்விப்பட்டவுடனேயே நினைச்சேன்!**

**—வேதபுரி எஸ். ரமேஷ்**

# கல்லிலே கலை வண்ணம் கண்டான் – தன் கண் பார்வை இழந்தாலும் காணும் விழி கொண்டான்

சிங்கார வேலவன் குடி கொண்டிருக்கும் மூன்று திருத்தலங்கள் சிக்கல் – நாகப்பட்டினத்திலிருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ளது. எட்டுக்குடி – நாகை – திருத்துறைப்பூண்டி பஸ்ரூட்டில் உள்ளது. எண்கண் – நாகை – தஞ்சை பஸ்ரூட்டில் கொடவாசல் எனும் சிறு ஊர் அருகே அமைந்துள்ளது. மூன்று தலங்களுமே தனிச் சிறப்பு வாய்ந்தவை. பாடல் பல பெற்றும் போற்றப்பட்டவை. அத்துடன் மூன்றுமே ஒரு வரலாற்று ஒற்றுமை கொண்டவை இந்த மூன்று முருகன் சிலைகளுமே ஒரே சிற்பியால் ஆனால் வித்தியாசமான சூழ்நிலைகளில் வடிக்கப்பட்டவை. முத்தரசன் என்ற சோழ மன்னன் சிற்பியும் துறவியுமான சில்பா என்பவரிடம் சிக்கல் முருகனின் சிலையை வடிக்கக் கட்டளையிட்டான். அற்புதமாக வடிவமைத்தார் சிற்பி. அதே போன்ற இன்னொரு சிலை இனி எங்குமே செய்யப்படாமலிருக்க அந்தச் சிற்பியின் கட்டை விரலை வெட்டித் தரும்படிக் கேட்டுப் பெற்றான் மன்னன். ஆனால் அந்தச் சிற்பியோ, தன் பெருவிரல் போயும் கூட எட்டுக்குடி வேலவரின் சிலையைச் செவ்வனே செய்து முடித்தார். சீற்றம் கொண்ட அரசன் சிற்பியின் இரு கண்களையும் பறித்து விட்டான். அப்போதும் அயரவில்லை. அந்தச் சிற்பி ஒரு சிறுமியின் துணையுடன் 'எண்கண்' என்ற திருத்தலத்திலுள்ள முருகனையும் கல்லிலே அழகு சொட்ட வடித்தார். மனமானது தெய்வீக இன்பத்தில் திளைக்கும் போது வெளிப்புற அவயங்கள் இல்லாதது இறைவனை அணுகுவதற்கு தடையே அல்ல என்ற உண்மையை எடுத்துக் காட்டினார் அவர். அவரது பக்தியின் பெருமையைப் பறைசாற்ற எண்ணிய முருகன் இழந்த பார்வையை அவருக்கு மீட்டுக் கொடுத்தான். "எனது கண்கள்" என்ற பொருளில் இதனாலேயே இத்தலத்திற்கு 'எண்கண்' என்ற பெயர் வந்தது. முருகன் அருளால் சிற்பி பார்வை கிடைக்கப் பெற்றது அவரது ஞானக்கண்கள் முழுவதுமாய்த் திறந்ததை விளக்கவே. இன்றும் அந்தச் சிற்பியின் கைவண்ணம், பார்ப்பவரும் பக்தர் கூட்டத்தைப் புளகாங்கிதமடையச் செய்கிறது.



சிக்கலில் ஸ்கந்தஷஷ்டி விழாவில் சூரசம்ஹாரத்தின் போது ஒவ்வொரு வருடமும் ஒரு விந்தையான நிகழ்ச்சி நடக்கிறது. சூரபத்மனை அழிக்கத் தன் அன்னை பராசக்தியிடம் வேல் வாங்கிச் சென்று சூரனை அழித்துத் திரும்புகையில் முருகனது நெற்றியிலே வியர்வை முத்துக்கள் அரும்புகின்றன. வெற்றியை அடைவதற்குத் தெய்வீக அருளுடன், வியர்க்க வியர்க்கச் செய்யும் விடாமுயற்சியும் இன்றியமையாதது என்ற உண்மையை ஞானம் தேடி ஓடி வருவோர்க்கு விளக்குவதற்கோ இது? சிற்பி எட்டுக்குடியில் வடித்த சிலை அத்துணை உயிர் துடிப்புடன் அமைந்து, வடித்து முடித்ததும் வியர்வை சிந்தியதாம். அத்துடன் முருகனின் வாகனமான மயில் பறக்க எத்தனித்ததாம். கூடியிருந்த ராஜாவும், பக்கதரும் மயிலை 'எட்டிப்பிடி' என்று கூச்சலிட, அதுவே மருவி 'எட்டுக்குடி' என்ற பெயர் வந்ததென்பர். தைப்பூசம் கழிந்த மறுநாள் சிங்கார வேலவனும் ஆதிநாராயணப் பெருமாளும் ஒரே பந்தலில் அருள் பாலிக்கும் அரிய காட்சியினை எண்கண்ணில் காணலாம். இன்றும் இம்மூன்று திருக்கோவில்களிலும் நடக்கும் காண்பதற்கரிய இத்தகைய நிகழ்ச்சிகளைக் காண மக்கள் ஆயிரக்கணக்கில் திரள்கிறார்கள். சிக்கல், எட்டுக்குடி, எண்கண் என்ற இம்மூன்று கோவில்களுமே நமது முன்னோர் செய்த அருஞ்செயல்களுக்குச் சான்றாக நின்று கொண்டிருக்கின்றன. காலத்தைக் கடந்து இன்றைக்கும் பொருத்தமாக முயற்சி திருவினையாக்கும் என்று பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. இந்தப் பாரம்பர்யத்தை வருங்காலச் சந்ததியினருக்காகப் பாதுகாத்து வழங்குவதில் ஹார்வெஸ்ட் தன்னாலியன்ற பணியினைச் செய்து வருகிறது. இதுபோன்ற வரலாறுகளை எழுதி அனுப்பினால் ஹார்வெஸ்ட் அவற்றை எந்தவித மத வேறுபாடுமின்றி வெளியிடத்தயாராக உள்ளது.


**HARVEST**
BENEFIT FUND LIMITED

புதுமை எண்ணங்கள் கொண்ட நிதி

Insight-1329

**தி. நகர்** : 19, வியாசர் தெரு, (வடக்கு உஸ்மான் ரோடு அருகில்), சென்னை – 600 017. போன் : 8253597, 8281192.
**கிளைகள் : சென்னை : ஆழ்வார்பேட்டை** : போன் 4991552, 4992231, 4991056 **ஜார்ஜ் டவுன்**: போன் 5227891.
**அண்ணா நகர்** : ரூம் நெ. 4, முதல் மாடி, V.S.D. பிளாசா, AA1, 2ஆவது அவன்யு (ரவுண்ட் டானா அருகில்).
**திருவான்மியூர்**: B-11, கீழ்த்தளம், S.D.B. பிளாசா, **கோயம்புத்தூர்** : 444089 **பெங்களூர்** : ABC பில்டிங், முதல் மாடி, 134/4, 11ஆவது கிராஸ், மல்லேஸ்வரம். **பம்பாய்** : போன் 2656965, 2656970. **ஹைதராபாத்**: போன் 846669
**உறுப்பினர் சேவை மையங்கள் : சென்னை : நங்கநல்லூர்** – திரு K. விஜயராகவன், போன் 2343970, **குரோம்பேட்டை** – திரு P.V. சாம்பசிவன், போன் 402708, **புதுக்கோட்டை** – திரு K.S. சேகரமூர்த்தி, போன் 20440, **திருச்சி** – திரு R. ராஜாராம், போன் 468726 **காக்கிநாடா** – திரு K. கிருஷ்ணாராவ், போன் 71396

இந்திய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிதி நிறுவனம். ஸ்தாபிதம் 1987 எங்கள் சேவை உறுப்பினர்களுக்கு மட்டுமே.

**எட்டுக்குடி முருகனின் அழகான படத்தை இலவசமாகப் பெற, எங்களுக்கு எழுதுங்கள்.**

உ
லாபம்

ஹார்வெஸ்ட்

நிதி அந்தஸ்து

உறுதியான தொழில் உறவுகள்

பாதுகாப்பே எங்கள் வலிமை

அக்கறையுடன் சேவை

ஒவ்வொரு செயலிலும் நேர்மை

முழுமையான திட்டங்கள்

தேவைக்கேற்ப திட்டங்கள்

உறுப்பினர் சேவை மையங்கள்

வயது முதிர்ந்தோர் சங்கம்

மதிப்பைப் போற்றும் ஈடுபாடு

நல்லறிவுடன் நாணயம்

வாருங்கள்... முற்றிலும் வேறுபட்ட சிறந்த சேவையைப் பெறுங்கள்

பூஜைக்கு முன்னரே பேசத் தொடங்கி விட்டார்கள் - காரணம் மூன்று. 1. ஏவி.எம்மின் பொன் விழா ஆண்டுப் படம், 2. இன்றைய தேதியில் இரு பெரிய விண்மீன்கள் (பி.தேவா, அ.சாமி) இணைந்து நடிக்கிறார்கள். மூன்றாவது - முக்கியமான காரணம். 'பம்பாய்' பரபரப்பாளர் ராஜீவ் மேனன் முதல் முறையாக இயக்கும் படம். டைட்டிலை கவனிக்க - மின்சார(க்) கனவு. என்ன அர்த்தம்? வெள்ளித் திரையில் காண்க!

ஏவி.எம். மூன்றாவது தளத்தில் நடந்த இந்தப் படத்தின் பூஜையில் சாதாரணமாக, சினிமா பூஜைகளில் காண முடியாத சில ஆச்சர்யங்கள். பெரிய பிரும்மாண்டம் இல்லை. கட்-அவுட்கள் இல்லை. ஸ்பீக்கர் வைத்து சொற்பொழிவு இல்லை. படு சைலண்ட்.

நுழைவாயிலில் வழக்கம் போல் கைகட்டிப் புன்னகைக்கும் சரவணன். நாற்காலிக்குப் போகாமல் நின்றபடிக்கு அடிக்குரல் அரட்டையில் பாரதிராஜா, வைரமுத்து, நெப்போலியன். அத்தனை பேரையும் நலம் விசாரிக்கும் எஸ்.பி. முத்துராமன். அம்மா கைப்பிடித்துக் கொண்டு மோகனப் புன்னகையுடன் மிதந்து வந்து, வலிக்காமல் உட்கார்ந்து (நாற்காலிக்கு), சிரித்துச் சிரித்துச் சிறையிலிட்ட மீனா.


"நான் லேகப்பட்ட ஆளா? உக்கார வெச்சி வேலை வாங்கிட்டனில்லை?" என்று யாரைப் பற்றியோ, யாரிடமோ சொல்லிக் கொண்டிருந்த மீசை மோன். கூடியவரையில் பத்திரிகையாளர்களிடமிருந்து நழுவ முயன்று கொண்டிருந்த பிரபுதேவா. மிகவும் நரைத்து விட்ட தாடியுடன் அன்னாரின் அப்பா சுந்தரம். ஆச்சர்யம் - ஏ.ஆர். ரகுமான். அதுவும் டென்ஷனில்லாமல் சிரித்துப் பேசிக் கொண்டு.

கடைசியில் காஜோல் வந்தார். கனவுப் படத்தின் கதாநாயகி. வெல்வெட்டு ஆடையும் கல்வெட்டுப் பார்வையும் புல்மொட்டு நீர் போலப் புதுப் புன்னகையுமாக. நிறைய போட்டோக்காரர்களை அனுமதித்தார். பேனாக்காரர்கள்? மூச். "குட் டீம். குட் பேனர்" - ஏவி.எம். பற்றியும் படம் பற்றியும் காஜோல் உதிர்த்த முத்துச் சொற்கள்.

இயக்குநராகி இருக்கும் ஒளிப்பதிவாளர் ராஜீவ் மேனன், பத்திரிகையாளர்களிடம் பேச மறுக்கிறார் என்று பரவலாகச் சொன்னார்கள்.

"ஏன் சார், அப்படியா?" என்ற போது, "சேச்சே, வாங்க பேசலாம்!" என்று ஏவி.எம்மிலேயே தமக்குப் புதிதாக அலாட் ஆகியிருக்கும் விஸ்தாரமான அறைக்குக் கூட்டிப் போனார்.

சுவரில் ஒட்டப்பட்டிருந்த படத்தின் சில ஸ்டில்கள் தவிர ஒரு செட் டேபிள்-சேர். சில சோபாக்கள் டீவி. ஒலிக்கும் டெலிபோன். ஒரு வேர்ட்-பிராசஸர் - கம்ப்யூட்டர். ஸ்கிரிப் எழுத. பேனாவுக்குப் பதிலாக.



"புதிதாக வந்திருக்கும் ஒரு டைரக்டரிடம் என்னவெல்லாம் கேட்கலாம்? எடுத்த உடனே, 'நீங்கள் காஜோலை எங்கே சந்தித்தீர்கள்? எந்த ஓட்டல் அறையில்? காஜோல் இனி தமிழ்ப் படங்களில் நடிப்பாரா?' – இப்படியெல்லாம் கேட்கிறார்கள். நான் எங்கே சந்தித்தேன், ஏன் தேர்ந்தெடுத்தேன் என்பதா முக்கியம்? தவிர, அவர் இனி நடிப்பாரா, மாட்டாரா என்பதெல்லாம் எனக்கு எப்படித் தெரியும்? நான் காஜோலின் செகரட்டரியா என்ன? இது போன்ற கேள்விகளால் யாருக்கு என்ன லாபம்? அதான், படம் முடிகிற வரை பேட்டி எதுவும் வேண்டாம் என்று சொல்லி விட்டேன். உடனே, 'முதல் படத்திலேயே இத்தனை பந்தா' என்று எழுதி விடுகிறார்கள். வருத்தமாக இருக்கிறது."

ஆறுதல் சொல்லி, அலைவரிசை மாற்றவும், சட்டென்று உற்சாகம் பற்றிக் கொண்டு, நிறைய பேசினார்.

"என் வாழ்க்கையில் ஏன் என்று புரியாமலே பல சம்பவங்கள் நடந்து விடுகின்றன. மணிரத்னம் ரோஜாவில் நடிக்கக் கூப்பிட்டார். மறுத்து விட்டேன். ஏன் மறுத்தேன்? தெரியாது. அதே மணிரத்னம், பம்பாயில் ஒளிப்பதிவு செய்யக் கூப்பிட்டார். 'சினிமாவே வேண்டாம். Ad films போதும்' என்ற முடிவில் இருந்தவன், மணி கூப்பிட்டதும் ஒப்புக் கொண்டேன். ஏன் ஒப்புக் கொண்டேன்? தெரியாது. ஒளிப்பதிவாளனாகப் பெயர் வாங்கியவனை ஏவி.எம். சரவணன் கூப்பிட்டுத் தம் பொன் விழா ஆண்டுப் படத்தை இயக்கித் தரச் சொன்னார். கடுமையாக மறுத்தேன். 'எதற்கு விஷப் பரீட்சை' என்று விலக நினைத்தேன். ஆனாலும் இன்று படம் தொடங்கி விட்டேன். தன்னால் என்னென்னவோ நடக்கிறது!"

"சரவணன் ஏன் உங்களைத் தேர்ந்தெடுத்தாராம்? கேட்டீர்களா?"

"பொன் விழா ஆண்டு: இளமையான ஒரு படம், இளைஞர்களுக்காக எடுக்க வேண்டும் என்பது அவர் விருப்பம். ஓர் இளம் இயக்குநரை அறிமுகப்படுத்த விரும்பியிருக்கிறார். ஏ.ஆர். ரகுமான்தான் சரவணனிடம் என்னைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். முதலில் 'வேண்டவே வேண்டாம்' என்றுதான் என்னை அணுகிய சரவணனிடம் சொன்னேன். அவரும் ரகுமானும் மணிரத்னமும் மாறி மாறி கன்வின்ஸ் செய்து, ஒப்புக் கொள்ளப் பண்ணி விட்டார்கள்."

"ஏன் மறுத்தீர்கள்? இது பெரிய வாய்ப்பு இல்லையா?"

"கூடாது என்பதல்ல. என் பிஸினஸ் இருக்கிறது. பிரதி மாதமும் கணிசமான விளம்பரப் படங்கள் எடுத்தாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன். சினிமா என்பது லாங்-டைம் ப்ராஜெக்ட்: தவிர இயக்குநர் வேலை சாதாரணமல்ல. பாருங்கள், இப்போது ஆரம்பித்திருக்கிறேனா? இன்னும் எட்டு மாதங்கள். வேறு நினைவே இல்லாமல் பணியாற்ற வேண்டும். என் தனிப்பட்ட விருப்பு-வெறுப்புகள், தொழில் சகலத்தையும் கொஞ்சம் மறந்து விட வேண்டும்."

"அது சரி: ஒளிப்பதிவாளர்களின் அடுத்த பரிமாணம் இயக்குதல் தானா? சினிமாவிலேயே, டைரக்ஷன் துறைக்கு ஒளிப்பதிவாளர்கள் நிறைய வரும் அளவுக்கு எடிட்டர்களோ, ஒலிப்பதிவு, நடனம், கலை இயக்குநர்களோ வருவதில்லை. தவிர,

# இளமை + அனுபவம்: ஒரு புதிய கூட்டணி!



* ராஜீவ் மேனன்



## "எனக்கு சினிமா என்பது பிசினஸ்!"

ஏ.வி.எம்முக்கு இது பொன் விழா ஆண்டு. தேசப்பற்று, சமூக சீர்திருத்தம் போன்ற நல்ல விஷயங்களையெல்லாம் தமது ஆரம்ப காலப் படங்களின் அடிநாதமாகக் கொண்டு தயாரித்த இந்நிறுவனம், பின்னாளில் வழக்கமான மசாலா மாயையில் மூழ்கிப் போய் விட்டது ஏன்? துணிந்து ஏன் ஒரு கிளாஸிக் படம் தரக் கூடாது? ஏவி.எம். சரவணன் அளித்த பிரத்யேக பேட்டி :

"கிளாஸிக் படமா? '75-க்குப் பிறகு அதெல்லாம் சாத்தியமில்லாத விஷயங்களாகி விட்டன. போட்டி அதிகரித்து, டீவி, கேபிள் டீவி, வீடியோ என்று பொழுதுபோக்கை வீட்டுக்கே கொண்டு வந்து கடை விரிக்கும் சாதனங்கள் பெருகி விட்ட சூழ்நிலையில், தியேட்டருக்கு மக்களைக் கூட்டி வருவதே பெரும் பிரச்னையாக இருக்கிறது. வியாபாரரீதியில் ஒரு நிச்சயமற்ற தன்மை நிலவுகிற சூழ்நிலையில் 'ஸர்வைவலு'க்கு முதலில் வழி தேடிக் கொண்டிருக்கிறோம். சமூக நோக்கமெல்லாம் இரண்டாம்பட்சம்தான். உண்மை நிலை இதுதான். ஒரு பகுதி ரசிகர்கள், தியேட்டருக்கு வருவதையே முற்றிலும் நிறுத்தி விட்டார்கள். 86-ல் 'சம்சாரம் அது மின்சாரம்' எடுத்தேன். இன்று அப்படி ஒரு படம் எடுக்க நிச்சயம் யோசிப்பேன். காரணம், டிரெண்ட் மாறி விட்டது. எதிலும் வேகம், முழுமையான பொழுதுபோக்கு எதிர்பார்க்கிறார்கள். அந்த எதிர்பார்ப்பிலிருந்து ஒரு சதம் விலகினாலும் படத்தை நிராகரித்து விடுகிறார்கள். வெளிப்படையாகச் சொன்னால், சினிமா உலகம் 'எதைச் செய்தால் பிழைக்கலாம்' என்று தத்தளித்துக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் ஒரு ஜனரஞ்சகப் பொழுதுபோக்குப் படத்தைத் தவிர, வேறெதையும் எதிர்பார்க்காதீர்கள்.

"வெளிப்படையாகச் சொல்கிறேன். எனக்கு ரிஸ்க் எடுக்கவெல்லாம் விருப்பமில்லை. எனக்கு சினிமா என்பது பிஸினஸ். போட்ட பணத்தை எடுக்க முயல்கிற யுத்தம். முன்பெல்லாம் 10–12 வருடங்களுக்கு ஒருமுறை டிரெண்ட் மாறும். இன்று ஆறு மாதத்துக்கு ஒரு புது டிரெண்ட்! காலத்தை அனுசரித்துப் போவதுதான் புத்திசாலித்தனம், இல்லையா?"

பெரும்பாலான ஒளிப்பதிவாளர்கள், இயக்குநராகத் தோல்வியையே சந்திக்கிறார்கள்...."

"இது கொஞ்சம் சிக்கலான விஷயம்தான். டைரக்ஷனுக்கு, மற்ற துறையினரை விட ஒளிப்பதிவாளர்கள் ஏன் நிறைய வருகிறார்கள் என்பதற்கு உறுதியான பதில் சொல்வது கஷ்டம். ஆனால் அவர்கள் வெற்றி அடையாததற்குக் காரணம் சொல்லலாம். ஒரு சினிமாவின் வெற்றி, அதன் ஸ்கிரிப்டைப் பொறுத்தது. visual design என்பது வேறு. ஸ்கிரிப்ட் வேறு. visual design does not need a writer. ஓர் ஒளிப்பதிவாளர், ஒரு காட்சியை எப்படியெல்லாம் சிறப்பாக visualise பண்ணலாம் என்பதில் அதிக கவனம் செலுத்துவார். அந்த சிந்தனையின் ஆதிக்கத்தில், ஸ்கிரிப்டைக் கோட்டை விட்டு விட நேரும். லொகேஷனுக்குப் போன பின் காட்சி பற்றி யோசிக்கிறார்கள். இதனால்தான் ஒளிப்பதிவாளர்கள் இயக்கும் படங்கள் பெரும்பாலும் வெற்றி பெறுவதில்லை. ஆனாலும் பாலுமகேந்திரா போன்றவர்கள் இரண்டிலும் சாதனை படைத்திருப்பதைக் கவனிக்கலாம்."

"அவரால் கூட, 'வீடு' போன்ற கலைப் படத்தில் தர முடிந்த வெற்றியை, அவரது சமீபத்திய கமர்ஷியல் படங்களில் தர முடியவில்லையே?"

"கமர்ஷியல் படம் என்று வந்து விட்டாலே, சமரசங்கள் தவிர்க்க முடியாததாகி விடுகின்றன. இதற்கு யாரும் விலக்கல்ல. அப்படியும் கூட அவர் ஜெயித்திருக்கிறார். மூன்றாம் பிறை ஓர் உதாரணம்."

"வெகுஜன ரசனைக்கு மட்டுமே முக்கியத்துவம் தரும் ஏவி.எம். படத்தை இயக்குகிறீர்கள். மின்சாரக் கனவு என்ன மாதிரிப் படமாக இருக்கும்?"

"சந்தேகமே இல்லை. out-and-out. கமர்ஷியல் படம்தான். ஆனால் அபத்தங்கள் இருக்காது. முழு நீள காமெடி கதை. ஆனால் காமெடியன்கள் கிடையாது. ரொமான்டிக் ஹ்யூமர் என்று வைத்துக் கொள்ளுங்கள்."

"சாதாரணமாக இரண்டு ஹீரோக்கள் நடிக்கும் படங்கள் – தமிழைப் பொறுத்தவரை அதிகம் வெற்றி அடைந்ததில்லை. அதுவும் நீங்கள், முற்றிலும் மாறுபட்ட இருவேறு 'இமேஜ்' உள்ள பிரபுதேவாவையும் அரவிந்த்சாமியையும் போட்டிருக்கிறீர்கள். எந்த தைரியத்தில்?"

"சினிமா உலக சென்ட்டிமென்ட்களில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஒரு ஹீரோ இருந்தால் ஒரு வில்லன் இருக்க வேண்டும் என்பது யார் போட்ட சட்டம்? இரு வேறு துருவங்கள் உரசும் போது எழும் 'தீப்பொறி'க்காகத்தானே, அப்படி ஒரு செட்-அப்? என் படத்தில் வில்லனுக்கு பதில் 'பாஸிடிவ்', 'நெகடிவ்' துருவங்களில் இரு மாறுபட்ட இமேஜ் உள்ள ஹீரோக்களை நிறுத்துகிறேன். உரசும் போது மின்சாரம் தன்னால் எழும்தானே? இது ஒருபுறம் இருக்கட்டும். அடிப்படையில், எல்லோரும் செய்வதையே நானும் செய்ய விருப்பமில்லை. பரீட்சைகளில் எனக்கு ஆர்வமுண்டு. முடிவுகளில் அல்ல!"

"சென்ட்டிமென்ட் பற்றிக் கவலைப்படாத நீங்கள், 'மின்சாரக் கனவி'ல் 'க்'கை நீக்கியிருப்

# Sree Krishna

## CUT PIECE COLLECTION PVT. LTD.

**THE SHOP FOR WHOLE FAMILY**
**39 GODOWN STREET, MADRAS - 1 PH: 589596**

**Manufacturers, Wholesalers & Retailers**

**EXCLUSIVE FOR READY MADE**
**EXCLUSIVE MATCHING BLOUSES**
**EXCLUSIVE FOR UNIFORM**

specialists in suitings, shirtings, cut-pieces, summer cotton sarees, madurai chungudi cotton, belgaum pattu silks, benaras silks, venkatagiri bengal cotton and churidar

Avail 10% Discount till Pongal.
Shop open on all Sundays till Pongal. Even at midnight



# முழுமையான பாதுகாப்பிற்கு

பிக்சட் டெபாசிட்
ரூ. **10,000/-**

**25%**
வருட வட்டி

+ 2 கிராம்
தங்க நாணயம்
+ 3% ஊக்கத்
தொகை

**Rs. 10,000/-** முதல்
**Rs. 3,00,000/-** வரை சீட்டு
குருப்புகள் சேர்க்கப்படுகின்றன

மாதம் **Rs. 200/-**
சுலபத் தவணையில்
ஒரு வீட்டுமனை

## ஸ்ரீ மாரியாஸ்

சிட்ஸ் (பி) லிட், I.C. No. 18 - 32565 / 95
பைனான்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ்
எஸ்டேட்ஸ்

H.O. & Regd. : No. A-20, S.V.V.காம்ப்ளக்ஸ், (சிப்பி தியேட்டர் எதிரில்), சாஸ்திரி ரோடு,
தில்லை நகர், திருச்சிராப்பள்ளி - 620 017. போன்: 496457, 33076

Branch off. : No. 27, சாந்திவிஹார் காம்ப்ளக்ஸ், 140, ராயப்பேட்டை ஹைரோடு, லஸ்கார்னர்,
மைலாப்பூர், சென்னை - 600 004. போன் : 8526806 (Sunday Working Day)
162/A. A.A.S. காம்ப்ளக்ஸ், நவல்பட்டு ரோடு, திருவெறும்பூர் - 13.

## ‘சுருக்-நறுக்’கென்று ஒரு சொல்லோவியம் – 12

# ரசிகன் என்பவர்....

ரசிகன் என்றால் சினிமா ரசிகன் அல்லது ரசிகையாகத்தான் இருக்க வேண்டும் என்கிற கட்டாயமில்லை. இசையை, இயற்கையை, அழகை, வாழ்க்கையை என்று எத்தனையோ பரிமாணங்களில் ரசிப்புத் தன்மையைக் காட்டுபவர்கள் இருக்கிறார்கள். அந்த வகையில் ரசிகன் என்பவர் யார்? எப்படிப்பட்டவர்?

கீழுள்ள கூப்பனில் ‘சுருக்-நறுக்’ என்று ஒரு சொல்லோவியத்தை எழுதியனுப்புங்கள். பிரசுரமாகும் ஒவ்வொன்றுக்கும் ரூ. 50 பரிசு. 26 வாரப் போட்டிகளில் அதிக முறை பரிசு பெறும் ஒருவருக்கு மெகா பரிசாக ஒரு ஜோடி டைட்டன் கைக்கடிகாரங்கள்!

முடிவு தேதி : 8.1.96

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

– ஆர்.

ரசிகன் என்பவர்..........................................................

..........................................................

..........................................................

..........................................................

..........................................................

பெயர் : ..........................................................

முகவரி : ..........................................................

..........................................................

..........................................................

..........................................................

பது பற்றி?”

“எனக்கும் அதற்கும் சம்பந்தமில்லை. அது பிறர் விருப்பம். ஏழு எழுத்து, எட்டு எழுத்து என்று ஏதோ கணக்குச் சொல்கிறார்கள். பிடிக்கிறதோ, இல்லையோ – சிலவற்றை நம்மால் தவிர்க்க முடியாது இந்தத் துறையில். தவிர, தலைப்பில் என்ன இருக்கிறது? Infact, மின்சாரக் கனவுகள்' என்றுதான் வைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன்.”

“உங்கள் படத்துக்கு, நீங்கள் ஒளிப்பதிவு செய்யாததன் காரணம் புரிகிறது. ஆனால் உங்கள் நிழலாக, உங்களிடம் பயின்று, இன்று பிரபலமாகவும் இருக்கும் பல இளைஞர்களை விடுத்து, வேணுவை ஒளிப்பதிவுக்காக அணுகியது ஏன்?”

“முதலில் என் குரு அசோக்மேத்தாவைத்தான் கூப்பிட்டேன். அவர் பயங்கர பிஸி. என் படத்துக்கு நேரம் ஒதுக்குவது கஷ்டம் என்று புரிந்தது. அதனால் வேணு... வேணுவை நான் அணுகியதற்குக் காரணம், அவரது தொழில் நேர்த்தி. ‘குணா’வில் பார்த்திருப்பீர்கள். ஒளிப்பதிவுக்காக மட்டும் நான்கு முறை தேசிய விருது வாங்கியவர். மிகச் சிறந்த கலைஞர். இன்னொரு விஷயம் – காமெராமேன், தன்னிச்சையாக இயங்க வேண்டும். அதே சமயம், டைரக்டரின் எண்ண ஓட்டம் புரிந்தவராக. அவரைக் கவனித்துக் கொண்டே இருக்கும் வேலை இயக்குனருக்கு இருக்கக் கூடாது. இது எல்லோருக்கும் சாத்தியமில்லை. அப்படித் தன்னிச்சையாக மணிரத்னம் என்னை ‘பம்பாயில்’ இயங்க விட்டதால் தானே, அந்தப் படத்தில் ஓரளவு சிறப்பான ஒளிப்பதிவைத் தர முடிந்திருக்கிறது?”

“சினிமா தொடங்கி நூறு வருஷங்கள் ஆகிவிட்டன. வருஷம் தோறும் நூற்றுக்கணக்கான படங்கள் வருகின்றன. இன்னமும் தமிழில் தரமான படங்களை விரல் விட்டு எண்ணும் படியான சூழ்நிலையே இருக்கிறது. யோசித்திருக்கிறீர்களா, இது பற்றி?”

“யோசிக்காமலா? உங்களைப் போலவே எனக்கும் இது வேதனையான வியப்புதான். இதற்கு, இதுதான் காரணம் என்று எதையும் குறிப்பிட முடியாது. தரமான கதை – இலக்கியப் பின்னணி நம் படங்களுக்கு இல்லை. எழுத்தாளர்களுக்கும் சினிமாக்காரர்களுக்கும் நடுவே ஒரு திரை இருக்கிறது. தமிழில் வெளிவருகிற பல நல்ல இலக்கியப் படைப்புகளை, தயாரிப்பாளர்கள் படமாக்கத் துணிந்து முன் வந்தாலொழிய இந்தக் கேள்விக்கு விடை சாத்தியமில்லை...”

பேட்டி : **ஔரங்கசீப்**

ராஜீவ் மேனன் அட்டை வண்ணப்படமும் படமும் : **கிருஷ்ணமூர்த்தி**

உணவே மருந்து! மருந்தில்லா மருத்துவ ஆய்வு நூல்! மருந்தே உணவு!

பச்சைக் காய், கனிகள் உண்போம்! பற்பல நோய்களையும் போக்குவோம்!

# இயற்கை உணவே நோய் தீர்க்கும் மருந்து

இரண்டாம் பதிப்பு விலை ரூ. 100

ஆசிரியர் : இயற்கை உணவு நிபுணர் : மூ. ஆ. அப்பன்

(இவர் இயற்கை உணவுச் சித்தர், சிவசைலம் நல வாழ்வு ஆசிரம ஸ்தாபகர், தேங்காய் பழ சுவாமிகளின் பிரதம சீடரும் தம்பியும் ஆவார்)

மருந்து மாத்திரைகள் இல்லாமல், பக்க விளைவுகள், பின் விளைவுகள் இல்லாமல் அறுவை சிகிச்சைகள் இல்லாமல் இயற்கை உணவுகளை அதாவது பச்சைக் காய், கனிகளை மட்டுமே உண்டு எப்படிப்பட்ட நோயாயினும், எவ்வளவு நாட்பட்ட நோயாயினும், மொத்தத்தில் டாக்டர்களால் கைவிடப்பட்ட தீராத நோய் எதுவாயினும் தீர்த்துக் கொள்ள முடியும் என்பதற்கு இந்நூல் ஓர் ஆதாரம்.

முடி உதிர்தல், தீராத தலைவலி, குடிப்பழக்கம், நாட்பட்ட மலச்சிக்கல், மூலம், அல்சர், அலர்ஜி, சைனஸ், சுசனோபீலியா, அப்பெண்டிக்ஸ் போன்ற சிறிய நோய்களினின்றும், தொழுநோய், இரத்த அழுத்தம், ஆஸ்துமா, நீரிழிவு, ஆர்த்தரிடிக் ரொமாட்டிஸம், வலிப்பு, காசம், புற்று, எய்ட்ஸ், இதய நோய், சிறுநீரக நோய், ஆண்மைக் குறைவு, நரம்புத் தளர்ச்சி, மலடு, மனநோய், வெண்குஷ்டம் போன்ற பெரிய நோய்களினின்றும் விடுதலை பெறலாம் என்றால் நீங்கள் நம்பத்தான் மாட்டீர்கள். ஆனால் அவ்வளவும் உண்மை. உண்மை. உண்மையேதான். அனைத்துக்கும் ஆதாரம் உண்டு! உண்டு! அனுபவக் கடிதங்கள் மூலமாக உண்மைகளை வெளிப்படுத்துகிறார் ஆசிரியர்.

ஆசிரியரே ஒரு தொழு நோயாளியாக இருந்து பிணி நீங்கப் பெற்றவர் என்பதே இயற்கை உணவுக் கொள்கைக்கு ஒரு சிறந்த அத்தாட்சியாக அமைகிறது. அவர் தாம் நலமடைந்த விவரத்தையும் மேற்கொண்ட உணவு முறையையும் நூலில் விளக்குகிறார்.

எந்தெந்த நோய்க்கு எந்தெந்தக் காய், கனிகள் உண்ண வேண்டுமென்று இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது ஒரு தனிச் சிறப்பாகும். எனவே, உங்களுக்கு நீங்களே மருத்துவராகி உங்கள் நோய் எதுவாயினும் போக்கிக் கொள்ளலாம் என்பது உறுதி.

எனிமா, சுரத் துணிப்பட்டி, சுரமண் துணிப்பட்டி, இடுப்புக் குளியல், முதுகுத் தண்டுக் குளியல், மண் குளியல், வாழையிலைக் குளியல், சூரிய ஒளிக் குளியல், நீராவிக் குளியல், காந்த சிகிச்சை, கோதுமைப் புல்சாறு மருத்துவம், அறுகம்புல் சாறு மருத்துவம், முளைகட்டிய தானிய சாறு மருத்துவம், சிறுநீர் மருத்துவம் ஆகிய மருத்துவ வகைகள் யாவும் விளக்கப்பட்டுள்ளன. இயற்கை நலவாழ்வு வாழ விரும்புவோருக்கும் தீராத பிணிகளுக்கு உட்பட்டு தீர்வு திசை தெரியாமல் அலைபாயும் பிணியாளர்களும் இந்நூல் வழிகாட்டும் ஒளிவிளக்காய் அமையும் என்பது திண்ணம்.

புத்தகத்தைப் படிக்க உண்மைகளை நீங்களே உணருவீர்கள். இன்னும் என்ன யோசனை? என்னடா நோய் ஒன்றும் இல்லாதபோது இந்தப் புத்தகத்தை ஏன் வாங்க வேண்டும் என்று நினைக்கிறீர்களா; பிணியாளர்களுக்கு மட்டுமல்ல சார்! உங்களுக்காகவும்தான் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

இயற்கை உணவுகளை - பச்சைக் காய், கனிகளை உண்டு உங்களது, உங்கள் குடும்பத்தாரது, ஆரோக்கியத்தை மேம்படுத்திக் கொள்ளக் கூடாதா? நோய் வருமுன் காக்கக் கூடாதா? உங்கள் நலம் கருதி உங்களுக்காகவே இந்நூல் எழுதப்பட்டுள்ளது. நீங்கள் அன்றாடம் உண்ணும் காய், கனிகளைக் கொண்டே எப்பேர்ப்பட்ட நோய்களையும் போக்கிக் கொண்டு விடலாம். தொழுநோயே குணமாகிவிட்ட பிறகு மற்ற நோய்களைப் பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்? நிச்சயம் குணம் காணலாம். கவலையே வேண்டாம். இந்நூலைப் பெறுங்கள். வழிமுறைகளைக் காணுங்கள். இயற்கை உணவைக் கொள்ளுங்கள். இன்பம் அடையுங்கள். இப்போது இந்நூல் இரண்டாம் பதிப்பாக விற்பனையாகிறது. முதற் பதிப்பு நூலைப் பெற்றவர்கள் ஏகோபித்துப் பாராட்டுகிறார்கள். பலர் நோய் நீங்கி வாழ்கிறார்கள். வாயார வாழ்த்துகிறார்கள்.

தனிப்பிரதி விரும்புவோர் புத்தக விலையோடு தபால் செலவிற்கு ரூ. 5 சேர்த்து M.O. அனுப்பவும். வி.பி.பி. செலவு தனி. புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்.

## ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ்,

2, முத்துக்கிருஷ்ணன் தெரு, த.பெ. எண். 1040, பாண்டி பஸார், தி.நகர், சென்னை - 17. தொலைபேசி : 8281902.

# சைவம் சாப்பிட்ட பாகிஸ்தான் வீரர்கள்!

**எஸ்.ஏ.எஃப். ரவுண்ட் அப் :**

● நுங்கம்பாக்கம் டென்னிஸ் அரங்கம். ஆட்டக்காரர்களுக்கு தாகமோ தாகம். "குடிக்க மினரல் வாட்டர் இருக்கா?" - கேட்டுக் கேட்டு அலுத்து விட்டார்கள். "மினரல் வாட்டர் சப்ளை பண்ணுவது எங்கள் சோலி இல்லை. வரும்போது விளையாட்டு கிராமத்திலிருந்து நீங்களாகவே எடுத்து வந்திருக்க வேண்டும்" - இது நிர்வாகிகள் அளித்த பதில்! அப்புறம் எழுந்த கசமுசாக்களும் அவசரமாக சில பாட்டில்கள் மினரல் வாட்டர் வாங்கி வந்து சமாளித்ததும் பிற்சேர்க்கை செய்திகள்.

● நேரு ஸ்டேடியத்தில் கால்பந்துப் போட்டிகள் தொடங்கவிருந்த சமயம். தருவிக்கப்பட்டிருந்த பந்துகளை மேட்ச்களில் பயன்படுத்தக் கூடாது; பயிற்சிக்கு மட்டுமே பயன்படுத்தலாம் என்று பொறுப்பாளர் கடைசி நிமிடத்தில் 144 போட்டு விட (ஏனென்று யாருக்கும் தெரிய வில்லை!) பயங்கர டென்ஷன். ஏற்பாடுகளில் இத்தனை குளறுபடியோ என்று வீரர்கள் முகம் சுளிக்க, இறுதியில் பங்களாதேஷ் மற்றும் சில நாடுகள் தாம் கொண்டு வந்திருந்த பந்துகளைத் தந்துதவ, ஒருவழியாகப் போட்டிகள் நடந்தன.

● வேளச்சேரி நீச்சல் அரங்கில் இரண்டு குளங்கள் வெட்டி, கட்டி இருக்கிறார்கள். ஒன்று போட்டிக்காக. (சர்வதேச தரத்தில் இரண்டு மீட்டர் ஆழத்துடன்.) இன்னொன்று, பயிற்சிக்காக.

"பயிற்சிக்கு வெட்டிய குளத்துக்கு ஒரு மீட்டர் ஆழம் போதுமே? இந்த SAF கேம்ஸ் முடிந்ததும் நீச்சல் பயில, மாணவர்களுக்கு உதவியாக இருக்குமே? அதையும் ஏன் இரண்டு மீட்டர் ஆழத்துக்கு வெட்ட வேண்டும்?" என்று கேட்டார் பஹுஜா. சர்வதேச நீச்சல் புள்ளியியல் குழு உறுப்பினர் இவர்.

● நீச்சல் குளத்துக்குத் தண்ணீர் சப்ளை எப்படித் தெரியுமா? லாரி லாரியாக மெட்ரோ வாட்டர்! காக கொடுத்தாவது குடம் தண்ணீருக்கு ஆலாய்ப் பறக்கும் சென்னைவாசிகளின் வயிற்றில் போகி சொக்கப்பனை. அதுசரி, போட்டிகள் முடிந்த பிறகும் மெட்ரோ வாட்டர் சப்ளை தொடருமா என்ன?

---

**பாரதிய ஜனதா கட்சியின் பொதுச் செயலாளர் கே. என். கோவிந்தாச்சார்யா சமீபத்தில் சென்னை வந்திருந்தபோது கல்கிக்குப் பிரத்தியேக பேட்டி அளித்தார். அதிலிருந்து...**

***மாநில முதல்வர்களை தில்லியிலிருந்தே நியமிப்பது காங்கிரஸ் கலாசாரம். குஜராத்தில், பா.ஜ.க.வும் இதனைப் பின்பற்றியிருப்பது கட்சியின் இமேஜுக்கு பாதிப்புதானே?***


குஜராத் சம்பவங்கள் பா.ஜ.க.வின் இமேஜை ஓரளவு பாதிக்கத்தான் செய்தன. 'தேர்தலில் வெற்றி' என்பது எந்த ஒரு கட்சிக்கும் மிக முக்கியமான விஷயம். குஜராத் தேர்தலில் எப்படியும் வென்றுவிட வேண்டும் என்று விரும்பினோம். அதனால், தேர்தலுக்கு சில நாட்கள் முன்பாக மட்டுமே கட்சியில் சேர்ந்து, பாடுபட்ட ஒருசிலருக்கு சீட் தந்தாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அவர்கள் ஜெயித்து சட்ட சபைக்கு வந்து விட்டார்கள். இதனால் பழைய ஆட்களுக்கு மனவருத்தம். விளைவாகக் குழப்பங்கள்.



***உ.பி.யில் கிடைத்த பஞ்சாயத்துத் தேர்தல் வெற்றிகள், முலாயம்சிங், மாயாவதி ஆட்சியில் மக்கள் அடைந்த அதிருப்தியின் எதிரொலிதானே? இதில் பா.ஜ.க.வுக்கு என்ன பெருமை!***

உ.பி. வெற்றி, முழுக்க முழுக்க நெகடிவ் வோட்டுக்களால்தான் என்று சொல்ல முடியாது. முலாயம்சிங், மாயாவதி ஆட்சி, மக்கள்

● பெண்களுக்கு இந்த முறை நீச்சல் போட்டிகள் இல்லை. காரணம்? குறைந்தது நான்கு நாடுகளாவது கலந்து கொண்டால்தான் ஒரு போட்டி நடத்தலாம் என்பது விதி. ஆனால் பாகிஸ்தானும் பங்களாதேஷும் தங்கள் நாட்டுப் பெண்களை நீச்சல் உடையில் அனுமதிப்பதில்லை என்பதால் அணிகள் இல்லை!



• வேளச்சேரி நீச்சல் குளம்!

● வெள்ளை ஸ்கர்ட்டில் மட்டுமே டென்னிஸ் வீராங்கனைகளைப் பார்த்துப் பழகியவர்களுக்கு பாகிஸ்தான் டீமைப் பார்க்க, வெகு ஆச்சர்யம். ஹலிமா – நோஷின் ஜோடி, ஸ்கர்ட்டுக்குப் பதில் ஸல்வார் கம்மீஸ் அணிந்து ஆடி அசத்தினார்கள்.

● விளையாட்டு வீரர்களுக்காக ஆறாயிரம் கிலோ மட்டன், நாலாயிரம் கிலோ சிக்கன், மூவாயிரம் முட்டைகளுக்கு ஆர்டர் தரப்பட்டிருக்கிறதாம். கிச்சன் பக்கம் ஒரு ரவுண்ட் வந்ததில், பங்களாதேஷ் வீரர்களுக்கு, மேட்ச்சுக்கு முன் கட்டாயம் மாட்டிறைச்சி, நூடுல்ஸ் தேவை என்பதும் பாகிஸ்தானியர்கள் சுத்த சைவம் என்பதும் தெரிய வந்தது.

● வேளச்சேரி நீச்சல் குளத்தில் ஓர் ஆறு வயதுப் பையன், "அந்த அங்கிள் நீச்சல்ல ஜெயிக்கணும்னு மொட்டை போட்டுக்கிட்டு வந்திருக்காரா?" என்று தன் தந்தையிடம் சந்தேகம் கேட்டுக் கொண்டிருந்தான். நீச்சலில் இந்தியா தங்கங்கள் வெல்ல உதவிய செபாஸ்டின் சேவியர்தான் பதில் சொல்ல வேண்டும்.

**— மௌலி, ஜி.எஸ்.எஸ்.**

படம் : **கிருஷ்ணமூர்த்தி**

---

# தமிழக சட்டசபைக்கு பா.ஜ.க. வரும்!

விரோத ஆட்சிதான் என்பதை மக்கள் உணர்ந்து இருக்கிறார்கள். அதேசமயம் முன்பு பா.ஜ.க.வின் கல்யாண்சிங் ஆட்சியின் திறமைகளை அவர்கள் மறந்துவிடவில்லை. இந்தச் சூழலில் அங்கு சட்டசபைத் தேர்தல் நடக்குமானால் பா.ஜ.க. ஆட்சியைப் பிடிக்கும் என்று முழுமையாக நம்புகிறேன்.

**இவ்வளவு நாட்களாக அத்வானியை முன்நிறுத்தி விட்டு, இப்போது திடீரென்று வாஜ்பாயியைப் பிரதமராக்குவோம் என்று பா.ஜ.க. முழங்க ஆரம்பித்திருப்பது ஏன்?**

அத்வானியை விட வாஜ்பாய் சீனியர் இல்லையா? தவிர, மிகுந்த அனுபவசாலியும் கூட.


**இத்தனை நாட்களாக அது தெரியாதா என்ன...?**

அப்படி அல்ல. அத்வானியே, தம்மை விட வாஜ்பாய்தான் பிரதமராகப் பொருத்தமானவர் என்று அறிவித்து விட்டிருக்கிறார். அது கட்சிக்கும் நாட்டுக்கும் நல்லது என்றே நினைக்கிறேன்.

**எந்த தைரியத்தில் தமிழகத் தேர்தலில் பா.ஜ.க. தனித்துப் போட்டியிட முடிவு செய்துள்ளது?**

சட்டசபையில் எங்கள் கட்சியும் பிரதிநிதித்துவம் பெறும் என்ற நம்பிக்கை இருக்கிறது. பாராளுமன்றத்துக்கும் இங்கிருந்து பா.ஜ.க. எம்.பி. செல்லும் சாத்தியம் இருக்கிறது. பொறுத்திருந்து பாருங்கள்!

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**




எங்களது ஆட்சியில், வளர்ச்சியே இல்லை என்று குறை கூறும் எதிர்க்கட்சிக்காரர்களைப் பார்த்துக் கேட்கிறேன்; நாங்கள் ஆட்சிக்கு வரும் போது இருபதாக இருந்த மாவட்டங்கள் தற்போது முப்பதாக வளர்ச்சி அடைந் துள்ளனவே; இது உங்கள் கண் களுக்குத் தெரியவில்லையா?





வி. ரெங்கநாதன்

"என்னது, கடன் சுமையைக் குறைக்கத் தான் அதிக குழந்தைகளைப் பெத்துக்கறீங் களா?"

"ஆமாம், இப்ப நம்ம ஒவ்வொருத்தர் தலை மேலேயும் 6700 ரூபாய் கடன் இருக்கு. மக்கள் தொகை அதிகமானால் தனி நபர் கடன் சுமை குறையுமே!"


- க.சு.வே. சித்திரவேலு







- இவே. ஸ்ரீராம்





பாய்
வீட்டுக்குத் திரும்பிப் போக பஸ் சார்ஜ்!
- வெ. ராஜாராமன்


அநியாயமா இருக்கு... டெலிபோன் பில் பத்தாயிரம் ரூபாய் வந்திருக்கு.
அதிகமா பேசியிருப்பீங்க.
நீங்க வேற, எங்க வீட்ல டெலிபோனே இல்லை!
- பா. ஜெயக்குமார்

# ணிச் சிரியுங்கள்!


நேற்று அரசவைக்கு வந்த ஜோசியர், நம் மன்னருக்கு பத்து தான் ராசியான எண் என்று சொன்னாராம்.
ன்றால், அந்தப் மேலும் இரண்டு ன் வரப்போகி ா என்று சொல்!
- வி. ரெங்கநாதன்


நடிகை நளினாஸ்ரீக்கு தன்னடக்கம் ரொம்ப ஜாஸ்தி; எம்.ஏ. படிச்சிட்டு +2 படிச்சதா சொல்லிக்கறாங்க.
எம். ஏ. படிச்சதா சொல்லிட்டு பதினாலு வயசுதான் ஆகுதுன்னு சொன்னா யாரும் நம்ப மாட் டாங்களே!
- சீர்காழி வி. ரேவதி

12

## ரமணி சந்திரன்

# மாலை

கிருஷ்ணசந்திரன் சொன்ன 'விவாகரத்து' என்ற வார்த்தை உதயரேகாவை மெய்யாகவே அதிரச் செய்து விட்டது.

அன்று வரையிலும், ஏதோ கோபம், ஏதோ அசட்டுப் பிடிவாதம், எப்படியோ பழகி விட்ட தீமைகளை விட மனம் இல்லாமை, இதை மாற்ற முயற்சிப்பதால் அவனிடம் ஒதுக்கம். ஆனால், ஒருநாள் இதெல்லாம் மாறி, இன்ப வாழ்வு நிச்சயம் என்ற நம்பிக்கை அவளுக்கு எப்போதுமே இருந்தது. இதற்கெல்லாம் அடித்தளமாக, அவளிடம் அவனுக்கு அன்பு இருக்கிறது என்பதிலும் அவளுக்கு உறுதி இருந்தது.

அதனாலேயே, ஒன்று மாற்றி ஒன்று என்று பல வழிகளிலும் முயற்சிக்கும் உற்சாகமும் இருந்தது.

ஆனால் அவன் அவளை அடியோடு பிரியத் தயாரா என்றால் அந்த அடித்தளமான அன்பு அவனுக்கு இல்லை என்றல்லவா அர்த்தமாகிறது. அஸ்திவாரமே இல்லை என்றால் அதன் மேல் என்ன கட்டடம் எப்படிக் கட்டுவது?

ஒன்றுமே புரியாமல் தலைசுற்றி விட, "எ...என்ன... நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்று தடுமாறினாள் அவள்.

அவளுக்குச் சமாளிக்க அவகாசம் கொடுப்பவன் போலச் சில வினாடிகள் பேசாதிருந்து விட்டு, "இது ஒன்றும் உலகத்தில் இதுவரை நடவாதது இல்லை, உதயரேகா. இனி, நடக்கக் கூடாததும் இல்லை. ஒரு திருமணம் தவறு என்று உறுதியாகத் தெரிந்த பிறகும் அதை விடாமல் கட்டிக் கொண்டு ஆடுவது முட்டாள்தனம். இருவருக்குமே அது நரகமாகி விடும். அதைவிட, இருவரும் மனம் ஒத்துப் பேசிப் பிரிந்து விடுவது மேல்" என்றான் அவன். ஏதோ மனப்பாடம் செய்து வைத்ததை ஒப்புவிப்பவன் போலத் தங்குதடையற்று.

அவளுக்கு, என்ன பேசுகிறான், என்ன இப்படிப் பேசுகிறான் என்ற தவிப்பும் ஆத்திரமும். "ஏன்? பிரிவதற்காக மட்டும்தான் மனம் ஒத்துப் பேச வேண்டுமா? ஒன்றாய் வாழ்வதற்காக மனம் ஒத்துப் பேசக் கூடாதா?" என்று அவன் வார்த்தைகளையே திருப்பிப் படித்து அவனை மடக்க முயன்றாள்.

"அது சாத்தியம் அல்ல என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்" என்றான் அவன் அசையாமல். "அதனால் நாம் பிரிந்து விடுவதுதான் மேல்."

ஒரு வேகமூச்சு எடுத்து விட்டு, "அக்னி சாட்சியாக நீங்கள் என் கழுத்தில் கட்டியது இந்த மாங்கல்யம். இதை நான், உயிர் உள்ளவரை பிரிவதாக இல்லை" என்று அறிவித்தாள் உதயரேகா.

"யார் உயிர் உள்ள வரையில்?" என்றான் அவன் ஒரு மாதிரியான குரலில்.

"என் உயிர்" என்று தொடங்கியவள், அவனது குரலின் வேறுபாடு மனதில் உறைக்க, "என்ன பேச்சு இது!" என்று கோபம் காட்டினாள்.

"உண்மை!" என்றான் கிருஷ்ண சந்திரன். ஆத்திரத்துடன் முறைத்தவளுக்குப் பதிலாக, "நம் நாட்டு மக்களின் வாழ்நாள் கணக்கு என்ன தெரியுமா? சராசரி ஐம்பத்தேழு வயது. ஆணுக்கும் அப்படித்தான். பெண்ணுக்கும் அப்படித்தான். எப்படியும் மனைவி சில ஆண்டுகளேனும் சிறியவளாகவே இருப்பதால், முன்பு பெரியார் உரைத்தது போல, எப்படியும் அறுபடப் போகிற தாலி தானே. இதற்குப் போய் இவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பானேன்?" என்றான் விட்டேற்றியாக.

"உங்கள் சராசரிப்படி எல்லோருமே ஐம்பத்தேழு வயதில் இறந்துதான் ஆக வேண்டும் என்று கட்டாயம் இல்லை, தெரியுமா? எங்கள் சித்தியுடைய அத்தை ஒருவர் - அவரும் சித்தி மாதிரி இரண்டாம் மனைவிதான். அவர்களை விட இருபது வயது மூத்தவரை மணந்து, எழுபது வயதில் சுமங்கலியாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் - வெள்ளி விழா, பவள விழா தாண்டி பொன் விழாவும் கொண்டாடினார்கள். என்னை விட நீங்கள் நாலு வயதுதானே மூப்பு? வைர விழாவே கொண்டாட நம்மால் முடி...யும்..." சொல்லிக் கொண்டே வந்தவள், கணவனின் முகமும் தோற்றமும் மாறிய விதத்தில் திகைத்தாள்.

கண்ணும் முகமும் சிவந்து, தகதகவென்று...

இதே போல முன்பும் ஒருதரம் அவன் தோற்றமளித்தது உதயாவுக்கு உடனே நினைவு வந்தது.

அப்போதும் இப்படித்தான். ஏதோ நெடுங்காலம் அவளோடு வாழ்வது பற்றிய பேச்சின் போதுதான் இப்படிச் சிவந்தான்.

ஏன்? நீண்ட நாள் அவளோடு வாழ்வது என்றால் வெறுப்பாக இருக்கிறதா? மாட்டிக் கொண்டோமே என்று கோபம் வருகிறதா? அதனால்தான் மணவிலக்குத் தர முன்வந்தானா?

யோசிக்க யோசிக்க, உதயரேகாவின் மனம் மிகவும் சோர்ந்து போயிற்று. அவள் நினைத்தது எல்லாம் தப்பு. அவனுக்கு அவளிடம் நேசம் இருப்பதாக நினைத்தது முழு தவறு. அவனைத் திருத்தி அவனோடு உன்னதமாய் வாழ எண்ணியது இமாலயப் பிழை.

"நீ சொல்வது மிக அபூர்வமாய் அமைந்த விதிவிலக்கு. பொது நியதி அது அல்ல. அதனால்..."

"அதனால் என்ன? இதைக் கழற்றி உங்கள் கையில் கொடுத்து விட்டு, இங்கிருந்து வெளியேறச் சொல்லுகிறீர்களா? என் உயிருள்ள வரை, அது நடக்காத காரியம். நான் உங்களுக்கு விவாகரத்து தரப் போவதும் இல்லை. நானாக மணவிலக்கு கோரப் போவதும் இல்லை. உங்கள் மனம் மாறினால் சரி. இல்லாவிட்டால், என் வாழ்நாள் முழுவதும் இப்படியே இருக்கத் தயார்" என்றவள், சட்டெனத் திரும்பி நடந்து வெளியே மொட்டை மாடிக்குச் சென்று நின்றாள்.

முதல் தடவையாக, கணவனோடு பேசும் போது அவளாக இடையில் விலகிச் சென்றிருக்கிறாள். அசட்டுத்தனமாக வாழ்க்கையை அழித்துக் கொண்டு விட்டேனோ என்கிற சந்தேகமும் முதல் தடவையாக அப்போதுதான் அவளுக்குத் தோன்றியிருக்கிறது.

சந்தேகம் என்று ஒன்று தோன்றியதுமே அது சரிதான் என்பதற்கான காரணங்களும் மளமளவென்று தோன்றத் தொடங்கி விடுகின்றன.

முதலாவதாக அவள் பெரும் நம்பிக்கை வைத்தது, பண்ணை வீட்டில் இரவில் அவனது பார்வையிலும் சிலிர்ப்பிலும்தான். ஒருவேளை அன்று அந்த இரவு நேரத்தில் அவன் பாலுணர்வைத் தூண்டக்கூடிய புத்தகம் எதையேனும் படித்துக் கொண்டு இருந்

# மயங்குகின்ற நேரம்

திருக்கலாம். அந்த வேகத்தில் உணர்ச்சிகளைப் பிரதிபலித்திருக்கலாம். ஏனெனில், அவனே, உடனேயே அவளை விலக்கி நிறுத்தவில்லையா? யார் யாரோ பெண்களுடன் அவனுக்குப் பழக்கம் என்றார்கள். அப்படிப்பட்டவன், அன்று அவளை ஒதுக்கியதிலிருந்தே, அவளிடம் அவனுக்குக் காதல், காமம் என்று எந்த மண்ணாங்கட்டியும் இல்லை என்பதைப் பறைசாற்றவில்லையா?

எத்தனை தரம் திருமணத்தை நிறுத்தச் சொல்லிக் கோரினான்?

அப்போதெல்லாம் அவளுக்கு ஏன் புரியவில்லை?

மனைவியிடம் கொண்ட அன்பினால் கிருஷ்ணசந்திரன் செய்ததாக உதயரேகா முன்பு எண்ணியன எல்லாம், அசட்டுத்தனமாக வாழ்வைப் பாழடித்துக் கொண்ட ஒரு முட்டாள் பெண்ணின் மேல் கொண்ட பரிதாபத்தினால் இட்ட பிச்சைகளாகவே இப்



போது நிச்சயம் ஆயின.

இப்படி வெறுப்பவனின் கவனத்தைக் கவருவதற்காகச் செய்த வேலைகளையும் அலங்காரங்களையும் எண்ணிப் பார்க்கையில் உதயரேகாவுக்கு மிகவும் அவமானமாக இருந்தது.

எப்படி அருவருத்திருப்பான்! வேண்டாம்! வேண்டாம் என்றதன் காரணமெல்லாம் இப்போதல்லவா புரிகிறது. ஆனால், கண் கெட்ட பிறகு செய்கிற சூரியநமஸ்காரமாய், இப்போது புரிபட்டு என்ன லாபம்? அடுத்தவர்களுக்காக – அவர்கள் மிகவும் பிரியத்துக்கு உகந்தவர்களே என்ற போதும், அவர்களுக்கு நன்மை செய்வதாக எண்ணி உதயரேகா தன் வாழ்வை நாசமாக்கிக் கொண்டது மட்டுமே மிச்சம்!

இனி இந்தச் சிக்கலை விடுவிக்க என்ன செய்யக்கூடும்?

உதயாவின் இந்த இருபத்தியிரண்டு வயது வாழ்வில், இனி என்ன செய்வது என்று அவள் மருண்டதே கிடையாது.

ஏமாற்றங்கள், வருத்தங்கள், இழப்புகள் இதற்கு முன்னும் அவள் வாழ்வில் நேர்ந்தது உண்டுதான். ஆனால், அடுத்து என்ன என்று யோசித்து, எதையாவது செய்யத் தொடங்கி விடுவாள். ஆனால், இன்றோ யோசிக்க யோசிக்க, ஒன்றுமே புரியாத மலைப் புத்தான் பூதாகாரமாய் வளர்ந்தது.

இப்படி நினைக்கவில்லையே! நினையாமல் போனேனே என்று அதே நினைவாய், வேதனை ஒரு புழுவாய் உள்ளே குடைந்தது. வெளியே சாதாரணமாக இருப்பது போலக் காட்டிக் கொண்டாலும் உதயாவின் பேச்சும் சிரிப்பும் தானாகக் குறைந்து போயிற்று.

பொதுவாக வீட்டில் கிருஷ்ண சந்திரன் தானாகப் பேச்சைத் தொடங்கி வார்த்தையாடுவது கிடையாது. கலகலவென்று இருப்பது உதயா தான். அவள் நத்தையாய் ஒடுங்கவே, வீட்டில் பெரும்பாலும் நிசப்தமே நிலவியது.

மனைவியின் மாற்றத்தைக் கிருஷ்ண சந்திரன் கவனிக்கவே இல்லையா, அன்றிக் கவனித்தும் வழக்கம் போலத் தோளைக் குலுக்கி விட்டு அக்கறையற்றுச் சென்றானோ உதயா அறியாள். இரண்டாவதாகத்தான் இருக்க வேண்டும் என்பது அவளது வருத்தமான ஊகம்!

பொதுவாக, அடுத்தவர் முன்னிலையில், முகபாவனையில் உதயரேகா கவனமாகவே இருந்தாள்.

அவளது கவனத்தையும் மீறி, அவளது இடைவிடாத மறுகலை அவள் முகத்தில் உணர்ந்து, யசோதா மகளிடம் கேட்டு விட்டாள், "என்னடி முகம் வாடித் தெரிகிறதே!" என்று.

உதயரேகா பதில் கூறுமுன், "ஏன், உங்களுக்குள் என்ன? என்ன தகராறு? என்னம்மா?" என்று பரபரத்தாள்.

இவளிடம் சொல்லி, மடியில் முகம் புதைத்து, சற்று நேரம் அழுது தீர்த்தால் கொஞ்சமேனும் ஆறுதல் கிட்டக்கூடுமோ என்று ஒருகணம் உதயாவுக்குத் தோன்றியது.

ஆனால் பெறாவிட்டாலும் யசோதாவுக்குத் தாய் மனம். மகளின் வேதனை தெரிந்தால் அவளும் வருந்துவாளே! ஏற்கெனவே அறியாத்தனமாக அவளை நோகடித்தது போதாதா?

மனதை மறைத்து, முத்துப் பற்களைக் காட்டிப் பளீரென ஒரு புன்னகை செய்தாள். "இல்லாததையும் பொல்லாததையும் கற்பனை செய்வதில் உங்களுக்கு நிகர் நீங்கள்தான் சித்தி!" என்றவள், யசோதா ஐயமாய் நோக்கவும், "வீட்டின் அலங்காரம் உன் விருப்பம் போல மாற்றிக் கொள் என்று உங்கள் மாப்பிள்ளை எனக்கு அனுமதி கொடுத்திருக்கிறார். அவர் மெச்சும் வண்ணம் எப்படிச் செய்வது என்று அதே யோசனையாய் இருக்கிறேனா? உங்களுக்கு என் கண்ணில் 'லைட்' எரியாதது போலத் தெரிகிறது!" என்று மீண்டும் நகைத்து, சிற்றன்னையைச் சமாளித்து அனுப்பி வைத்தாள்.

யசோதா சென்ற பிறகு சற்று நேரம் தீவிரமாகச் சிந்தனை செய்தாள்.

அடுத்து காந்திமதியா? சித்தியைப் போலவே மாமியாரும் உற்றுநோக்குகிறவர்தான். தாய்மாருக்கே உரிய நோக்கு.

இப்படி ஒவ்வொருவராக துக்கம் விசாரிக்க, அவளது முகம் அழுது வடிவதல்லவா காரணம்? அப்படி அழுது வடிய இப்போது என்ன பெரிய இழப்பு நேர்ந்து விட்டது?

கணவனிடம் காதலை எதிர்பார்க்க முடியாது. அவ்வளவுதானே? இந்தக் காதல் இல்லாமல் உலகத்தில் எவ்வளவோ பேர் சந்தோஷமாக இருக்கவில்லையா?

டி.வி.முன் உட்கார்ந்தால் இருபத்து நாலு மணி நேரத்துக்கும் பொழுதுபோக்கு இருக்கிறது.

அது வேண்டாம் என்றால் உருப்படியாகச் சமூக சேவை செய்யலாம். நலிந்தோருக்கு உழைப்பதற்காகத் திருமணமே செய்து கொள்ளாமல் எத்தனை பேர் வாழ்வையே அர்ப்பணித்திருக்கிறார்கள்!

மக்கள் சேவை என்ன, கலைச் சேவைக்காகக் கூடத்தான் எத்தனையோ பேர் என்

● கட்டுப்பாடற்ற தனி அதிகாரம், அகங்காரத்தையும் அழிவையுமே நாடும். / ஆக்டன் பிரபு. தொகுப்பு : கோபி. நாகராஜன்



# 'கடலங்குடி'யின் புதிய ஆன்மிக வெளியீடு

புராணங்களிலேயே மனத்தால் நினைத்த உடனேயே மனதை உருக்கி, நம்மைப் பரவசமூட்டுவது **'ஸ்ரீமத் பாகவத புராணம்'**. 1931 லேயே ஸ்ரீமத் பாகவதத்தை, ஸ்ரீ நாராயணீயத்துடன் **முதல், முதலில்** வெளியிட்டு அன்றும், இன்றும், என்றும் பல கல்விமான்களாலும், ஆராய்ச்சியாளர்களாலும், ஆன்மிகப் பெரியோர்களாலும் வெகுவாகப் பாராட்டப்பட்டவரும் **கோபால தத்வ ரக்ஷாமணி, அபிநவ வ்யாஸர்** போன்ற அரிய பல விருதுகளைப் பெற்றவரும் **பிரும்மஸ்ரீ கடலங்குடி நடேச சாஸ்திரிகள்** ஆவார்.

64 ஆண்டுகளுக்குப் பின் அன்னாரின் ஸ்ரீமத் பாகவதம் (நாராயணீயத்துடன்) **இரண்டாவது பதிப்பாக** ஸ்ரீதரீய, வம்சீதரீய விளக்கங்களைத் தழுவி ஆன்மிக மக்களைப் பரவசமூட்ட வெளிவர உள்ளது.

12 அத்யாயங்களும் 7 வால்யூம்களாக பைண்டு செய்யப்பட உள்ளன. (1) 1, 2வது அத்யாயங்கள் ரூ. 100/-; (2) 3, 4வது ரூ. 150/-; (3) 5, 6, 7வது ரூ. 125/-; (4) 8, 9வது ரூ. 100/-; (5) 10வது (முதற்பாகம்) ரூ. 125/-; (6) 10வது (இரண்டாவது பாகம்) ரூ. 150/-; (7) 11, 12வது ரூ. 150/-.

ஆக 7 வால்யூம்கள் கொண்ட செட் ஒன்று விலை ரூ. 900/-

அன்னாரின் கடுமையான உழைப்பில் உருவான அரிய நூலில் சொற்பிழை, அச்சுப்பிழை, கருத்துப்பிழை ஏற்பட்டு களங்கம் ஏற்படா வண்ணம் இருக்க, அச்சுக் கூலி, பேப்பர் விலை, விளம்பரக் கட்டணம் யாவும் விஷம் போல் ஏறியுள்ள இந்த நேரத்தில் பொருட்செலவைச் சிறிதும் மனதில் ஏற்காமல் வியாபார நோக்குச் சிறிதுமின்றிப் பெரியவருக்குச் செலுத்தும் பக்திக் காணிக்கையாக வெளிவர உள்ளது. **(ஸ்ரீமத் பாகவதம் முதல் வால்யூம் ரூ. 100/- வெளிவந்துவிட்டது).**

குறைந்த காபிகளே அச்சிடுவதால் **ஸ்ரீமத் பாகவதம்** முழு செட் ரூ. 900 மதிப்புள்ள 7 வால்யூம்கள் பெற விரும்புவோர் ரூ. 500/- முன்பணமாக டிராப்ட் (DD) **'கடலங்குடி பப்ளிகேஷன்ஸ்' சென்னை - 17** என்ற பெயரில் வாங்கி ரிஜிஸ்டர் தபாலில் கீழே காணும் விலாசத்திற்கு அனுப்பி தங்கள் பெயரையும், விலாசத்தையும் முன் பதிவு செய்தல் நலம். மீதி ரூ. 400/- இரண்டு மாதங்களுக்குள் அனுப்பவும். குறைந்த காபிகளே அச்சிடுவதால் விரைவில் பெயரை முன்பதிவு செய்து ஏமாற்றத்தைத் தவிர்த்து அதற்கான சிறப்புச் சலுகை பெற்றுப் பயனடையவும்.

**சிறப்புச் சலுகை :** ரூ. 500/- அனுப்பி முன்பதிவு செய்து கொள்ளும் முதல் 100 நபர்களுக்குள் 3 நபர்களைக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்து கீழ்க்கண்ட பரிசுகள் அளிக்கப்படும்.

**முதற்பரிசு :** ரூ. 500/-க்கான செக் (அல்லது) எமது வெளியீட்டில் ரூ. 500/-க்கு மதிப்புள்ள புத்தகங்கள்.

**இரண்டாம் பரிசு :** ரூ. 300/-க்கான செக் (அல்லது) ரூ. 300/- மதிப்புள்ள புத்தகங்கள்.

**மூன்றாவது பரிசு :** ரூ. 200/-க்கான செக் (அல்லது) எமது வெளியீட்டில் ரூ. 200/-க்கு மதிப்புள்ள நூல்கள்.

**இச்சிறப்புச் சலுகை ஜனவரி 27, 1996 வரையில்.**

ஆகவே தாமதமின்றி விரைவில் செயல்பட்டு **கடலங்குடி பெரியவரின்** அனுக்கிரகத்திற்குப் பாத்திரர்களாகும்படியும், பரிசுகளின் பலனைப் பெறவும் வேண்டுகிறோம்.

**குறிப்பு :** அன்னாரின் **'காடகோபனிஷத்'** ஸ்ரீ சங்கரரின் வியாக்யானத்தைத் தழுவியது ரூ. 50/- வெளி வந்துவிட்டது. இதில் வாழ்வின் முன்னேற்றத்திற்கான அரிய பல விஷயங்கள் அடங்கியுள்ளன.

எமது இதர English/தமிழ் இலவச விலைப்பட்டியலுக்கும் எழுதி ஜனவரி 14 வரை அளிக்கும் 10% தள்ளுபடி பெறவும்.

பி. கு. : K.N.S.ன் துல்லியமான ஜோதிடப் பலன்களுக்கும் தொடர்பு கொள்க.


## கடலங்குடி பப்ளிகேஷன்ஸ்

**M. A. Jaishankar**
பதிப்பாளர்.

**38, நடேசய்யர் தெரு, தி. நகர்,**
**சென்னை - 600 017 Ph : 4343406.**

GROWTH THROUGH CUSTOMER SATISFACTION

# KUBER MUTUAL BENEFITS LTD.

(A Central Govt. Approved Nidhi Company)

**A UNIT OF KUBER GROUP-ESTD. 1980**

## KUBER FIXED DEPOSIT SCHEME

### FIXED DEPOSIT SCHEME

| Time Period | 46 Days | 3 Mth | 6 Mth | 1 Yr | 2 Yr | 3 Yr | 4 Yr | 5 Yr |
|---|---|---|---|---|---|---|---|---|
| % Int P.A. | 13.5% | 14.5% | 15.5% | 17.5% | 18.5% | 19% | 20% | 21% |

Min. deposit for 46 days & 3 months is Rs.5000/- addl. in multiples of Rs. 1000/- Post dated interest cheques issued in advance.

**2% cash incentive on all fixed deposits for 1 year and above upto January 15th 1996.**

### CUMULATIVE DEPOSIT SCHEME

| Time Period | 1 Yr | 2 Yrs | 3 Yrs | 4 Yrs | 5 Yrs |
|---|---|---|---|---|---|
| % Int P.A. | 18.5% | 19.5% | 20% | 21% | 22% |

Minimum deposit Rs.1000/- and additional in multiples thereof. Loan facility upto 75% of total amount deposited. Nomination facility avbl.

## SENIOR CITIZEN WELFARE YOJANA

Applicable for persons above 55 years, Pensioners, Handicapped and Widows. Minimum Deposit Rs. 5,000/-.

### READY RECKONER - I

| Period | Rate of Interest (p.a.) | Monthly Interest on Rs. 5,000 Deposit (in Rs.) | Monthly Interest on Rs. 10,000 Deposit (in Rs.) |
|---|---|---|---|
| 12 Months | 20.5% | 85.50 | 171.00 |
| 24 Months | 21% | 87.50 | 175.00 |
| 36 Months | 21.5% | 89.60 | 180.00 |

Interest rate applicable as per Ready Reckoner - I. Post -dated interest cheques for the entire period will be issued in advance.

### READY RECKONER - II

| Below 12 Mths | 12 Mths | 24 Mths | 36 Mths |
|---|---|---|---|
| 13% | 15% | 16% | 17% |

Premature withdrawal available as per Ready Reckoner-II applicable upto date of withdrawal without any penalty or service charges.

## KUBER DHANALAXMI

**DOUBLE IN 42 MONTHS** **TRIPLE IN 60 MONTHS**

Loan facility available upto 75% of total deposit after 12 months. Minimum deposit Rs.1000/- and additional amounts in multiples thereof. Premature withdrawal facility after one year permitted & the interest rate payable will be at our Fixed Deposit rate of interest applicable upto the date of premature withdrawal.

**Transactions with members only**

**KUBER MUTUAL BENEFITS LTD.**

**Regd. Off.** : Kuber Bhawan, Begum Bridge Road, Meerut Ph.: 543716, 543717

**Head Off** : Kuber House, S-32, Greater Kailash-I, New Delhi - 110048. Ph.: 6412749, 6472685, 6211877, Fax: 011-6420378 / 6211879

**Branch Off** : R-4, IInd Floor, Hong Kong Complex, Ramanathan Street, T-Nagar, Madras - 600 017. Ph.: 4340790.

னென்னவோ தியாகம் செய்திருக்கிறார்கள்.

ஆயகலைகள் அறுபத்து நான்கில் அவளும் தான் எத்தனையோ கற்றிருக்கிறாளே! முக்கியமான கலை - மன்மதக் கலையை மட்டும் கொஞ்சமும் பயிலவில்லை; பயிலத் தோன்றவில்லை. சொல்லித் தெரிவது இல்லை மன்மதக் கலை என்று கேள்விப்பட்டிருந்தது ஒரு காரணம். அந்தக் கலையைக் கணவனிடம் கற்பதே முறை என்று தோன்றியது அடுத்தது. ஆனால்...

மீண்டும், ஏக்கத்துடன் கணவனிடம் ஓடிய மனதைக் கட்டுப்படுத்தி நடப்புக்குக் கொணர்ந்தாள்.

சற்று யோசித்து விட்டு, பிறந்த வீடு சென்று வீணையை எடுத்து வந்து வாசித்தாள்; பாடினாள்; டேப்பைப் போட்டுக் கொண்டு ஆடினாள்.

எதிலும் மனம் முழுமையாக லயிக்காதபடியால் திருப்தியற்று, அன்றையப் பத்திரிகையை சிரத்தையற்றுப் புரட்டிய போது ஒரு விளம்பரம் அவளது கவனத்தைக் கவர்ந்தது.

அது ஓர் ஓவியப் போட்டிக்கான விளம்பரம். இன்னமும் இரு வாரங்களில் போட்டிக்குரிய படத்தை முடித்துக் கொடுக்க வேண்டும். மனித உணர்வுகளைப் பிரதிபலிக்க வேண்டுமாம்.

அன்றே சென்று, கான்வாஸ், வண்ணங்கள், பிரேம், ஸ்டாண்டு, தூரிகை என்று தேவையானவற்றை வாங்கி வந்து அவளது அறையில் சற்று நேரம் யோசித்து, அவ்வப்போது, தோன்றிய சில கருத்துக்களுக்கு வரி வடிவம் கொடுத்து, பென்சிலால் வெறும் கறுப்புக் கோடுகளாகச் சிறிய அளவில் வரைந்தாள்.

வரைந்தவை அனைத்தையும் தரையில் பரப்பி வைத்துப் பார்த்து விட்டு அவற்றுள் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அதைக் 'கான்வாசில்' வரையத் தொடங்கினாள்.

ஒரு வாரம் - பெயருக்கு உண்பது உறங்குவது தவிர முழு நேரத்தையும் சித்திரத்துக்காகவே செலவிட்டு ஒருவழியாய் ஓவியத்தை முடித்து விட்டுப் பார்க்கையில், பார்த்துப் பார்த்து வரைகையில் மனப்பாடமாகி விட்ட படத்தைப் போட்டிக்கு அனுப்புமுன் கடைசியாக ஒருதரம் சரிபார்த்த போது உதயரேகாவின் விழிகளில் நீர் மல்கியது.

அன்றிலிருந்து பதினைந்தாம் நாள் மதியம் தாண்டி, கிருஷ்ணசந்திரனின் அலுவலக மேஜையில் இருந்த அவனது நேரடி ஃபோன் ஒலித்தது.

ரிசீவரை எடுத்துக் காதில் வைத்தால் அவனுடைய தங்கையின் குரல் பயந்து பயந்து, "அ...அண்ணா...." என்று அழைத்தது.

யார் என்று அறிந்ததுமே ரிசீவரை வைத்து விடப் போனவனைத் தங்கையின் குரல் தடுக்க, "என்ன விஷயம்?" என்று அதட்டினான்.

(தொடரும்)

## 'சுருக்-நறுக்' போட்டி -9; முடிவுகள்.....

# அதிர்ஷ்டம் என்பது.....

**(பிரசுரமாகியுள்ள ஒவ்வொன்றும் ரூ. 50 பரிசு பெறுகிறது)**

- தனது தோல்விக்கும், அடுத்தவர் வெற்றிக்கும் மனிதர் கண்டுபிடித்துள்ள காரணம்.

  - லெக்ஷ்மிபிரபா, திண்டுக்கல்.

- துவண்டு விடாத தொடர் முயற்சியில் எதிர்பாராமல் கிடைக்கும் வெற்றிக்கு மற்றொரு பெயர்தான் அதிர்ஷ்டம்.

  - சு. தமிழ் ரோஜா, கீரனூர்.

- முயற்சி எனும் தாய்க்கும் வாய்ப்பு எனும் தந்தைக்கும் பிறக்கும் குழந்தை.

  - இரா. சந்திரசேகரன், விருதுநகர்.

- கடலைப் பொட்டலத்தில் கடைசி கடலையும் நல்லதாக இருந்து விடுவது.

  - ஆர். நந்தகுமார், சேலம் - 9.

- நம்பியவனை நடுச்சந்தியிலும் நம்பாதவனை உச்சிக்கும் கொண்டு செல்லும் சோம்பல் தேவதை!

  - எம். பாக்யநாதன், மாட்டுக்காரனூர்.

- மனித முயற்சிக்கு இறைவன் அளிக்கும் சம்மதம்.

  - பி. ராஜேந்திரன், மேலக்காவேரி.

- ஒருவரை அதிர்ஷ்டசாலி ஆக்குகிறது. ஒன்பது பேரை பொறாமைக்காரர் ஆக்குகிறது.

  - வெ. ஆசைத்தம்பி, தஞ்சாவூர் - 1.

- முயற்சி உள்ளவனுக்குக் கிடைக்கும் துருப்புச் சீட்டு.

  - நா. கோகுல், தூத்துக்குடி-8.

**DISCOUNT SALE UPTO PONGAL**

FOR

**பர்வதாஸ் சாரீஸ்**

மதுரை சுங்குடி புடவைகள்
1, வடக்கு மாடவீதி,
மைலாப்பூர்,
சென்னை - 4.

**RANEE SAREES**
**DEVENDRA SAREES**


9X5 10X6 } கைத்தறி வேஷ்டிகள் கிடைக்கும்

**RAMACHANDRA SAREES**

*Quality & Quality*

தரம் தரம் தரம்தவிர வேறில்லை

**RAMACHANDRA SAREES,**
**ராமசந்திரா சாரீஸ்**



(மதுரை சுங்குடி புடவைகளின் உலகம்)

37-B, Arya Gowder Road,
Postal Colony Bus Stop 3rd Corner
West Mambalam, Madras - 33.

Ramachandra Sungudi Sarees No.1
தரம் எங்களின் விலாசத்தில் மட்டுமே கிடைக்கும்.
இன்னும் பிற: தரமான Venkatakiri, Devendra, Bengal & கோரா Cottons புடவைகளும் கிடைக்கும்.

*New Year Special Discount Sale*

**SOWBAGHYA**

**THE GRINDER PEOPLE**

162, Virapillai Street,
Bangalore - 560 001.
Ph : 5587587

314, Perundurai Road,
ERODE - 11.
Ph : 77945, 72965

32-A, North Usman Road,
T. Nagar, Madras - 600 017.
Ph : 8253547 / 8252908.

SIBI ADS

# வட்டமேஜை

• 'தேர்தல் ஜுரம்' தலையங்கம் சூப்பர். பாராளுமன்றத் தேர்தல்கள் நடக்கும் போதே மாநிலங்களுக்கான தேர்தலையும் நடத்தி முடித்தால் ஏராள பொருள் செலவையும், நேர விரயத்தையும் மிச்சப்படுத்தலாம் என்று கூறியிருப்பது உண்மையிலும் உண்மை. நல்லதொரு அறிவார்ந்த தலையங்கத்திற்கு நன்றி. பாராட்டுக்கள்.

விழுப்புரம், வெ. ஆனந்தி.

**ரூ. 20 பரிசு பெறும் கடிதம்**

• அரசியல் கட்சிகளுக்குக் கணக்குக் காட்டுமாறு உச்சநீதி மன்றம் நோட்டீஸ் கொடுத்துள்ளது என்ற தங்கள் தலையங்கத்தின் ஆரம்ப வரிகளைப் படித்தவுடன் நமது நிதியமைச்சர் மன்மோகன் சிங் சுவிட்சர்லாந்திற்குச் சென்ற போது நடந்த நிகழ்ச்சிதான் நினைவிற்கு வருகிறது. அங்கு முதலாளிகளையும், பெரிய வங்கிகளின் தலைவர்களையும் நமது நிதியமைச்சர் இந்தியாவில் முதலீடு செய்யுமாறு கேட்ட போது ஒரு வங்கித் தலைவர், "சுவிஸ் வங்கிகளில் இந்தியர்கள் வைத்திருக்கும் பணத்தை (வேறென்ன கறுப்புப் பணம்தானே) உபயோகப்படுத்தினாலேயே இந்திய அரசு கடன் எதனையும் வாங்கும் அவசியம் இராதே" என்று கூறினாராம்! (ஆதாரம் : எக்னாமிக் டைம்ஸ் 30.10.95). அரசியல் கட்சிகள் கணக்குக் கொடுத்தாலும் அது எந்த அளவுக்கு உண்மையான கணக்காக இருக்கும்?

வேலூர் - 7, பா.வை. சுவாமிநாதன்.

• இன்றைய உயர் மட்ட ஒழுங்கீனங்கள் - லஞ்சலாவண்யம் - அதிகார துஷ்பிரயோகங்கள் அனைத்தும் தீண்டி விட்ட சமுதாயத்துக்கு நீதிமன்றங்கள் கலங்கரை விளக்கங்களாய் இருப்பது மிகப் பெரிய ஆறுதல். ஆனாலும் நீதி ரொம்ப தாமதப்படுவது குற்றவாளிகளுக்கு வெல்லமாகிப் போகிறது.

திருச்சி - 2, ஏ.ஆர்.என். மணி.

• விளையாட்டு வீரர்களை உஷார் படுத்துவதற்கான கட்டுரை நன்றாக இருந்தது. ஆனால் கடைசியில் கண்ட கண்ட போட்டிகளை சொல்லி அசிங்கப்படுத்துவது நியாயமில்லை சார்!

விருதாசலம், விருதைமோகன்.

• ஜெயிக்க வாய்ப்பிருக்கும் முக்கிய அயிட்டமான 'ஆட்டோ அட்டாக்' போட்டியை விட்டு விட்டீர்களே!

ஈரோடு, சி. நாச்சிமுத்து.

• 'ஐயப்பனை தரிசிக்க கேரள மண் மீது கால் வைத்து மலை ஏற வேண்டும் என்று நினைத்திருந்த எனக்கு, மலை ஏறாமலேயே ஐயப்பன் தரிசனமா! நெஞ்சம் குளிர்ந்தது. கல்கிக்கு எப்படி நன்றி சொல்வேனோ!

மறைஞாயநல்லூர், அ. அருள்ராஜ்.

• 'சுறுக்-நறுக்' சொல்லோவியத்துக்கு எழுதி அனுப்ப இதுகாறும் வாசகர்களுக்கு ஒரு வாரமும் அதற்கு மேலும் கால அவகாசம் கொடுத்த தாங்கள் 17.12.95 இதழில் 18-ந்தேதிக்குள் பதில் கேட்கிறீர்கள், நியாயமா?

வடவள்ளி, ராமசுப்ரமணியன்.

*(2.1.96 க்கு முன்னர் அனுப்பப்படும் 'மனைவி/கணவன் என்பவர்...' கூப்பன்கள் பரிசீலனைக்கு ஏற்கப்படும். - ஆர்.)*

• "அடைக்கும் தாழ்" போட்டிக் கதை அருமை. தாய், தெய்வத்துக்குச் சமமாய், முக்காலமும் உணர்ந்த ஞானிகளுக்குச் சமமானவள் என்பதை அழகாய் வெளிப்படுத்தியிருந்தார் ஆசிரியர், பாராட்டுக்கள்.

பரமக்குடி, பா. உஷாராணி.

• உலக அழகியாக இருந்தாலும் நம்ம ஊர் சட்டத்திற்குமுன் சாதாரணம்தான் என்பதை உறுதியாக உணர்த்தியது, கடைசி பக்கக் கட்டுரை. இது போல தப்புச் செய்யும் அரசியல்வாதிகளையும் எந்நேரத்திலும் கைது செய்யும் நிலை எப்போது வரும் என்பதுதான் இப்போதைய கேள்விக்குறி.

இடைப்பாடி, ஜெ. பாலா.

• நெல்லை துணுக்ஸ் பகுதியில் 'உருட்டுநர், அல்வா காலி' ஆகிய இரண்டு துணுக்குகளும் நான் எழுதியவை. பிரசுரமான இந்த துணுக்குகளில் என் பெயர் இடம் பெறவில்லை!

திருநெல்வேலி - 1, எஸ். முகம்மது யூசுப்.

• அரசியல் வாதிகளை கேள்விகள் கேட்டுத் திணறடிக்கும் ரபி பெர்னார்ட்டை நீங்கள் கேள்வி கேட்டு மடக்கு மடக்கு என்று மடக்கி விட்டீர்களே. கடைசியில் "சொல்லில் வருவது பாதி.... நெஞ்சில் தூங்கிக் கிடப்பது மீதி!" என்று தமது தோல்வியை ஒப்புக் கொள்ள வைத்துவிட்டீர். பாராட்டுக்கள்!

தி. அகரம், பூமலை மணியன்.

**சுவிஸ் வங்கியில் இருக்கும் பணம் போதுமே!**



• கக்கன்

# கக்கன் பாராட்டிய நிகழ்ச்சி!

**வ**ருஷம் 1948-49.

ஐ.பி.எஸ். தேர்வாகி அந்த வருஷம்தான் ராஜஸ்தானிலுள்ள மவுண்ட்-அபு என்னுமிடத்தில் பயிற்சி மேற்கொண்டு, பின் கிழக்கு கோதாவரி மாவட்டத்திலுள்ள (தற்சமயம் ஆந்திராவில்) பிதாபுரம் போலீஸ் ஸ்டேஷனில் ஆறு மாதம் நடைமுறைப் பயிற்சிக்காக வந்தேன்.

ஐ.பி.எஸ். தேர்வானவனென்றாலும் கேஸ்களில் எப்படி விசாரணை நடத்த வேண்டும், எப்படிப்பட்ட அணுகுமுறையைக் கையாள வேண்டும், காவல் நிலையத்தின் அன்றாட நடைமுறைகள் என்ன... என்பது பற்றியெல்லாம் அனுபவ பூர்வமாகத் தெரிந்து கொள்ள வேண்டுமல்லவா?

அதனால் பிதாபுரம் ஸ்டேஷனில் கொஞ்ச நாள் கான்ஸ்டபிள், சப்-இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டராக பணி செய்து பயிற்சி பெற்றேன். இப்பயிற்சி தொடங்கிய சில நாட்களிலேயே, ஒரு பெரிய திருட்டுக் கேஸை சந்திக்க வேண்டி வந்தது. அற்புதமான அனுபவம்! தலையாய படிப்பினை! சொல்கிறேன்:

பிதாபுரத்திலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் லட்சுமிநரசாபுரம் என்றொரு கிராமம். அங்கு வசித்து வந்த ஒரு பெரிய ஜமீன் குடும்பத்தின் பரம்பரை நகைகள் மொத்தமும் அடங்கிய பெட்டி, ஓரிரவு களவு போய்விட்டதாகத் தகவல் வந்தது.

ஜமீன் குடும்பம்தான் என்றாலும் அந் நாட்களில், அத்தகைய ஜமீந்தார்களை ராஜா என்றே அழைப்பார்கள். இவர், 'கோலங்கா ராஜா' எனப்பட்டார்.

கோலங்கா ராஜா ஜமீனிலேயே திருட்டு நடந்து விட்டது என்ற செய்தி, காட்டுத்தீ போல் பரவி, அந்தப் பிரதேசமே பரபரப்பாகி விட்டது.

போலீஸ் ஸ்டேஷனுக்கு புகார் வந்ததும், விசாரணைக்காக இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர், ஹெட் கான்ஸ்டபிள், மேலும் சில போலீஸ்காரர்கள் புறப்பட்டார்கள்.

பயிற்சிக்காக வந்திருந்த நானும் எப்படி விசாரணை நடக்கிறது என்று பார்க்க, உடன் புறப்பட்டேன்.

அரண்மனை முழுதும் சல்லடை போட்டுத் தேடியபின் ஜமீன் ஊழியர்கள் ஒவ்வொருவராக விசாரிக்கப்பட்டனர்.

கதவுகள் ஏதும் இரவு திறந்திருந்ததா, வெளியாட்கள் யாராவது சந்தேகத்துக்கு இடமாக அன்று வந்து போனார்களா, முன் எப்போதாவது திருட்டு நடந்திருக்கிறதா, ஜமீனிலேயே சந்தேகத்துக்கு உரிய நபர்கள் யாராவது பணியாற்றுகிறார்களா என்று துருவித் துருவி விசாரித்தார்கள்.

நான் வெறுமனே கவனித்துக் கொண்டிருந்தேன்.

கோலங்கா ராஜாவின் மனைவியின் பணிப் பெண் ஒருத்தியை இன்ஸ்பெக்டர் விசாரித்துக் கொண்டிருந்த போது ஒரு விஷயம் கவனித்தேன்.

அந்தப் பெண் சற்று முன்னுக்குப் பின் முரணாகப் பேசுவதையும் அதிகமாகப் பதற்றம் அடைந்திருப்பதையும் கவனிக்க முடிந்தது. இன்ஸ்பெக்டருக்கும் சந்தேகம் எழ, வெளியே வந்து, அந்தப் பெண்ணைப் பற்றி ஆங்காங்கே விசாரிக்க ஆரம்பித்தார்.

பூதம் எழுந்தது!

அந்தப் பெண்ணுக்கும், அந்த ஊரைச் சேர்ந்த ஒரு லோக்கல் ரவுடிக்கும் கள்ளக் காதல் உண்டு என்று அரசல் புரசலாகப் பேச்சு கேட்டது.

இது போதாதா?

உடனே அந்த ரவுடியைப் பிடித்து வந்து விசாரிக்க ஆரம்பித்தார்கள்.

அவனைத் தனியாக நிற்க வைத்து, எதிரே இன்ஸ்பெக்டரும் சப்-இன்ஸ்பெக்டரும் ஹெட்-கான்ஸ்டபிளும் உட்கார்ந்து, மாறி மாறி தொடர்ந்து, இடை விடாமல் விசாரித்தார்கள். நானும் கூட உட்கார்ந்து கொண்டு உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

இம்மாதிரி விசாரணைகளில், விசாரிப்பவர்கள் நால்வராக இருப்பதால், ஒவ்வொருவராகச் சற்று இளைப்பாற முடியும்! ஆனால் விசாரிக்கப் படுபவருக்கு இளைப்பாறவெல்லாம் சமயம் கிடைக்காது!

அடிப்பதோ, பயமுறுத்துவதோ இன்றி இப்படி மாற்றி மாற்றி, கேள்வி கேட்டுக் கொண்டே இருந்தாலே போதும், களைப்பு மேலிட்ட குற்றவாளி, ஒரு கட்டத்தில் உண்மையை ஒப்புக் கொண்டு விடுவான்!

இவ்வாறே அன்று இரவு கடும் விசாரணை நடந்து கொண்டிருக்க, அந்த ரவுடி, கடைசியில் தனக்கும் ராணியின் பணிப் பெண்ணுக்கும் கள்ளத் தொடர்பு இருப்பது நிஜம்தான் என்று ஒப்புக் கொண்டான்.

தவிர, சம்பவம் நடந்த தினத்தன்று அப்பெண்ணே அரண்மனையின் பின்புறக் கதவைத் திறந்து வைத்திருந்ததாகவும், தான் வந்து அந்த நகைப் பெட்டியை எடுத்துப் போனதாகவும் வாக்குமூலம் தந்தான்.

இருவரும் ஊரை விட்டே ஓடிவிடத் திட்டம் போட்டிருப்பதாகச் சொன்னான்.

வேறு வழியின்றி குற்றத்தை ஒப்புக் கொண்டு, அந்த நகைப் பெட்டியைப் புதைத்து வைத்திருந்த ஆற்றங்கரைக்குக் கூட்டிப் போனான்.

இப்போது நினைத்தாலும் சிலிர்க்கிறது! பெட்ரோமாக்ஸ் விளக்கு மற்றும் நிலா வெளிச்சத்தில் அவன் காட்டிய இடத்தைத் தோண்டி, பெட்டியை எடுத்துப் பிரிக்க....

ஜொலிக்கும் வைர நகைகள்! அந்தக் காலத்திலேயே சுமார் முப்பதாயிரம் மதிப்பு அவற்றுக்கு. (இப்போது எத்தனை லட்சங்களோ!)

நகைகள் பெட்டியுடன் கிடைத்து விட்டன. அவை அனைத்தும் சரியாக இருக்கின்றனவா என்று பார்க்க, ஒரு மண்டபத்துக்குச் சென்றோம். நகைகளைச் சரி பார்த்து மதிப்புப் போடும் ஒரு நகைக் கலைஞர் வரவழைக்கப் பட்டார். நள்ளிரவு ஒன்று முப்பது இருக்கும்!

இன்ஸ்பெக்டர் என்னிடம் வந்தார்.

"சார், நகைகள்தான் கிடைத்துவிட்டதே.

## சி.வி. நரசிம்மன்


இனி நீங்கள் சென்று ஓய்வெடுத்துக் கொள்ளலாமே! கணக்குப் பார்த்து முடிக்க காலை ஆகிவிடும்" என்றார்.

நான் மறுத்து, "நானும் கூடவே இருக்கிறேன்; நீங்கள் எவ்வாறு ரிகார்டு தயாரிக்கிறீர்கள், என்னென்ன எழுதப்படுகின்றன என்பதையெல்லாம் தெரிந்து கொள்ள ஆவலாய் இருக்கிறேன்" என்றேன்.

அவர் ஏனோ தயங்கினார். மேலும் சில முறை நான் தொடர்ந்து இருக்க வேண்டியது அவசியமில்லை என்று சொல்லி, நான் களைப்பாறச் செல்லலாம் என்றார்.

நான் மறுத்து விட்டேன்.

• கக்கன் எழுதிய பாராட்டு....



கணக்கெல்லாம் சரிபார்த்து, எல்லா ரிகார்டுகளையும் சட்டப்படி எழுதி, சாட்சிகள் கையெழுத்திட்டு, அந்த ரவுடி மேல் கோர்ட்டில் கேஸ் போட்டு, தண்டனையும் அளித்தாயிற்று. நகைகள் ஜமீன்தாரிடம் திருப்பிச் சேர்க்கப்பட்டன.

இதெல்லாம் முடிந்து ஒரு மாதம் கழித்து, கோலங்கா ராஜா, நான் தங்கியிருந்த அறைக்கு திடீரென்று ஒரு நாள் வந்தார்.

"சார், உங்களுக்கு எப்படி நன்றி சொல்வதென்று தெரியவில்லை. பரம்பரை பரம்பரை



**"என்னது! புது வருஷத்துக்குப் பொருத்தமா புடவை வாங்கியிருக்கியா?"**

**"ஆமாங்க! விலை 1996 ரூபாய் 96 பைசா!"**

யாக எங்கள் குடும்பத்தில் இருந்து வரும் நகைகள் அவை. அவை தொலைந்தே போயிருந்தால் அது எங்கள் பரம்பரைக்கே அவமானம். உங்களால்தான் அவை பத்திரமாகக் காப்பாற்றப் பட்டன. உங்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன். என்னிடம் ஓர் உயர் ஜாதி குதிரை உள்ளது. அதை உங்களுக்கு அன்பளிப்பாகத் தர விரும்புகிறேன்" என்றார்.

நான் சொன்னேன்: "பாருங்கள், இதில் என் திறமை ஏதுமில்லை. உங்கள் பாராட்டு, நியாயமாக வழக்கை விசாரித்து, துப்பறிந்த இன்ஸ்பெக்டர், கான்ஸ்டபிள்களுக்குப் போய்ச் சேர வேண்டும். நான் வெறும் ட்ரெயினி. சும்மா நின்று விசாரணை முறைகளையும், நெறிகளையும் கற்றுக் கொண்டதோடு சரி. தவிர, இது போல் அன்பளிப்பு தருவதும் - பெறுவதும் சட்ட விரோதம். ஆகவே தயவு செய்து போய் விடுங்கள்."

ராஜா போய்விட்டார்.

இதெல்லாம் ஒரு புறம் இருக்க, எனது டிரெயினிங் காலத்தில், நான் வாராவாரம் எனது மேலதிகாரியிடம் (காகிநாடா எஸ்.பி.) அந்தந்த வாரம் நடந்தவைகளைப் பற்றி ரிப்போர்ட் செய்ய வேண்டியவனாக இருந்தேன்.

அதன்படி, இந்தத் திருட்டு கேஸ் ஆரம்பம் முதல், கோலங்கா ராஜா குதிரை தர வந்ததும், நான் ஏற்க மறுத்ததும் வரை எஸ்.பி.யிடம் சென்று விவரித்தேன். "இன்ஸ்பெக்டர், கான்ஸ்டபிள் இவர்களை விட்டு விட்டு எனக்கு எதற்கு அவர் பரிசு தர விரும்பினார் என்பது புரியவில்லை" என்றேன்.

எஸ்.பி. சிரித்துக் கொண்டே சொன்னார்: "ரொம்ப சிம்பிள்! அந்த இன்ஸ்பெக்டர் விசாரணை செய்வதில் திறமைசாலிதான். ஆனால் அவர் நேர்மையில் மக்களுக்கு அவ்வளவு நம்பிக்கை கிடையாது. நீ வெறும் டிரெய்னியாக அங்கு போயிருப்பினும் நீ ஒரு ஐ.பி.எஸ். ஆபீசர். ஒரு மேலதிகாரியின் ராங்க் உனக்கு! நீ கூடவே இருந்ததால்தான் நகைகள் கணக்கெடுப்பு ஒழுங்காக நடந்தது. இல்லாவிட்டால், கிடைத்தவற்றில் ஒன்றிரண்டு குறைந்திருக்கக் கூடும் அல்லவா - ராஜாவிடம் போய்ச் சேரும் போது?"

ஒரு மேலதிகாரியின் தலையாய பொறுப்பு எனக்குப் புரிந்தது!

ஆனால் ஒட்டுமொத்தமாக போலீஸ் துறையைக் குறை சொல்லவோ, குற்றம் சாட்டவோ கூடாது. ஆங்காங்கே சில மோசமான சம்பவங்கள் நடக்கக் கூடும் தான். ஆனால் நல்லவர்கள், நேர்மையானவர்கள் இங்கும் இருக்கிறார்கள்.

ஓர் உதாரணம் பாருங்கள்.

1965 இல் நான் திருச்சியில் டி.ஐ.ஜியாக இருந்தேன். அப்பொழுது காங்கிரஸ் ஆட்சியில் உள்துறை அமைச்சராக இருந்த கக்கன் திருச்சியில் ஏதோ ஒரு நிகழ்ச்சிக்காக சென்னையிலிருந்து காரில் வருவதாக இருந்தது.

பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனித்து விட்டு, காத்து இருந்தேன்.

காரில் வந்து கொண்டிருந்த கக்கன், விழுப்புரம் தாண்டி விக்கிரவாண்டி அருகே, காவல் நிலையத்தில் பெரும் கூட்டம் கூடியிருப்பதைக் கண்டு, வண்டியை நிறுத்தி விட்டு உள்ளே சென்று விசாரித்திருக்கிறார்.

உள்ளூரில் ஏதோ திருட்டு. துப்பறிந்து, திருட்டுப்போன பொருட்களைக் கண்டு பிடித்த இன்ஸ்பெக்டர், அவற்றை ஊர்ப் பொதுமக்கள் எதிரிலேயே வைத்து கணக்கு சரி பார்த்து, சாட்சிகளின் உதவியோடு ரிகார்டு தயார் செய்து கொண்டிருந்ததைக் கண்டார் கக்கன்.

அவருக்கு ரொம்ப சந்தோஷமாகிவிட்டது! 'இப்படி ஒரு நேர்மையான போலீஸ் அதிகாரியா' என்று வியந்து பாராட்டியதோடல்லாமல், அங்கிருந்த 'விஸிட்டர்ஸ் புக்'கிலும் அந்த இன்ஸ்பெக்டரின் தொழில் நேர்த்தியை, நேர்மையைப் பாராட்டி எழுதி வைத்தார்.

திருச்சி வந்து சேர்ந்ததும், நான் அவரைச் சந்தித்த போது, விக்கிரவாண்டி காவல் நிலையத்தில் தாம் கண்ட நிகழ்ச்சியை வர்ணித்துச் சொன்னார்.

"எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கிறது நரசிம்மன். இப்படி ஒரு நேர்மையான போலீஸ்காரரைச் சந்திக்க நேர்ந்ததில் பெருமைப்படுகிறேன்!" என்று ஓயாமல் புகழ்ந்தபடி இருந்தார்.

நேர்மையான போலீஸ்காரர்களும், அவர்களின் நேர்மையைக் கண்டு போற்றுகிற தலைவர்களும் கூட இங்கே இருந்திருக்கிறார்கள்!

(அடுத்த வாரம்)

தனபிரியா தனபிரியா தனபிரியா தனபிரியா தனபிரியா தனபிரியா தனபிரியா தனபிரியா

**தனபிரியாவின் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்**

# தனபிரியா

உங்கள் டெபாசிட்களுக்கு

**பிக்செட் டிபாசிட்**

**25 + 5%**

வட்டி ஊக்கத் தொகை

**பென்ஷனர் முதியோர்**

**30 + 2%**

வட்டி ஊக்கத் தொகை

மற்றும்

- ரூ. 50,000/- டெபாசிட் செய்பவர்களுக்கு (3 வருடங்களுக்கு) பெரிய கலர் T. V.
- ரூ. 25,000/- டெபாசிட் செய்பவர்களுக்கு (3 வருடங்களுக்கு) வாஷிங் மெஷின் அல்லது 165 லிட்டர் பிரிட்ஜ்
- ரூ. 10,000/- டெபாசிட்களுக்கு 3 கிராம் தங்க காசு
- ரூ. 5,000/- டெபாசிட்களுக்கு 1 கிராம் தங்க காசு

பரிசுகளாக வழங்கப்படும்

இச்சலுகை 25.12.95 முதல் 5.1.96 வரை மட்டுமே

⌘ வட்டிக்கு பின்தேதியிட்ட காசோலைகள் முன்னதாக வழங்கப்படும்.

⌘ வெளியூர் டெபாசிட்தாரர்களின் காசோலைகள், டிமாண்ட் டிராப்டுகள் (D.D.) ஏற்றுக் கொள்ளப்படு பரிசுப் பொருட்கள் அனுப்பி வைக்கப்படும்.

## தனபிரியா இன்வெஸ்ட்மெண்ட்ஸ் (இந்தியா) லிமிடெட்

தலைமை அலுவலகம் : 143/3, காம்தார் பில்டிங், பிராட்வே, சென்னை - 600 108. Ph: 565668

கார்பரேட் அலுவலகம் : 34, துரைசாமி சாலை, தி.நகர், சென்னை - 600 017. Ph: 8281116.

• ஞாயிற்றுக்கிழமையும் அலுவலகம் இயங்கும் •

**விரைந்து சேருங்கள் மகிழ்ச்சியாக வாழுங்கள்**

தனபிரியா தனபிரியா தனபிரியா தனபிரியா தனபிரியா தனபிரியா தனபிரியா தனபிரியா

# KALKI SHOPPING PAGE

ADYAR

## STUDENTS XEROX

*Quality that is close to perfection*

**XEROX**
**LASER PRINTING**
**WORD PROCESSING**
**DTP**
**ELECTRONIC & MANUAL TYPING**
**BINDING & LAMINATION**

## பத்மஸ்ரீ பேர்ல்ஸ்

பிரத்யேகமான ஹைதராபாத் முத்து மற்றும் கல் விற்பனையாளர்

உங்களின் பிறந்த தேதியும், ஜென்ம நட்சத்திரத்தையும் மூலமாக வைத்து ஏற்ற கல்லை தேர்ந்தெடுக்கலாம்.

**சிறப்புச் சலுகை**

இலவச 5 கிராம் வெள்ளி காசு ஒவ்வொரு 500 ரூ மதிப்புள்ள பொருள் வாங்குபவர்களுக்கு மட்டும்.

எங்களுடைய பலவகையான சிறப்பு சேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள். விவரங்களுக்கு

**PADMASHRI PEARLS**
**53, North Usman Road,**
**T. Nagar, Madras - 600 017.**
**Phone : 8234060**

Hyderabad Show Room :
Padmashri Pearls, M.G. Road,
Secunderabad - 3.
Phone : 841936, 7702594

## PONGAL DISCOUNT SALE

**10 TO 15% UPTO 15.1.96**

# RANI SAREES
## SAKUNTHALA SAREES

- BENGAL COTTON SAREES
- BENGAL PURE PRINTED SILKS
- MADURAI SUNGUDI SAREES

VISIT

## MADURAI TEXTILES

2, SIVAPRAKASAM ROAD,
PONDY BAZAAR, MADRAS - 600 017
(NEAR AGASTHIYAR TEMPLE)

**A COURTEOUS SERVICE AWAITS YOU**

# முதல்வரா, பிரதமரா..... யார் ராஜதந்திரி?

## நீங்கள் கேட்டவை - தராசு

● எம்.எம். ஆனந்தன், வந்தவாசி.

*? காவிரி நீர் பிரச்னை குறித்து ஜெயலலிதாவுடன் பேசித் தீர்ப்போம் என்கிறாரே தேவேகௌடா?*

! பேசுவதற்கான நேரம் இதுவல்ல... பயிர்கள் வாடிக் கொண்டிருக்கின்றன. முதலில் நடுவர் மன்ற ஆணைப்படி, இடைக்கால ஏற்பாடாக பதினோரு டி.எம்.சி. தண்ணீரைத் திறந்து விடட்டும்; அப்புறம் நிரந்தரத் தீர்வுக்குப் பேச்சு வார்த்தை நடத்திக் கொள்ளலாம். ஆனால் கௌடாவின் லக்கிலேசி, 'எங்கெங்கு, எந்தெந்த அளவுகளில், எவ்வெப்போது தண்ணீர் திறந்து விட வேண்டும்?'என்றல்லவா சாது போல் கேட்கிறார்! இதைத்தான் விஷமத்தனம் என்பது!

● தங்க சங்கர பாண்டியன், சென்னை - 103.

*? பிரபஞ்சனுக்கு சாகித்ய அகாதமி விருது கிடைத்துள்ளது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?*

! கல்கியில் 'சுகபோகத் தீவுகள்' எழுதி தமிழக அரசின் பரிசு பெற்றார். பாண்டிச்சேரி அரசின் சில பரிசுகளையும் தட்டிக் கொண்டவர். வாசகர்களின் உள்ளங்களை வசப்படுத் தியவரின் 'வானம் வசப்படும்' நாவலுக்கு அகாதமி பரிசு வசப்பட்டது மகிழ்ச்சியே. வழக்கமாக நடப்பது போல் இப்பரிசு எழுத்தாளரின் இலக்கியப் பணிகளுக்கு முற்றுப் புள்ளியாகிவிடக்கூடாது; பிரபஞ்சத்தையே வசப்படுத்தும் அளவுக்கு அவர் எழுத்து சிறக்க வாழ்த்துவோம்!

● ஜி. செல்வராஜன், வெங்கலம்.

*? இளந்துருக்கியர் என்று ஒரு காலத்தில் அழைக்கப்பட்ட சந்திரசேகருக்குச் சிறந்த பார்லிமென்டேரியன் விருது வழங்கப்பட்டுள்ளது பற்றி?*

! தொகுதி மக்களின் தொடர்ந்த ஆதரவு இருந்தால்தான் ஒருவர் நீண்ட காலத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினராக இருக்க முடியும். சந்திரசேகருக்கு அத்தகைய ஆதரவு கிடைத்ததே பெருமைக்குரிய விஷயம்தான். காங்கிரஸ் கட்சிக்குள்ளிருந்தபடியே நேருவுடன் கருத்து மாறுபாடு கொண்டு, துணிச்சலுடன் அவற்றை எடுத்துச் சொன்னவர். (இதனால்தான் இளம் துருக்கியர் பட்டம்!) ராஜீவ் தயவில் கொஞ்ச காலம் பிரதமராக வேறு இருந்தார். எனவே விருது கிடைத்ததில் வியப்பில்லை. ஆனால், தமிழகத்தில், போதிய காரணமின்றியே தி.மு.க. அரசை டிஸ்மிஸ் செய்தது அவரது பணிக் காலத்தின் கரும்புள்ளி என்பதையும் மறுக்க முடியாது!

● ஜான் சாமுவேல், பம்பாய் - 19.

*? முடிய போகிற ஆண்டையும் வரப்போகிற ஆண்டையும் எவ்வாறு கணிக்கிறீர்கள்?*

! நடந்து முடிந்த ஆண்டை எண்ணி நெடிய பெருமூச்சுதான் வருகிறது. இருந்தாலும் வரப்போகிற ஆண்டுக்கு எதிர்பார்ப்புடன் கூடிய வாழ்த்துகள்!

● பத்ம சிவாஜி, நீடாமங்கலம் ❐

*? பாரதப் பிரதமர்- தமிழக முதல்வர்- இருவரில் யார் ராஜதந்திரி?*

! நேர்மை என்பது சொக்கத் தங்கம்- அதில் ராஜதந்திரம் என்ற செம்பைச் சரியான விகிதத்தில் கலந்தால், நல்லாட்சி என்னும் உயர்ந்த நகையை உருவாக்கலாம். ஆனால், வெறும் ராஜ தந்திரம் மட்டுமே ... யார்?



• கடவுளாக்கினார்!



• பிரபஞ்சம் வசப்படட்டும்!





• ராஜதந்திரி...



• வார்த்தை விளையாட்டு!



* மறக்க முடியாத 'வால்கள்'



* பெருமைக்குரிய ஆதரவு!



* பேசும் நேரமா?

மத்தியிலும் நமது மாநிலத்திலும் கடைப் பிடிக்கப்படுகிறது. அது தங்கம் கொஞ்சமும் கலக்காத வெறும் செம்புக்குத்தான் சமம்.

● செ. அன்புமதி கோபிநாத், கொப்பம்பட்டி.

*? இலங்கைத் தமிழருக்குக் குரல் கொடுக்கிறோம். ஆனால் புலிகளை ஆதரிக்கவில்லை என்று சொல்வது இரட்டை வேடம் தானே?*

! இல்லை! காரணம்– இலங்கைத் தமிழர்களின் ஒரே பிரதிநிதியாகப் புலிகள் அமைப்பைக் கொள்ள முடியாது.

● குரு நாகராஜன், குருசாமிபாளையம்.

*? தமிழ் பேசுபவர்கள் எல்லாருமே தமிழர்கள் என்கிறாரே ரஜினி?*

! அந்த பரந்த மனம் தாய் மொழித் தமிழர்களுக்கல்லவா வர வேண்டும்!

**□ ரூ. 25 பரிசு பெறுபவர்:**
**பத்ம சிவாஜி,**
**34, வடக்கு வீதி,**
**நீடாமங்கலம் – 614 404.**

● செய்யது மைதீன், மேலப்பாளையம்.

*? மறைந்த எழுத்தாளர் ராஜேந்திரகுமார் குறித்து...?*

! மர்மக் கதைகள் எழுதிப் பெயர் பெற்றவர்; ஆனாலும் அவருடைய 'வால்கள்' படித்துச் சிரித்ததுதான் வாழ்நாள் முழுதும் நினைவிருக்கும்.

● கண்மணி கப்பு வேதையாசித்ரவேலு, கருப்பம்புலம்.

*? நான் கேட்ட கேள்விகள் பல்வேறு நபர்களின் பெயர்களில் வெளி வரும்போது வயிறு எரிகிறது. PPகூடுகிறது. நுகர்வோர் பேரவையை நாடலாம் என்றிருக்கிறேன்...*

! ஒரே கேள்வியை ஓராயிரம் பேர் கேட்கும் போது எனக்கு ஏற்படும் எரிச்சலை எந்தப் பேரவையில் போய் முறையிடுவதாம்! நிற்க; அது PPஅல்ல B.P. -Blood Pressure மிஸ்டர் சித்ரவேலு!

● திருமலை கோவிந்தன், மதுரை.

*? ராஜ் டீ.வி. நிகழ்ச்சிகளில் குமரி அனந்தன் ரஜினியைப் பற்றிப் பேசினாரே... அது தேவைதானா?*

! கிட்டத்தட்ட கடவுள் ஆக்கிவிட்டார் இல்லையா...! என்ன செய்ய! காங்கிரஸ் கட்சியில் நிலவும் கவலைக்கிடமான சூழ்நிலை அவரை அப்படிப் பேச வைக்கிறது! ஆனால் தன் மானத்தை விட்டுவிட்டு அரசியல் உறவு வைத்துக் கொள்வது ஆபத்து. சரணாகதி தத்துவம் ஆன்மிகத்தில் வேண்டுமானால் சரியாக இருக்கலாம்– அரசியலுக்கு அல்ல!

● ஜோ. ஜெயக்குமார், நாட்டரசன் கோட்டை.

*? ''நான் நாஸ்திகன்'' என்று மு.க. கூறியுள்ளாரே?*

! 'Non-Vegetarian' என்பது போல் 'நான் – ஆத்திகன்' என்று கூறியிருப்பாரானால் அது சாமர்த்தியமான சொற்பிரயோகம். 'நான் நாத்திகன்; ஆனால் ஆத்திகர்களின் விரோதி அல்ல' என்ற அவரது நிலையைச் சிறப்பாக உணர்த்துகிறது.

● என். குப்புசாமி, வெங்கிடாபுரம்.

*? பந்த் தினத்தில் 'சன்', 'ஜெ.ஜெ' டீ.வி. செயல்பட்டது குறித்து...?*

! சொந்த வருமானம் பாதிக்கப்படுகிறது என்றால் 'பந்த்' ஆவது மண்ணாங்கட்டியாவது!

● கவி. இளங்கதிரவன், கோவை - 11.

*? மாறுவது எது? மாறாதது எது?*

! மாறுவது ஆட்சி; மாறாதது ஊழல்!

● அருணா, கோநகர்.

*? கொள்ளையடித்தது கோவில் கட்டத்தான் என்றாலும் அந்தக் கொள்ளை குற்றம்தான் என்றார் காந்திஜி. ஆனால் நீங்களோ, பள்ளி கட்டினார் என்பதற்காக சாராய ஆலை அதிபருக்குப் புகழ் பாடியிருக்கிறீரே?*

! என்னுடைய விடையும் 'என்றாலும்' என்ற சொல்லை உள்ளடக்கித்தானே இருக்கிறது. அந்தச் சொல்லே கல்கி அவருக்கு வக்காலத்து வாங்கவில்லை; நிறை, குறை இரண்டையும் எடுத்துக் காட்டியுள்ளது என்பதைத் தெளிவாக்கும். கவனித்துப் பாருங்கள்.

● எஸ். ஏ. கேசவன், குருமலை.

*? திரைப்படங்கள் மக்களைத் திருத்தியதாகச் சரித்திரம் உண்டா?*

! இல்லையே! அதனால்தான் திரைப்படங்களை திருத்த வேண்டும் என்று மக்கள் நினைக்க ஆரம்பித்துள்ளனர் போலிருக்கிறது. மதுரையில் ஒரு திரையரங்கில் ஆபாச படம் காட்டியதற்காகப் பெண்கள் கொதித்துப்போய், ஆர்ப்பாட்டம் செய்து திரையையே கிழித்திருக்கிறார்கள்!


அடுத்த இதழ்
அன்பளிப்பு ஸ்பெஷல்!
விஷ்வக்சேனன் எழுதும்
இந்திரதனுசு
நிஜமான சரித்திரத் தொடர்கதை ஆரம்பம்!

# பந்தம்

உச்சிச் சூரியன் தகித்துக் கொண்டிருந் தான். சைக்கிளை அவசரமாக வராந்தாவில் நிறுத்தி விட்டு உள்ளே நுழைந்த செல்வம், வாங்கி வந்திருந்த புது மஞ்சள் கயிற்றை விமலாவிடம் நீட்டினான்.

அவள் கணவனைப் பார்த்தாள். எதுவும் கேட்கவில்லை. கேட்காமலே புரிந்து விட்டது.

"இதைக் கட்டிக்கிட்டு செயினைக் கழட்டிக் குடு விமலா...." குரலில் நிறையவே தயக்கம். அவள் கண்களைப் பார்ப்பதைத் தவிர்த்தான்.

அவளையும் அறியாமல் விமலாவின் விரல்கள் தாலியைத் தாங்கித் தொங்கிய அந்த ஆறு பவுன் சங்கிலியையும் அத்தோடு இணைந்திருந்த காசுகளையும் குண்டுகளையும் வருடிப் பார்த்தன. காது, மூக்கு, கைகள், விரல்கள் எல்லாமே வெறுமையாகி, கடைசியாகத் தங்கியிருந்தது இந்தச் சங்கிலிதான்.

எல்லாம் இந்த ஒரு வருடத்திற்குள்தான்.

"அடகு வைக்கவா?" அவளது உதடுகள் வார்த்தைகளை ரகசியமாகப் பிரசவித்தன.

"இல்லே. வித்துடத்தான்" - கணவனின் குரலும் மனைவிக்கு மட்டும்தான் கேட்டது.

மஞ்சள் கயிற்றை வாங்கிய விமலா அடுப்படியில் சுவாமி படங்கள் வைத்திருந்த அலமாரி நோக்கி நடந்தாள்.

செல்வத்துக்குக் கண்கள் கலங்கின.

'ஏன்?... ஏன் இதெல்லாம்? தேவைதானா இந்தப் பிடிவாதம். ஒரே ஒரு



மன்னிப்புக் கடிதம் போதும். எல்லாம் பழைய படி மாறிவிடும். மாறிவிடலாமா? சாகக் கிடக்கிற அம்மாவுக்கு மருந்து கூட வாங்கி முடியாம... எதுக்கு இதெல்லாம்...?'

'சலனப்பட்டு விடுவோமோ?' என்ற பயம் அவனுள் எழுந்த போது அடிவயிற்றில் அமிலம் சுரந்து 'கூடாது கூடாது!' என்று அழுத்தியது.

செல்வத்துக்கும் அவனது மேலதிகாரி அரங்கநாதனுக்கும் கடந்த மூன்று வருடங்களாகவே யுத்தம் நடந்து வந்தாலும் சென்ற வருடம் தான் அது உச்சத்தை எட்டியது.

நகரின் எல்லையில் பரந்து கிடந்த ஆராய்ச்சி நிலையத்தில் செல்வத்துக்கு டிரைவர் வேலை. அந்நிலையத்தின் இயக்குநர் அரங்கநாதனுக்கு அவன்தான் காரோட்டி.

"இத பாருப்பா செல்வம். உன் திமிரான போக்கை இத்தோட நிறுத்திக்கோ. இல்லேன்னா நான் என்ன செய்வேன்னு தெரியாது...."

"மரியாதை குடுத்துப் பேசுங்க சார்..."

"நீ பண்றது ஒண்ணும் மரியாதையா இல்லையே. என்னைப் பத்தியும், என் நிர்வாகத்தைப் பத்தியும் ஊரிலே இருக்கிற மஞ்சள் பத்திரிகைக்கெல்லாம் கன்னா பின்னான்னு செய்தி குடுக்கிறியாம். இந்த வாரம் நெற்றிக் கண் பத்திரிகையிலே என் மீது குற்றம் சாட்டி வந்திருக்கிற கட்டுரை நீ எழுதிக் குடுத்தது தான்னு எனக்குத் தகவல் வந்தாச்சு."

"மன்னிக்கணும் சார். அதைப் பத்தி நான் உங்ககிட்ட பேச விரும்பலை...."

"என்னடா விரும்பலே? மரியாதையா உன்

**ராஜ்கோகுல்**

வேலையைப் பார்த்துக்கிட்டு இரு. இல்லேன்னா ரொம்ப கஷ்டப்படுவே...."

"சார் வார்த்தைகளை நிதானமாப் பேசுங்க."

"சரி, சரி. உன்கிட்டே என்ன பேச்சு. உன்னை டிராக்டர் டிரைவரா மாத்தியிருக்கேன். நாளையிலே இருந்து உனக்குப் பண்ணையிலேதான் வேலை...."

"என்னாலே அதை ஒத்துக்க முடியாது சார்."

"ஏன்? நீ பெரிய மைனர்! டிராக்டர் ஓட்ட மாட்டியோ?"

"எதையும் ஓட்டலாம் சார். ஆனா அது அதுக்குள்ள லைசென்ஸ் வேணும். டிராக்டர் ஓட்ட எனக்கு அனுமதி கிடையாது. என் லைசென்ஸிலே அதுக்குன்னு தனியா 'எண்டார்ஸ்மெண்ட்' வாங்கினாத்தான் நான் டிராக்டர் ஓட்டலாம்...."

"நீ என்ன கருமத்தை வாங்குவியோ எனக்குத் தெரியாது. நாளையிலே இருந்து நீ கார் டிரைவர் இல்லே."

"முடியாது சார். எனக்கு வேலை குடுக்கும் போது கார், பஸ் போன்ற வாகனங்கள் ஓட்டற டிரைவராத்தான் அப்பாயிண்ட் பண்ணினாங்க."

"சட்டம் பேசறியோ, சட்டம்! நான்தான் இந்த ரிசர்ச் சென்ட்டருக்கே சீஃப். நான் சொன்னதைச் செய், போ. இல்லேன்னா தொலைச்சுடுவேன், தொலைச்சு!"

"சும்மா சுத்தாதீங்க சார்... எனக்கும் தெரியும் உங்களை என்ன செய்யணும்னு!"

"என்னடா செய்துடுவே நீ... ஒழிச்சுக்



**கிரிக்கெட் அம்பயரின் பாக்கெட்டில் இருக்கும் 'பேஜரில்' அவர் மனைவி : "சந்தேகப்பட்டு முழிக்காதீங்க ரன் அவுட் கொடுங்க!"**

**— லெ.நா. சிவகுமார்**

கட்டிருவேன், கட்டி." அவருக்கு உடம்பே ஆட ஆரம்பித்தது.

"பார்த்துக்கலாம் வாய்யா! உன் சின்ன வீடு செட் அப் எங்க ஏரியாவிலேதானே இருக்கு. அந்தப் பக்கம் வந்துதானே ஆகணும். நல்லா கவனிச்சு உடச் சொல்றேன்...."

பதிலுக்கு அவனும் கத்தி விட்டு வெளியேறி விட்டான்.

அடுத்த நாள் அவன் வேலைக்குப் போன போது அவனுக்குக் காத்திருந்தது - தாற்காலிக வேலை நீக்கம் - சஸ்பென்ஷன் உத்தரவு!

மிகப் பெரிய அட்வகேட் என்று கேள்விப்பட்டிருந்த வக்கில் வெள்ளயங்கிரி இவ்வளவு எளிமையாக இருப்பார் என்று செல்வம் எதிர்பார்க்கவே இல்லை.

"ரொம்ப விரிவா, தெளிவா எழுதியிருந்தே. லெட்டர் முழுசும் படிச்சேன். சரி, உன் மேலே உங்க டைரக்டருக்கு அப்படி என்ன ஆத்திரம்?"

"அலுவலக வேலைக்காக அவருக்குத் தரப்பட்டிருக்கும் காரை தன் சொந்த வேலை எல்லாத்துக்கும் பயன்படுத்த நினைப்பார் சார். டூட்டி நேரம் தவிர என்னை நேரம் காலம் இல்லாம காரோட்டக் கூப்பிட்டார் சார். நான் போக மாட்டேன். தினமும் பதினைந்து கிலோ மீட்டர் டவுனுக்குப் போய் அவங்க மனைவி ஷாப்பிங் பண்ண நான் கார் ஓட்டணும்னு சொன்னார். நான் ஒத்துக்கலை. அரசாங்கக் காரை சொந்த உபயோகத்துக்குப் பயன்படுத்த நான் ஒத்துழைக்க முடியாதுன்னு கண்டிப்பா சொல்லிட்டேன் சார். 'நாகர்கோவிலிலே கல்யாணம் காரை எடு'ன்னு சொல்வாரு. 'பழனியிலே காது குத்து கிளம்பும்பாரு. எல்லாத்துக்கும் மேலே டவுனிலே அவர் செட் அப் பண்ணியிருக்கிற சின்ன வீட்டுக்கு அழைச்சிட்டுப் போயிட்டு விடிய விடிய, காரோட கேட்டிலேயே காவல் காக்க வைச்சிட்டாரு சார். நான் போய் அவரு மனைவி கிட்டே பத்த வைச்சுட்டேன். ரோட்டிலே வண்டியை நிறுத்திக்கிட்டு, 'போய் பிராந்தி பாட்டில் வாங்கிட்டு வா'ன்னார். 'அதுக்கு வேற ஆளைப் பாருங்க'ன்னு சொல்லிட்டேன். எல்லாம் சேர்ந்து என் மீது ஏகமாக் கோபத்தைத் தூண்டி விட்டுடுச்சு சார்...."

"கொய்ட் இன்ட்ரஸ்டிங்... அப்புறம்?"

"இதெல்லாம் பெரிசில்லை சார். என்னை பெட்ரோல் திருடச் சொன்னார். பொய்யா பெட்ரோல் பங்கிலே பில் வாங்கிக் குடுக்கச் சொன்னார். நான் மறுத்துட்டேன். அப்புறமெல்லாம், இந்த மாதிரி வேலைகளுக்கு என்னைக் கூப்பிடுவதில்லை. வேன் டிரைவர் முருகேசனைப் பயன்படுத்திக்கிட்டார்."

"மொத்தம் எத்தனை டிரைவர் இருக்கீங்க?"

"கார், ஜீப், ஒரு வேன், ஸ்டாஃப் பஸ், பண்ணையில் டிராக்டர். மொத்தம் அஞ்சு டிரைவர் இருக்கோம். புது டயர் மாத்தறதா கணக்கு எழுதிட்டு ரீரீட் டயரை வாங்கிப் போட்டுருவாங்க சார். போன வருஷம் ஜீப் வாங்கினப்போ புது இஞ்சினை அங்கேயே கழற்றி வித்துட்டு, காயலாங்கடை இஞ்சினை மாட்டிட்டு வந்துட்டாங்க. வண்டிகளைத் தரமா வேலை பார்க்கிற வொர்க்ஷாப்பிலே விடறதில்லை சார். எந்த ரிப்பேரையும் ஒழுங்கா பண்றதில்லே. ஆனா மாசா மாசம் பத்தாயிரம் பதினைந்தாயிரம்னு ரிப்பேர் செலவுக்குக் கணக்கு மட்டும் எழுதிடறாங்க சார். இந்த வண்டிகளை ஓட்டுறது உயிருக்கு ஆபத்தான விஷயமா இருக்குன்னு பல முறை டிரைவர்கள் புகார் பண்ணியிருக்கோம் சார்...."

"இந்த விஷயத்தையெல்லாம் பத்திரிகைகளிலே எழுத வைச்சு வெட்ட வெளிச்சமாக் கிட்டிங்களாக்கும்?"

"ஆமாம் சார். நெற்றிக் கண் நிருபர் சந்திரனோட அறிமுகம் மூலமா அதன் ஆசிரியரோட பழக்கம் ஏற்பட்டுச்சு. எனக்குத் தெரிஞ்ச முறைகேடுகளை எல்லாம் சொன்னேன். எழுதியும் கொடுத்தேன். செய்தி நல்லாவே பரவிடுச்சு."

"அவருக்கு உன் மேலே கோபம் வராம இருந்திருந்தாத்தான் ஆச்சரியப்படணும்! மானத்தை வாங்கியிருக்கியே! ம்ம்.... கீழ்ப்படியாமை, அதிகாரியைத் தகாத வார்த்தைகளால் இட்டி பயமுறுத்தியது... யூனிபார்ம் போடாமல் டூட்டிக்கு வந்தது.... மூன்றாவது குற்றச்சாட்டு உண்மையா செல்வம்...?"


"நிச்சயமா பொய் சார். வெள்ளை பேண்ட், சர்ட், தொப்பி இல்லாம காரைத் தொடமாட்டேன் சார்."

"சரி. நான் சொல்றதை எழுதிக்கோ..."

குற்றச்சாட்டுகளை மறுக்கும் வகையில் அவர் ஆறு பக்கத்திற்குக் கூறிய பதில்களை எழுதிக் கொண்டு புறப்பட்டான்.

"ஃபீஸ் எதுவும் வேண்டாம்ப்பா. 'இந்தப் போராட்டத்திலே வெற்றி கிடைச்சிடுச்சு. திரும்பவும் வேலையில் சேர்ந்துட்டேன்'னு ஒரு போஸ்ட் கார்ட்டு எழுதிப் போட்டின்னா அந்த சந்தோஷத்தையே ஃபீஸா வைச்சுக்குறேன்... போயிட்டு வா. ஆல் தி பெஸ்ட்...."

"ஏம்ப்பா செல்வம் இப்படி அவசரப்படறே? உடனே போராட்டம் பண்ணணும்னா எப்படி? சஸ்பென்ஷன் தானே பண்ணியிருக்காங்க. கோரிக்கை குடுக்கணும். பேசிப் பார்க்கணும். பேச்சு வார்த்தையிலே தீரலைன்னாத் தானே போராட்டத்துக்குப் போகணும். கவலைப் படாம இருப்பா. சங்கம் உன்னை அப்படி விட்டுடாது. சரி, சரி இன்னொரு ஆம்



**"தலைவர் கொஞ்ச நாளா எல்லா எதிர்க்கட்சித் தலைவரையும் பாராட்டிப் பேசறாரே... ஏன்?"**

**"தேர்தல்ல யார் கூட கூட்டணி அமைக்கறதுன்னு குழப்பத்துல இருக்கார்!"**

**— அம்பை தேவா**



"சும்மா தொந்தரவு பண்ணாம போயிடு. திடீர்னு உன்னை என் 'வளர்ப்பு சிஷ்யை'னு அறிவிப்புச் செய்யறதெல்லாம் நடக்காத காரியம், ஆமாம்!

— அகில்

லெட்டும் ஊத்தப்பமும் ஆர்டர் கொடு...'' செல்வத்தின் காசில் நிதானமாகச் சாப்பிட்டுக் கொண்டே முணுமுணுத்தார் தொழிற்சங்கத் தலைவர் மோகன்தாஸ். 'நீ பொழைக்கத் தெரியாத கூமுட்டை போ...'

செல்வம் எரிச்சலானான். அவர் பின்னே போவதை நிறுத்திக் கொண்டான். கை காசைச் செலவு செய்து, 'நியாயம் வேண்டும், நியாயம் வேண்டும்' என்று போஸ்டர் அடித்து ஊர் முழுக்க ஒட்டினான்.

நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன.

வேண்டுமென்றே ஆட்சிக்குழுக் கூட்டத்தைக் கூட்டாமல் காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தார் டைரக்டர். சஸ்பென்ஷனை மட்டும் நீட்டித்துக் கொண்டேயிருந்தார்.

விமலாவின் தோடு, மூக்குத்தி, வளையல் என்று ஒவ்வொன்றாக கை நழுவிப் போய்க் கொண்டிருந்தன.

ஸ்கூல் ஃபீஸ் கட்ட முடியாமல் பிள்ளைகள் இருவரையும் கார்ப்பரேஷன் பள்ளிக்கு மாற்றி விட்டான். நானூறு ரூபாய் வாடகை வீட்டை விட்டு, நூற்று அம்பது ரூபாய் காலனிக்குக் குடி புகுந்தான். மருந்துக்கு ஏங்கிய அம்மாவைத் தொடர்ந்து இரும விட்டான்.

அவனது வற்புறுத்தலைத் தாங்காமல் தொழிற் சங்கம் ஒரு தர்ணாப் போராட்டத்தை நிர்வாகத்துக்கு எதிராக அறிவித்தது. ஆனால் உண்மையில் நிர்வாகத்தைப் பகைத்துக் கொள்ள யாருக்கும் விருப்பமில்லை. பத்துப் பேர் கூட கலந்து கொள்ளாமல் பிசுப் பிசுத்துப் போன போராட்டத்தை காரில் அமர்ந்தவாறே பார்த்து நகைத்து விட்டுப் போனார் டைரக்டர்.

செல்வம் மனம் நொந்து போனான். தனி மனிதனாக நின்று சாதித்துவிட முடியுமா என்று மனம் தளர்ந்த போது 'நெற்றிக்கண்' ஆசிரியர்தான் அவனுக்கு உற்சாகமும் தைரியமும் ஊட்டினார்.

செல்வம் பக்கமிருந்த நியாயத்தைப் புரிந்து கொண்டு விஞ்ஞானிகள் சங்கமும், ஆராய்ச்சி மாணவர்கள் சங்கமும் இணைந்து அவனுக்கு ஆதரவாக உண்ணாவிரதப் போராட்டம் நடத்திய போது, அதனை தலைப்புச் செய்தியாக வெளியிட்டு, தலையங்கமும் எழுதினார். வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் 'ஆராய்ச்சி நிலைய ஊழல்' என்று கட்டம் கட்டி எழுதினார்.

ஆனால் டைரக்டர் அரங்கநாதன் இதற்கெல்லாம் அயரவே இல்லை. மேலிடத்தில் அவருக்கு அத்தனை செல்வாக்கு, டெல்லி வரை! பெரிய சூட்கேஸ் கொடுத்துப் பதவிக்கு வந்தவராயிற்றே! எதிர்க்குரல் எழுப்பியதைப் பொருட்படுத்தாமல், ஏதேதோ சொல்லி செல்வத்தை மேலும் ஆறு மாதம் வரை சஸ்பென்ஷனில் வைக்க அனுமதி பெற்றுவிட்டார்.

நாட்கள் நகர்ந்து நகர்ந்து சஸ்பென்ஷன் காலம் ஒரு வருடத்தை நெருங்கிக் கொண்டிருந்தது.

உச்சக்கட்ட போராட்டமாகக் குடும்பத்துடன் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவதென்று முடிவு செய்தான் செல்வம். படுக்கையில் அம்மா, குழந்தைகள், மனைவி சகிதம் ஒரு நாள் உண்ணாவிரதம் நடத்தியும் காட்டினான். நிறைய ஜனங்கள் வேடிக்கைப் பார்த்துப் போனார்கள். நெற்றிக்கண் பெரிதாகச் செய்தி வெளியிட்டது. நிறைய விளம்பரம் கிடைத்தது.

ஆனால் பலன்? அது மட்டும் கிடைக்கவில்லை. செல்வம் வெறுத்துப் போனான்.

அடுத்தநாள் நேரே போய் டைரக்டரின் அறைக்குள் நுழைந்தான். அவர் பயந்து அரண்டு போய் எழுந்து நின்றார்.

"ஏய்! நீ.. நீ ஏன் இங்கே வந்தே? போ.... வெளியே போ..."

"போயிடறேன் சார். நீங்க ஒரு உதவி மட்டும் செய்யுங்க சார். சீக்கிரமா ஆட்சிக் குழுக் கூட்டத்தை நடத்துங்க சார்...."

"அது எனக்குத் தெரியும். நீ போ மேன் வெளியே...."

பியூன் வந்து வெளியே தள்ளிக் கொண்டு போனான்.

வாசலில் கார் நின்றது. துடைக்காமல் அழுக்கேறி, நிறமாறி ஆங்காங்கே உரசி பெயிண்ட் உதிர்ந்து அலங்கோலமாகப்பட்டது அவன் கண்ணுக்கு. எவ்வளவு நாளாகி விட்டது, அதில் அமர்ந்து அந்த ஸ்டியரிங்கைப் பிடித்து?... அவனுக்குள் ஏக்கம் பீரிட்டது. ஆசையாகத் தடவிப் பார்த்தான். கையில் கறுப்பாக ஒட்டியது. கதவைத் திறந்து உள்ளே நுழைந்து அமர்ந்து ஸ்டியரிங்கை இறுகப் பற்றினான். கண்கள் கலங்கி, துளிகள் மடியில்



"டாக்டர், இங்கே நான் என் காதுலே கார் ஓடறாப்லே சத்தம் வருதுன்னு புலம்பிக்கிட்டிருக்கேன். நிலைமை புரியாமே... நீங்க யாருக்கோ போன் போடறீங்களே....?"

"ரெண்டு நாளா என் மாமாவோட காரைக் காணோமாம்.. அவருக்குத்தான் போன் பண்றேன்....!"

— லெ.நா. சிவகுமார்.

விழுந்து தெறித்தன.

"ஏய் செல்வம், காரிலே என்ன பண்றே?" - புகையும் பீடியுடன் ஓடிவந்த டிரைவர் முருகேசன் விரட்டினான்.

அதற்கடுத்த நாளே, டைரக்டர் சென்ற கார் மரத்தில் மோதி விபத்து என்றும், காரின் பிரேக்கைக் கழற்றிவிட்டு சதி செய்தது சஸ்பெண்ட் ஆன டிரைவர் செல்வம்தான் என்றும் செய்தி பரவிய போது செல்வத்துக்கு அழுகையே வந்து விட்டது. இனிமேல் என்ன, அவனை நிரந்தரமாக வேலையிலிருந்து நீக்க, டைரக்டருக்கு நல்ல காரணமாகவே மாட்டி விட்டது! பொய் சாட்சி சொல்லத்தான் முருகேசன் தயாராகி நிற்பானே!

செல்வம் கொடுத்த மஞ்சள் கயிற்றை அணிந்து கொண்டு, செயினை அவனிடம் நீட்டினாள் விமலா. அக்கயிறு அவளுக்கு அழகாகத்தான் இருந்தது. ஆனால் அத்தோற்றம் அவனைச் சித்திரவதை செய்தது.

"வர்ற வெள்ளிக் கிழமை ஆட்சிக்குழுக் கூட்டம் நடக்கப் போகுதாம் விமலா...."

"அப்படியா?...."

"ஆமாம் விமலா. பார்லிமெண்ட் கூட்டத்துக்காக நம்ம எம்.பி. டெல்லியிலே இருக்கார். நமக்கு ஆதரவாப் பேசக் கூடிய விஞ்ஞானிகள் சங்கத் தலைவர் ஃபாரின் கான்ஃபரன்ஸுக்குப் போயிருக்கார். டெபுடி டைரக்டர் ஹார்ட் அட்டாக்கிலே மெடிக்கல் லீவிலே இருக்கார். நல்ல நேரம் பார்த்து டைரக்டர் கூட்டத்தைக் கூட்டியிருக்கார். கார் விபத்துக்குச் சதி செய்தேன்னு குற்றம் சாட்டி ரொம்ப ஈஸியா என்னை டிஸ்மிஸ் பண்ணிடுவார்."

"இது ஓரளவு நாம எதிர்பார்த்ததுதானேங்க...."

"எதிர்பார்த்ததுதான். அதனாலதான் எடிட்டர் சார் எனக்கு துபாயிலே ஒரு வேலைக்கு ஏற்பாடு செய்து கொடுத்திருக்கார். பாஸ்போர்ட், விசாவுக்கெல்லாம் ஏற்பாடு பண்ணியாச்சு. இந்த நகையை வித்து இருபதாயிரம் ரூபாயை டிராவல் ஏஜெண்டிடம் கொடுக்கணும்... மாசம் பத்தாயிரத்துக்கு மேலே சம்பளம் வருமாம்...."

"வேலை நீக்கம் மட்டுமில்லாம துபாய்க்கு நாடு கடத்தல் வேறயாக்கும்?" அந்தச் சூழ்நிலையிலும் அவளால் சிரிக்க முடிந்தது. "அங்கே போய் என்ன வேலை பார்க்கப் போறீங்க?"

அவன் அவளை நிமிர்ந்து பார்த்துச் சொன்னான் - "டிராக்டர் டிரைவர்!"

அவள் மீண்டும் சிரித்தாள். "அதைப் பேசாம இங்கேயே பார்த்திருந்தா தொல்லையே வந்திருக்காது.. அது சரி... இவ்வளவு நீளப் போராட்டத்துக்குப் பிறகு கடைசியிலே தோல்விதானே கிடைச்சுருக்கு?"

"இல்லை விமலா! டைரக்டரோட தவறுகளைக் கண்டுக்காம விட்டு, அவர் சொன்னபடி வளைஞ்சு கொடுத்து நடந்திருந்தாதான் எனக்கு அது தோல்வி. இவ்வளவு தூரம் அவரை எதிர்த்துத் தனிமனிதனாப் போராடியிருக்கேனே, அதுவே ஒரு பெரிய வெற்றிதான். இந்த யுத்தம் இத்தோட முடியலை விமலா. என்னை டிஸ்மிஸ் பண்றதை எதிர்த்து கோர்ட்டிலே கேஸ் போடவும் எடிட்டர் ஏற்பாடு செய்திட்டிருக்கார். நான் துபாய் போய் சம்பாதிக்கப் போறது நமக்காக மட்டுமில்லே, அந்தக் கேஸுக்கும் சேர்த்துத்தான். எனக்கு நம்பிக்கை இருக்கு. நிச்சயமா நியாயம் ஜெயிக்கும். நீ தான் அம்மாவையும் குழந்தைகளையும் பாத்துக்கணும்..."

"துபாயிலே எத்தனை வருட காண்ட்ராக்ட்?" ஒரு யுத்த வீரனாய்ப் பேசினான்.



"ஜோக் போட்டியில எனக்கு ஆயிரம் ரூபா பரிசு கிடைச்சிருக்கு!"

"அதுக்கு ஏன் வருத்தப்படற?"

"நான் கவிதையில்ல அனுப்பியிருந்தேன்!"

— கொங்கணாபுரம் வே. செந்தில்




* ALL ABOUT NURSING AND NURSES!

# GOKULAM

The monthly magazine for children

THE NEW-YEAR ISSUE!

96 PAGES FOR JUST Rs. 5/-

GOKULAM,
47, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Madras - 600 097

நாடகமாடுவது என்று தீர்மானித்த பிறகு வசனம் பேசுவது சாயாவுக்கு சுலபமாகவே இருந்தது. "இன்பா உங்களிடமிருந்து என்னைப் பிரிச்சு திரும்ப அழைச்சிக்கிட்டுப் போக நினைக்கலே; நம்மோட சேர்ந்துக்கத்தான் விரும்பறார்"என்றாள் ஃபோனில்.

மறுமுனையில் மௌனம்.

"குருஜி?"

"யோசிக்கறேன். ரெண்டு நாள் முன்னால் நான் ஆன்மிகப் போர்வையில் நான் அக்

# இருட்டு




# இரண்மனைகள்

## 22

கி. ராஜேந்திரன்

கிரமம் பண்றதா நிட்டினே..."

"மறுக்கலே, அது ஏமாற்றப்பட்டதிலே உடனடியாக ஏற்பட்ட நியாயமான தார்மிகக் கோபம். ஆனா இப்ப இவர் என்னை யோசிக்க வைச்சிருக்கார். யதார்த்தத்தைப் பார்க்கச் செய்திருக்கார்."



'நல்ல காரியம்.'

"இவர் உங்களைக் கைது பண்ணி அழைச் சிட்டுப் போறதாவே வைச்சுக்கிட்டாலும் உங்களுக்கு வலது கரமா இருந்து உதவினது யார்? இவரோட பெண்டாட்டி; போலீஸ்காரன் மனைவி! இது வெளியே தெரிந்தால் இவருக்கு அவமான மில்லையா? டிபார்ட்மெண்டுக்குத் தலை குனிவாகாதா?"

"அப்ரூவரா மாறினா கூட உனக்குக் குறைந்தபட்ச தண்டனை கிடைக்கும். போதை மருந்து கடத்தல்ன்றது மிகப் பெரிய குற்றம்."

"அதனால்தான் தயக்கம்; உங்களோட ஒத்துழைக்கவும் நினைக்கிறோம்."

மெல்லச் சிரித்தான் சூர்யாசுவாமி. அதில் வெற்றிப் பெருமிதம் தூக்கலாகத் தெரிந்தது.

"போலீஸ்காரன் பெண்டாட்டியை உங்க கள்ளக்கடத்தல் வியாபாரத்துக்கு தந்திரமாப் பயன்படுத்திக்கிட்டது உங்க சாமர்த்தியம். இப்ப போலீஸ்காரரையே வளைச்சுப்போடவும் ஒரு சந்தர்ப்பம்."

"எந்தக் குடுமியும் சும்மா ஆடாது. பதிலுக்கு என்ன எதிர்பார்க்கிறான்?"

"எத்தனையோ பேரை கவனிச்சுக் கறீங்க; இவருக்கும் அப்பப்ப ஒரு பிரீஃப் கேஸ் அனுப்பாமலா போயிடுவீங்க!"

"ஸ்விஸ் அகௌண்ட்ல கூட பணம் போடலாம். ஆனா அவன் தன்னை நிரூபிக்கணும். அதுக்குக் காலம் கனிய ணும்."

"ஏற்கெனவே கனிஞ்சிருக்கு.. உங்களுக் குக் கொஞ்ச நேரம் முன்னாலதான் ஸான் ரோக்கோன்னு ஒருத்தர் ஃபோன் பண்ணி னார்..."

"......."

"ஹலோ?"

"சொல்லு!"

"உங்களைப் போலவேதான் என்னை மிரட்டினார். 'உயிரோட ஊர் போய்ச் சேர்ற ஆசை இல்லையா? யாரோ வழி யோடு போறவனை இழுத்துக்கிட்டு வந்து கொஞ்சறியே? நம்ம தொழிலுக்கு இந்தச் சபலமெல்லாம் உதவாது. விஷயம் லீக் ஆச்சுன்னா ஆபத்து'ன்னு எச்சரித்தார். 'நீ யாரு? என்னைப் பற்றி உனக்கு என்ன தெரியும்'னேன். 'என் பார்வைலேர்ந்து எதுவும் தப்பாது. உன்னை, பென்ஜமினை, சூர்யாசுவாமியை எல்லாரையும் கவனிச் சுக்கிட்டுத்தான் இருக்கேன்'னார்... யாரு ஸார்

## அருள்வாக்கு



இன்றைக்கும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு நடக்கும் வேதபாடசாலைகள் மூடிப் போகாதபடியும், இவற்றில் மேலும் வித்யார்த்திகள் சேருமாறும் பண்ண வேண்டும். வித்யார்த்திகளுக்கும் அத்யக்ஷகர் (வாத்தியார்)களுக்கும் கணிசமான திரவிய சகாயம் பண்ணினால்தான் இந்தக் காரியம் நடக்கும். பிராம்மணனுக்கு ரொம்பவும் ஜாஸ்தியாக லௌகிக சௌகரியங்களையும், தன வஸதியையும் தரக் கூடாதுதான் என்றாலும், நல்ல ஸம்பாத்தியம் தரக்கூடிய பல தொழில்கள் அவர்களை வசீகரிக்கிற தற்காலத்தில், சிலராவது இப்படிப் பூரணமாக வேதத்தைக் கற்றுக் கொண்டு பிற்பாடு சொல்லிக் கொடுப்பது என்ற பிராம்மண ஸ்வதர்மத்தையே செய்ய வேண்டுமானால், அப்படிப் பட்டவர்கள் "இல்லை" என்று ஆகாத அளவுக்கு அவர்களுக்கு, வஸதி பண்ணித் தரத்தான் வேண்டும். ஆதியில் இல்லாத அநேக புதுப்புது சௌகரியங்களும், சுக சாதனங்களும் வந்து விட்ட இந்த நாளில், சிலரை மட்டும் பரம வைராகிகளாக இருந்து கொண்டு ஸ்வதர்மத்தைப் பண்ணுங்கள் என்று சொன்னால், வேதரக்ஷணம் என்பது நின்றே போய் விட வேண்டியதுதான். அதனால் வேதத்துக்கே தங்களை அர்ப்பணித்துக் கொள்ளும்படியாகச் சிலரைப் பண்ணும் போது, அவர்களுக்கு நாம் நன்றாக சம்மானம் செய்து, திரவிய சகாயம் நிறையக் கொடுக்கத்தான் வேண்டும். அவர்களுக்கு 'லக்ஷுரி' கூடாதாயினும், மற்றத் தொழில்கள் அவர்களை இழுத்துக் கொள்ளாத அளவுக்கு ஸௌகர்யம் பண்ணித் தரத்தான் வேண்டும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

அவர்? சூப்பர் பாஸா?"

"ஆமா, நம்மைப் போலவே இருபது இருபத்தைந்து பேர் அவருக்காக அண்டர் கிரவுண்ட்ல வேலை செய்யறது. சர்வதேச தொழில் வர்த்தக சாம்ராஜ்யம்."

"அடேயப்பா! அதான் அவ்வளவு அதட்டலா, அதாரிட்டியோட பேசினார்."

"இன்னும் என்ன?"

"என்னோட இருப்பவர் நீங்க நினைக்கிற மாதிரி இல்லே; என் கணவர்தான்; சி.பி.ஐ.- இன்டர்போல் அதிகாரி; நம்மிலே ஒருத்தர்'னேன். 'அப்படியா? அவனை நான் சந்திக்கணுமே'ன்னார். 'எங்க வரட்டும்'னேன். 'சூர்யாசுவாமிகிட்ட சொல்லு அழைச்சிட்டு வருவான்'னார். எதுக்கு ஸார்?"

"ஆளை எடைபோடத்தான் இருக்கும். ஒரு பார்வையில் நம்பலாமா கூடாதான்னு கண்டு பிடிச்சுடுவார். துரோகின்னு தோணிப் போச்சுன்னா அந்தக் கணமே சுட்டுத் தள்ளிடுவார். பிரேதத்தை அப்புறப்படுத்தற அசிங்கமான வேலை எனக்கு... பென்ஜமினுக்கு..."

"ஐயோ!"

"ஆனா அப்படியெல்லாம் உன் புருஷனுக்கு நேராது. நான்தான் இருக்கேனே. கவனிச்சுக்கறேன். அவனை லண்டனுக்குப் போய் காத்திருக்கச் சொல்லு!"

"லண்டன்ல எங்க?"

"ரஸ்ஸல் ஸ்குவேர்னு ஒரு அண்டர் கிரவுண்டு ஸ்டேஷன் இருக்கு. பாதாள ரயிலில் அங்க போய் படியேறி மேலே வீதிக்கு வந்தா, லெய்ஸெஸ்டர் ஹோட்டல் தென்படும். அதில அறை எடுத்து தங்கச் சொல்லு. என் ஃபோன் காலுக்குக் காத்திருக்கட்டும்.'

"ஓ.கே."

"அப்புறம் சாரதா... உன் புரோக்ராம்ல சின்ன மாறுதல்... நாளைக்கு நீ பாரிஸ் போறே, இல்லியா...?"

"ஆமாம்."

"அங்கேருந்து மூன்றாம் நாள் நீ விமானத்துல லண்டன் போறதுக்கு பதில், சன்னல் டிரெய்ன்ல போறே. பாரிஸ் ஹோட்டல்ல உன் அறையில் மேஜைமேல் முதல் வகுப்பு டிக்கெட் ரெடியா இருக்கும்."

"எதுக்கு ஸார் இந்த மாறுதல்?"

"ரெண்டு காரணம். முதலாவது லண்டன் விமான நிலையத்துல இப்ப கெடுபிடி அதிகமா இருக்கு. போதை மருந்து கடத்தல் விஷயத்துல ரொம்பத் தீவிரமா இருக்காங்க. பாரிஸ் நார்ட் ரயில் நிலையத்திலயும் லண்டன் வாட்டர்லூ ஸ்டேஷன்லயும் அப்படி இல்லே. சுலபமா பெட்டிகளைத் தள்ளிக்கிட்டுப் போயிடலாம். ரெண்டாவது காரணம், கடலுக்கு அடியில அமைஞ்சிருக்கிற சன்னல் வழியா ரயில் போறது. ஒரு புதிய அனுபவமா இருக்கும்."

இங்கிலீஷ் சானல் என்ற கடல் பகுதியை இப்படி கடலடி சுரங்கப் பாதை வழியே கடப்பதாலேயே அந்த ரயிலுக்கு 'சன்னல் டிரெய்ன்' என்று பெயர். கேள்விப்பட்டிருந்தாள். அதனால் ஆவலும் பரபரப்பும் அடைந்தாள். தான் அரங்கேற்றிய நாடகம் வெற்றி பெற்று விட்டது என்பதாலும் கர்வமான பூரிப்பு உண்டாயிற்று.

ஆனால் ஃபோனை வைத்து விட்டு இன்பாவைத் திரும்பி நோக்கியபோது, 'ஐயோ! இவர் தம்மைத்தாமே எப்பேற்பட்ட அபாயத்துக்கு உள்ளாக்கிக் கொள்கிறார்' என்ற நினைப்பு அடிவயிற்றில் பயத்தைக் கிளறி, இதயப் படபடப்பை டெர்பி குதிரைகளின் குளம்படி சத்தமாக்கியது.

கலவரத்தை அவள் கண்களில் கண்டும் காணாததுபோல் புன்னகையுடன் கட்டை விரல் உயர்த்தி "முதல் வெற்றி, முற்றிலும் வெற்றி"என்றான்.

"எரிமலை வாயிலே குதிக்கத் தயாராயிட்டு அருவில குளிக்கப் போற மாதிரி பேசறீங் களே"என்று அழுதாள்.

ஆறுதலாகத் தழுவினான். மெல்ல மெல்ல அவள் உடலில் ஆயிரம் பூக்களை மலரச் செய்தான்.

**பி**ரியா விடை பெற்று அவன் தன் ஓட்டல் அறைக்குத் திரும்பிய ஓரிரு நிமிஷங் களில் ஃபோன் ஒலித்தது.

''ஹலோ! இன்பா! கங்கிராட்ஸ்!'' என்றான் ஜேம்ஸ் பிளாக். "அது என்ன மாஜிக்? கொஞ்சம் கற்றுக் கொடேன். இத்தனை சுல பமா ஒரு பெண்ணை கொக்கிபோட்டு இழுக் கக் காதல் கடவுளால் கூட முடியாது! சொக் கிட்டாளே!"

''உன் பைனாகுலர்லேர்ந்து எதுவுமே தப்பாதா?"

''ரொம்ப இன்டரஸ்டிங் பகுதிகளை யெல்லாம் பார்க்க முடியலை. கண்ணியம் குறுக்கிட்டது. அது சரி, ஏதோ பாரதப் பண் பாடு, அது இதுன்னு பெருமை அடிச்சுக் கிட்டே?"

''அதிலே ஒண்ணும் தப்பில்லே, என் நடத்தையிலும் பழுதில்லே. இந்த சாரதா என் மனைவிதான்."

"என்னது!" வியப்பை விண்டு வைத்தான்.

"சுருக்கமாய் சொல்றேன், கேட்டுக்க"என்று விளக்கி, சூர்யாசுவாமியிடம் சாயா பேசிய நாடக வசனம் விவரித்து, லண்டனில் ஸான் ரோக்கோவை சந்திக்க வாய்ப்பிருப்பதையும் கூற,

"ஒண்டர் ஃபுல்"என்று சந்தோஷத் துள் ளலை குரலில் காட்டினான் ஜேம்ஸ். "பிராங்ஃபர்ட்- லண்டன் விமான டிக்கெட் டுக்கு ஏற்பாடு செய்துடறேன். சீஃபுக்கு இப் பவே ஃபோன் பண்ணறேன். அவர் திட் டங்களை அறிந்து சொல்றேன். லண்டன் ஃப்ளைட்டுக்கு முன் ஒரே ஒரு தடவை நாம் நேரில் சந்திக்க வேண்டியிருக்கும்''என்று தொடர்பு துண்டித்தான்.

**பா**ரிஸ். லா கார்டியா ஓட்டலில் சார தாவுக்காக அறை ரிஸர்வ் செய்யப்பட்டிருந்தது. சன்னல் ரயிலுக்கு முதல் வகுப்பு டிக்கெட் தயாராக இருந்தது. எடுத்து பத்திரப்படுத்திக் கொண்டாள்.

கிடைத்த வாய்ப்பை நழுவ விடாமல் ஒன் றரை நாளில் முடிந்த மட்டில் பாரிஸைச் சுற்றிப் பார்த்தான். குருஜி உபயத்தில் அவனி டம் பணம் தாராளமாக இருந்தது.



ஓய்வுபெற்றவர் : தயவுசெய்து யாரும் அழவேண்டாம்... கிராஜுவேட்டி வந்ததும் உங்கள் அனைவரின் கடனையும் சத்தியமாகத் தீர்த்து விடுகிறேன்!

-உ. ராஜாஜி

●●●●●●●●●●●●●●●●●●●●●●●

டாக்ஸியிலேயே வளைய வரலாம். ஆனால் அதைவிட 'ஸிடி ராமா'என்ற பெயரில் ஊர் சுற்றிக் காட்டிய சொகுசு பஸ்ஸை விரும்பி னான். இதர டூரிஸ்டுகளுடன் கலந்து கொள் வதில் ஒரு பாதுகாப்பு உணர்வு இருந்தது. விளக்க உரையும் கிடைத்தது. ஹெட்ஃபோன் மாட்டிக் கொண்டு பட்டன் தட்டினால் பார்க் கிற இடங்களின் வர்ணனை எட்டு மொழி களில் செவிகளில் ஒலித்தது. விரும்பிய மொழி யைத் தேர்ந்தெடுக்கலாம். தமாஷுக்கு ஜப் பானிய வர்ணனை கேட்டான். இரும்பவும் ஆங்கிலத்துக்குத் தாவினான். முக்கியமான இடங்களில் பஸ் நின்றது. இறங்கி, வழிகாட் டியையொட்டி நடந்தான்.

மாண்ட்மார்ட்ரே பகுதியில் குன்றின் உச்சி யில் பாரிஸின் மிகப் பழைய மாதா கோயில் களுள் ஒன்று, பன்னிரண்டாம் நூற்றாண்டில் அரை இருட்டுக்கும் இறையுணர்வுக்கும் தொடர்பு இருந்ததை இன்றைக்கும் பறை சாற்றிக் கொண்டு நின்றது. அதன் எதிரேயே குன்றின் உயரத்திலிருந்து பார்க்க, பாரிஸ் நகரம் நீண்டு பரந்து சூரிய ஒளியில் குளித்துக் கொண்டு ஜகஜ்ஜோதியாகக் காட்சியளித்தது. காலார நடந்தாலோ பிளாட்ஃபார ஓவியர்கள், சுற்றுலா பயணி விரும்பிக் கேட்கும் பாரிஸ் நகரின் எந்த ஒரு காட்சியையும் வண்ணத்தில் வரைந்து தந்தார்கள். அல்லது அந்த டூரிஸ்ட் டையே சில நிமிஷங்களில் படமாக்கிக் கொடுத் தார்கள். உலக நாடுகள் பலவற்றிலிருந்தும் ஓவியர்கள் ஒரு புனித யாத்திரை போல் இங்கு வருகிறார்கள் என்பதும் சில நாள் தங்கி, ஓவியங்கள் தீட்டி, கிடைத்த சன்மானம் பெற்று, திருப்தியுடன் திரும்புகிறார்கள் என் பதும் ஆச்சர்யமளித்தன. இப்படியும் ஒரு மகிமையா இந்த இடத்துக்கு!

ஒவ்வொரு இடத்திலும் 'இன்பா இப்போது என் அருகில் இருந்தால்'என்ற எண்ணத்தைத் தவிர்க்க முடியவில்லை. ஐஃபல் டவரை யொட்டி ஸீன் நதியின் படகுத் துறையில், பிரும்மாண்ட விசைப் படகு ஒரே சமயத்தில் நூறு பயணிகளை நாற்காலிகளில் வசதியாக உட்கார வைத்து அழைத்துப் போகத் தயா

ராயிருந்தது. டிக்கெட் வாங்கி இடம் பிடித்தாள். இரண்டு நிமிஷங்களுக்கு ஒரு பாலம் என்ற கணக்கில் அவற்றின் அடியில் புகுந்து சென்றது படகு. ஒவ்வொரு பாலத்துக்கும் ஒரு சரித்திரம், அந்தக் காலத்திய நூதன கலை அம்சம், அதற்கென்று ஓர் அலாதி அழகு. தலையை வலப்புறம், இடப்புறம் திருப்பினாலோ நதிக்கரையோரமாக வரலாற்றுச் சிறப்பு மிக்க எத்தனையோ கட்டடங்கள். அதோ நாட்டர்டாம் தேவாலயம், இதோ லூவர் மியூஸியம் இருக்கும் அரண்மனை, அங்கே நீதிமன்றம், இங்கே போலீஸ் தலைமையகம்...

மூன்றாம் நாள் அதிகாலையிலேயே டாக்ஸி பிடித்து நார்ட் ரயில் நிலையம் சென்றாள். விமான நிலையம் போலவே டிக்கெட் பார்த்து, பாஸ்போர்ட் பரிசோதித்து, ஒரு நீண்டதான காத்திருக்கும் கூடத்துக்கு அனுப்பினார்கள். சூர்யாகஸ்வாமி சொன்னது போலவே ஸெக்யூரிடி செக், கஸ்டம்ஸ் செக் இரண்டும் மிக எளிதாகக் கடக்க முடிந்தது. 'மக்களை நம்பிச் செயல்படுகிறார்கள். என்னைப்போல் நம்பிக்கைத் துரோகம் செய்பவர்கள் அதிகம் இருக்க மாட்டார்கள்.' டிராலி வைத்துத் தள்ளி வந்த பெட்டிகளை ஏற்ற போர்ட்டர் உதவினார்.

முற்றிலும் ஏஸி. வசதியாகச் சாய்ந்து அமர உயர்தர இருக்கைகள். பாரிஸை சீக்கிரமே பின்னால் விட்டுவிட்டு கிராமப்புறங்களினூடே செல்லும் போது பசுமை பாய் விரித்தது. இலவசமான காலை உணவு. ("இறைச்சி மட்டும் நீக்கி மற்றது கொடு") சூடான காப்பி கோப்பையில் சற்றும் தளும்பவில்லை! அப்படி ஆடாமல் அலுங்காமல் விரைந்தது ரயில். தண்டவாளத்தில் என்ன, வெண்ணெய் தடவி இருப்பார்களோ!

நூற்றுக்கணக்கான விஞ்ஞானிகள் திட்ட மிட்டு, பல்லாயிரக் கணக்கான ஊழியர்கள் பல்லாண்டுகள் பாடுபட்டு, பிரிட்டிஷ்– பிரெஞ்சு அரசாங்கங்களின் கூட்டுறவில், கடலின் அடிவாரத்துக்கும் கீழே, அமைக்கப் பட்ட பிரும்மாண்டமான குகைப்பாதையை ரயில் நெருங்கிக் கொண்டிருந்தது. 'கடலின் அடிவாரத்துக்கும் கீழே புகுந்து புறப்படப் போகிறோம்'என்ற எண்ணமே ஒரு திகைப்பை ஊட்டுவதாக இருந்தது சாயாவுக்கு.

லண்டனை சுற்றிப் பார்க்க வேண்டும் என்று கூடத் தோன்றவில்லை. வெளியே போயிருக்கும் போது ஃபோன் வந்து விட்டால்? இன்பா பத்தாவது மாடியில் 108வது அறையில் அடைந்து கிடந்தான். டி.வி. பார்த்து, நாவல் படித்து, எதிலும் மனம் நிலைக்காமல் சாயாவை நினைத்துத் தவித்தான். 'நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறோம்'என்ற குற்ற உணர்வில் நெளிந்தான். 'ஒருவேளை நம் தந்திரம் அம்பலமாகி, சூர்யாகஸ்வாமி ஃபோன் பண்ணாமலே இருந்து விடுவானோ? 'எப்போ அழைத்து வர?'என்று வசதி அறிய ஸான் ரோக்கோவுக்கு ஃபோன் செய்தாலும் போதுமே? நம் நாடகம் புரிந்து போகுமே! அதன்பிறகும் ஸான்ரோக்கோ என்னைப் பார்க்க ஆசைப்படலாம்! யார் கண்டது? ஆபத்தான பேர்வழி என்று கருதி என்னைத் தீர்த்துக் கட்டவேணும் வரச் சொல்லலாமில்லையா?'

கிட்டத்தட்ட ஆசை நிராசையானபோது ஃபோன் ஒலித்தது. "சூர்யாசாமி பேசறேன்."

"இன்பா ஹியர். இன்பசாகரன்."

"ரிட்ஸ் ஹோட்டல், இருபதாவது மாடி, ஸ்வீட் 222. டாக்ஸி பிடித்தால் அரை மணியில் போய்ச் சேரலாம். காக்க வைத்தால் ஸான் ரோக்கோவுக்கு பிடிக்காது."

''ஓகே.''ரிஸிவர் வைத்து பாய்ந்தோடி லிஃப்டில் இறங்கினான். தூங்கும் போது கூட பாண்ட் அணிந்து அழைப்புக்குத் தயாராய்க் காத்திருந்தவனாயிற்றே!

''டாக்ஸி!''

ரிட்ஸ். 222. அழைப்புமணி கிணுகிணுக்க, கதவு திறந்தவன் பெஞ்ஜமின். உடல் தடவி துப்பாக்கி உருவிக் கொண்டு அடுத்த அறைக்குள் அனுமதித்தான்.

பெரிய கூடத்தில் நடுநாயகமாக பிரும்மாண்ட சோபாவில் ஸான் ரோக்கோ! ஜான் கார்மிக் காண்பித்த பத்திரிகை கிளிப்பிங் படத்தில் காணப்பட்ட அதே ஸான் ரோக்கோ. ஆனால் இங்கே நேரில் பார்க்க என்னமோ. ஏதோ....

"என்னப்பா, இன்பா!"

தூக்கிவாரிப் போட்டது! ''ஆகா! எப்பேர்ப்பட்ட முட்டாள் நான்! இதை முன்னமேயே ஊகித்திருக்கலாமே"என்று வாய்விட்டுச் சொன்னான் இன்பா.

''வித்தை ஏதும் காட்டாதே! உனக்கு மேல் வித்தைக்காரன் நான்! உன் பெண்டாட்டி. சன்னல் ரயிலில் குண்டு சுமந்து வருகிறாள்"என்றான் ஸான்ரோக்கோவாக உருமாறியிருந்த சூர்யா சுவாமி.

இன்பா சில்லிட்டான்.

(தொடரும்)

●● பகிர்ந்து கொள்ளும் மகிழ்ச்சி இருமடங்காகும். பகிர்ந்து கொள்ளும் துன்பம் பாதியாகக் குறையும். — யாரோ

தொகுப்பு: கோ.பி. நாகராஜன்

# நெல்லை பெனிபிட் பண்ட் லிமிடெட்


26, ரங்கநாதன் தெரு, முதல் மாடி, தி.நகர், சென்னை-17.
4345178

***பரிசு! பரிசு! பரிசு!***
***14 கிராம் தங்க செயின்***

1. பிக்சட் டெபாசிட் — 21% + 3% போனஸ்
2. பென்ஷனர் டெபாசிட் — 22% + 3% போனஸ்
3. கல்வி உதவி டெபாசிட் — 24% + 3% போனஸ்

4. சுரேகா டெபாசிட் :

| செலுத்தும் தொகை ஒரு தரம் மட்டும் | காலம் | முதிர்வு தொகை |
|---|---|---|
| ரூ. 1000 | 23 வருடம் | ரூ. 1,00,000 |



5. பிறந்த நாள் டெபாசிட் :

| செலுத்தும் தொகை ஒரு முறை மட்டும் | வருடம் தோறும் பிறந்த நாள் அன்று | திருமணத்தின் போது கிடைக்கும் தொகை |
|---|---|---|
| ரூ. 4250 | ரூ. 1000 | ரூ. 5000 |

6. வாரிசுதாரர் டெபாசிட் :

| ஒருமுறை செலுத்தும் டெபாசிட் | காலம் | மாதாமாதம் பெறும் தொகை |
|---|---|---|
| ரூ. 10,000 | 180 மாதம் | ரூ. 7,500 |
| | 300 மாதம் | ரூ. 15,000 |

*வீடு நிலம் தங்க நகைபேரில் கடன் வழங்கப்படும்*

---

## ஸ்ரீ காஞ்சி பூஜ்ய ஸ்ரீ பரமாச்சார்யாள் அவர்கள் அத்வைத வித்யாசார்யாள் மஹாராஜா ஸாஹேப் பகவான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களின் வம்சத்தில் உதித்தவர்களே.

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால், 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு, தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 130 மாணாக்கர்கள் வேதாத்யாயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஓர் நாள் உணவளிக்க, உணவு வகையினை அனுசரித்து சுமார், முறையே ரூ. 500/-, ரூ. 750/- அல்லது ரூ. 1000/- ஆகிறது. இந்தத் தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 5000/-, ரூ. 7500/- அல்லது ரூ. 10,000/- மூலதனம் ஏற்படுத்தியோ, அவ்வப்போது தொகை அனுப்பியோ, ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம். நன்கொடை அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும் :

**அத்வைத வித்யாசார்யா மஹாராஜா ஸாஹேப்**
**ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,**
**42, காமாக்ஷி ஜோசியர் தெரு, கும்பகோணம் - 612 001.**

செக் (or) டிராப்ட் முதலியவைகளை A.V.M.S.G.D.P.S. ஸமிதி என்ற பெயருக்கு அனுப்பலாம்.

*****இந்த நன்கொடைக்கு 80-G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு*****

குறிப்பு : எம்மிடம் வேத, வைதிக, ப்ரயோக நூல்கள் யாவும் கிடைக்கும். Rs. 3/- க்கு தபால் தலை அனுப்பி எமது Catalogue ஐ பெற்றுக் கொள்ளலாம்.

# ஜனனம்

சிநேகிதா

"என்னங்க சிவா... அதிகாலைல வந்திருக்கீங்க... ஏதும் அவசர வேலையா எங்காவது போகப்போறீங்களா...?" வெகு இயல்பாய்க் கேட்டார் அந்த முதியோர் இல்லத் தலைவர் செண்பகராமன்.

"ஆமாம் ஸார்.... என் மனைவிக்கு தலைப் பிரசவம்... டாக்டர் குறிப்பிட்ட நாள் இன்னைக்குத்தான். அதான் மாமனார் வீட்டுக்குப் புறப்பட்டுக்கிட்டு இருக்கேன்... நார்மல் டெலிவரியா இருக்கணும்னு மனசு கிடந்து அடிச்சுக்குது ஸார்..."என்றான் சிவா.

"எல்லாம் நல்லபடியா நடக்கும்... ஆண்டவன் மேலே பாரத்தைப் போட்டுட்டுக் கவலையை விடுங்க..." கனிவாய்ச் சொன்னார்.

எழுந்து பேண்ட் பாக்கட்டில் கை விட்டு, "இந்த மாசம் கொஞ்சம் தாமதமாயிட்டுது..."என்றபடி அவசர அவசரமாய் பணத்தை எண்ணினான்.

"அதனால என்ன..." என்று நெஞ்சை வருடும் புன்னகையைச் சிந்தினார் செண்பகராமன்.

"அப்பா எப்படி இருக்காரு... ஏதும் பிராப்ளமில்லையே..."என்று போக வேண்டிய அவசரத்தில் கேட்டான்.

"ம்.... நல்லா இருக்காரு... ஒரு பத்து நிமிஷம் இருந்து உங்கப்பாவைப் பாத்திட்டுப் போங்களேன்..."

"ஸாரி ஸார்... எனக்கு இப்ப அதுக்கெல்லாம் நேரமில்லை... ரேணுகா இப்ப பிரசவ வேதனையிலே துடிக்க ஆரம்பிச்சிருப்பா... நான் உடனே போகணும்...!"என்றபடியே எழுந்தான்.

"நல்லது... கடவுளின் அருள் எப்பவும் இருக்கும்!"என்றபடி கைகளைக் குவித்து அவனுக்கு விடை தந்தார் செண்பகராமன்.

கிடைத்த பஸ்ஸில் ஏறி, கிடைத்த இடத்தில் அமர்ந்து கொண்டான்.

அவன் மனம் முழுவதும் ரேணுகாவே வியாப்பித்திருந்தாள். ரேணுகா அவனுக்குத் தூரத்துச் சொந்தம்தான். சொந்தத்தில் பெண் எடுத்தால்தான் குடும்பத்தைப் பொறுப்பாய்க் கவனித்துக் கொள்வான் என்று கருணாகரன் கணக்குப் போட்டார்.

அவருடைய கணக்கைப் பொய்த்துப் போகச் செய்து விட்டாள் ரேணுகா.

ரேணுகாவுக்குக் கடலளவு ஆசைகள். கல்யாணமான புதிதில் புதுமணத் தம்பதிகள் என்று அவரும் கண்டு கொள்ளாமல்தான் இருந்தார்.

தினசரி தேவையில்லாமல் ஷாப்பிங் செல்வதையும் தேவைக்கதிகமாக ஆடம்பரச் செலவுகள் செய்வதையும் அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அவருடைய சின்னச் சின்ன உபதேசங்களைக் கூட அவளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

மனைவியின் மீது ஏற்பட்ட அதீத கவர்ச்சியின் விளைவால் மனைவி சொல்லே மந்திரம் என்று நினைத்தான் சிவா.

சின்னச் சின்ன பிரச்னைகள் விஸ்வரூபம் எடுத்தன. 'வயசானாலே இப்படித்தான் அடுத்த தலைமுறையினரை அனுசரித்துப் போகத் தெரியாது' என்ற குற்றச்சாட்டு கருணாகரனின் மீது சுமத்தப்பட்டது.

மனம் கசந்து, குடும்பத்தில் வாழ்ந்து கொண்டிருப்பதைவிட காப்பகமே மேல் என்று நினைத்தார் கருணாகரன். 'நல்ல வேளை, கற்பகம் இந்தக் கொடுமையெல்லாம் பார்க்க வேணாம்னுதான் முன்பே போய்ச் சேர்ந்து விட்டாள்'என்று இறந்து போன தமது மனைவியைப் பற்றி நினைத்து பெருமூச்சு விட்டார்.

பஸ்ஸின் டிரைவர் அநியாயத்திற்கு மெதுவாகச் சென்றார். 'ச்சே! போயும் போயும் இந்த பஸ்ல ஏறினேனே' என்று முணுமுணுத்துக் கொண்டான் சிவா. அவன் மனது கிடந்து அடித்துக் கொண்டது. 'ஆண்டவா... என் மனைவிக்கும் குழந்தைக்கும் எத்தகைய கஷ்டமும் வராமல் காப்பாத்து...' மனம் ஒவ்வொரு துடிப்பிலும் இறைவனைத்தான் வேண்டிக் கொண்டது.

பஸ் பல இடங்களில் நின்ற போதும் ஒரு சிங்கிள் டீ கூட குடிக்க வேண்டும் என்ற உணர்வற்ற நிலையில் தவிப்புடன் இருக்கையில் அமர்ந்திருந்தான்.

பஸ்ஸை விட்டு இறங்கியதும், உறுமிக் கொண்டு காத்திருந்த ஆட்டோவில் தாவி ஏறினான். ஆஸ்பத்திரி நோக்கி விரைந்தான்.

மருத்துவமனை வாசலில் காத்திருந்த



அவனுடைய மாமனார் மகாலிங்கம், "வாங்க மாப்பிளே... உங்களுக்கு மகன் பிறந்திருக்கான்... எனக்குப் பேரன் பிறந்திருக்கான்... நான் தாத்தாவாயிட்டேன்"என்று உற்சாகக் குரல் தந்தார்.

"ரேணுகா எப்படி மாமா இருக்கா... சுகப் பிரசவம்தானே... ஒண்ணும் சிரமமில்லையே," படபடப்பாய்க் கேட்டான்.

"அதெல்லாம் ஒண்ணும் சிரமமில்லே மாப்பிளே... எல்லாம் சுகப் பிரசவம்தான். போய் ரேணுகாவையும் குழந்தையையும் பாருங்க மாப்பிளே..."என்று அறைக்குள் அனுப்பி வைத்தார்.

இவன் உள்ளே நுழைந்ததும் அறைக்குள் இருந்த பெண்கள் நாசூக்காய் வெளியேறினார்கள்.

ரேணுகாவின் முகம் மலர்ந்தது. குழந்தையை ஆசை பெருக்கெடுக்கப் பார்த்தான். மனைவியின் தலைமாட்டில் அமர்ந்து அவள் தலையை ஆதரவுடன் தடவினான். அவளுடைய கையும் அவனுடைய கையும் ஒன்றாய் இணைந்து கிடந்தன. விழிகளே ஆயிரம் ஆயிரமாய் விசாரித்துக் கொண்டன.

தட்டிவிட்டு, அறைக்கதவு திறந்து உள்ளே வந்தார் ராமசாமி. அவர்களுக்குத் தூரத்து உறவு. கையில் பிளாஸ்க் இருந்தது. கண்ணாடி தம்ளரில் ஊற்றி, "பஸ்ல வந்தது களைப்பா இருக்கும் சிவா, காப்பி சாப்பிடு"என்று உபசரித்தார்.

"எப்படி மாமா இருக்கீங்க?"என்றான்.

"எம்பொழப்பு எப்படியோ ஓடுதுடா... புள்ளையா, குட்டியா ஒண்டிக்கட்டை... அங்கங்க பத்து நாள்னு தங்கி காலத்தை ஓட்டிடுறேன்..." அவர் முகத்தில் வருத்தம் இருந்தது.

ஆனால் சட்டென மனசை மாற்றிக் கொண்டு உற்சாகக் குரலில் சொன்னார், "உம் மகன் யாருக்கும் அதிகம் சிரமம் கொடுக்காம சட்டுன்னு பொறந்திட்டான்... உன்ன மாதிரியில்லாம..."

"என்ன மாமா சொல்றீங்க...?"

"ஆமாண்டா... நீ பொறந்தப்ப... எல்லாருக்கும் எவ்வளவு கஷ்டமாப் போயுட்டுது தெரியுமா... உங்கப்பன் மருந்து வாங்கக் கடை கடையா அலைஞ்சான்... நீ முழுசாப் பிறந்து வர்றத்துக்குள்ளே தவியா தவிச்சிப் போய்டான்ப்பா... போய் உங்கப்பன்ட்ட சொல்லு... 'அப்பா உன் பேரன், நான் உனக்குக் கஷ்டம் கொடுத்த மாதிரி கொடுக்காம, சமத்தா பொறந்துட்டான்'னு..." என்று சொல்லி வெகுளியாகச் சிரித்தார்.

கன்னத்தில் அறையப்பட்டது மாதிரி உறைந்து போய் அமர்ந்திருந்தான் சிவா.

# இருட்டுக்குள்ளே...



இருட்டுக்குள்
என்னென்னமோ நடக்கிறது!
பூமிக்குள்
புதைந்திருக்கும் வித்து
புத்துயிர் பெறுகிறது!

ஆழ்க்கடலின் உள்ளே
ஆயிரம் அற்புதங்கள்
அவதாரம் எடுக்கின்றன!

அண்டத்தைக் காக்கும்
இருட்டில்தான்
விடியலின் விலாசம்
ரகசியமாய் எழுதப்படுகிறது!

முட்டைக்குள்ளே
முழு இருட்டடைப்பில்
'உயிர்த்தெழுதல்' நடக்கிறது!

இருட்டுக்குள்தான்
மனச்சாட்சியின் வாசல்
திறந்து கொள்கிறது

என்றாலும் -
மனதுக்குள் இருக்கும்
இருளை எல்லாம்
வெளிச்சமாக்கி
வீசுபவன் எவனோ...
அவனே... மகாமனிதன்!

- கருமலைப்பழம் நீ...

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

# சாஸ்தா
## கிரைண்டர்

**புத்தாண்டு சலுகை**

ரூ. **1000**


**மிச்சப்படுத்துங்கள்**

உங்கள் **பழைய** கிரைண்டரை எந்தகம்பெனி, மாடலாயிருந்தாலும் ஓடினாலும், ஓடாவிட்டாலும் மோட்டாருடன் கொடுத்து புத்தம் புதிய **சாஸ்தா** கிரைண்டரை எடுத்துச்செல்லுங்கள்

**சாஸ்தா**

**- நல்ல கிரைண்டர்**

*டில்ட்டிங், டேபிள் டாப், ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் மாடல்களில் கிடைக்கிறது.*



**3 வருட உத்திரவாதம்**

**AVE F230 ஹெவி டியூட்டி மோட்டார் பொருத்தப்பட்டது**

தயாரிப்பாளர்கள்

**ராஜா ஹோம் அப்ளையன்சஸ் லிமிடெட்**

430, கண்ணுசாமி கவுண்டர் தெரு, ரத்தினபுரி, கோவை-27. போன் & ஃபேக்ஸ் : 532133

*சாஸ்தா கிரைண்டர் கிடைக்கும் இடம்*

**எல்.ஆர்.சுவாமி கல்யாண மண்டபம்**
83, உஸ்மான் ரோடு, தி.நகர்.
(பஸ் ஸ்டாண்ட் அருகில்), சென்னை - 17.

**ராஜா ஹோம் அப்ளையன்சஸ் லிமிடெட்**
181, வடக்கு உஸ்மான் ரோடு, தி.நகர்.
சென்னை - 17 ☎ 8252529

Maadhyam 96/1042

REGISTERED NO. M. 4382
Registered as Newspaper in Sri Lanka

